# மூன்று உலகங்களை
# வகைப்படுத்தும்
# தலைவர் மாஓவின் தத்துவம்
# மார்க்சிஸம் -
# லெனினிஸத்திற்கு
# ஒரு மகத்தான பங்களிப்பு

*Universal Trades*
196, SIR PONRAMANATHAN ROAD
THIRUNELVELY
JAFFNA

தலெ

ஒரு

மே

# மூன்று உலகங்களை வகைப்படுத்தும் தலைவர் மாஓவின் தத்துவம் மார்க்ஸிஸம் - லெனினிஸத்திற்கு ஒரு மகத்தான பங்களிப்பு

மக்கள் தினசரி ஆசிரிய குழு
( 1977 நவம்பர் )

போராளி வெளியீடு - 2.

முதற் பதிப்பு: நவம்பர் 78

## பதிப்பாளர் குறிப்பு

மூன்று உலகங்களை வகைப்படுத்தும் தலைவர் மாஓவின் தத்துவம் மார்க்ஸிஸம் - லெனினிஸத்திற்கு ஒரு மகத்தான பங்களிப்பு என்ற இக் கட்டுரை பீக்கிங் அந்நிய மொழிகள் அச்சகத்தினரால் 1977 நவம்பரில் வெளியிடப்பட்ட ஆங்கிலப் பதிப்பில் இருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது.

விலை: ரூபா 3-00

அச்சுப் பதிப்பு: நாவலன் பதிப்பகம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# பதிப்புரை

"மூன்று உலகங்களை வகைப்படுத்தும் தலைவர் மாஓ வின் தத்துவம் மார்க்ஸிஸம்-லெனினிஸத்திற்கு ஒரு மகத் தான பங்களிப்பு'' என்ற கட்டுரையை சீன "மக்கள் தின சரி'' ஆசிரியர்குழு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வெளி யிட்டிருந்தது. இக் கட்டுரையின் தமிழாக்கத்தை "போராளி'' வெளியீடாக நாம் நூலுருவில் கொண்டு வருகின்றோம். இது இன்றைய வரலாற்றுத் தேவையோடு ஒட்டிய ஓர் வெளியீடாகும்.

அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தினதும், அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகள் மக்களினதும் மகத்தான ஆசிரிய ரும், தலைவருமான தலைவர் மாஓசேதுங் சர்வதேச வர்க்கப் போராட்ட அனுபவங்களை வரலாற்று ரீதியாகவும், பூகோள ரீதியாகவும், சர்வாம்சங்களையும் தழுவி ஆராய்ந்து வந்த டைந்த முடிவுகளே மூன்று உலகங்களை வகைப்படுத்தும் தத்துவமாகும். இது நிகழ்கால உலக நிலைமையை சரியாகப் படம்பிடித்துக் காட்டுவதுடன் யதார்த்த பூர்வமானதாகவும் விளங்குகிறது. இது மார்க்ஸிஸம் - லெனினிஸத்திற்கு மகத் தான பங்களிப்பு மட்டுமல்லாமல் உலகப் புரட்சிக்கான யுத் தத்தந்திரத்திட்டமாகவும் திகழுகின்றது.

இந்த மூன்று உலகத் தத்துவத்திற்கு களங்கம் கற்பிப் பதில் தற்போது இருசாரார் ஈடுபட்டுள்ளனர். ஒரு பகுதியி னர் திரிபுவாதிகள். மறு பகுதியினர் திரிபுவாதிகளுக்கு உத வும் வரட்டு வாதிகள். இந்த இரு பகுதியினரும் மார்க்ஸி

ஸம் பற்றி ஒரு நிலையியல் கண்ணோட்டத்தை எடுத்துள்ள துடன் சர்வதேச நிலைமைபற்றி ஆராய்வதில் இயங்கியல் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தைக் கைவிடுகிறார் கள். இதுவே இவர்களின் தவறான விமர்சனங்களுக்கு அடிப் படைக் காரணங்களாகும்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்சார வேலைபற்றிய தேசிய மகாநாட்டு உரையில் தோழர் மாஓசேதுங் அவர் கள் 1957-ம் ஆண்டிலேயே பின்வருமாறு குறிப்பிடுகின் றார். வரட்டுவாதம், திரிபுவாதம் இரண்டும் மார்க்ஸிஸத்திற்கு விரோதமானவை. மார்க்ஸிஸம் நிச்சயம் முன்னேறி வளரும். நடைமுறை வளர்ச்சியுடன் நிச்சயம் அதுவும் வளரும். அது முன்னேறாமல் தேங்கி நிற்க முடியாது. அது ஸ்தம்பித்து மாறா நிலையில் நின்றால் அது உயிரற்றதாகிவிடும். இருந்தும் மார்க் ஸிஸத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அத்துமீறக்கூடாது அத்து மீறினால் தவறுகள் இழைக்கப்படும். ஒரு நிலையியல் கண்ணோட் டத்தில் இருந்து மார்க்ஸிஸத்தை அணுகுவதும், அதை ஏதும் விறைப்பான ஒன்றாகக் கருதுவதும் வரட்டுவாதமாகும், மார்க்ஸ் ஸிஸத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை நிராகரித்தால், அதன் சர்வ வியாபக உண்மையை நிராகரித்தால் அது திரிபுவாதம் ஆகும். திரிபுவாதம் என்பது பூர்ஷுவா வர்க்க சித்தாந்தத்தின் ஒரு வடிவம்.'' இது வரட்டுவாதிகள், திரிபுவாதிகள் பற்றிய வரைவிலக்கணமாகவும், மூன்றுலகங்கள் பற்றிய விஞ்ஞான பூர்வமான மார்க்ஸிஸ தத்துவத்தை தவறான நிலைப் பாட் டில் இருந்து விமர்சிப்பவர்களை இனங்கண்டுகொள்ள உதவும் மார்க்ஸிஸக் கணிப்பீடாகவும் விளங்குகிறது.

திரிபுவாதிகளின் நிலைப்பாட்டை எவரும் இலகுவில் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் மார்க்ஸிஸம்-லெனினி ஸத்திற்கும், அக்டோபர் புரட்சிக்கும் துரோகம் இழைத்த முதலாளித்துவ பாதையாளராவர். அதோடு அவர்கள் பாட் டாளிவர்க்க சர்வாதிகாரத்தை பூர்ஷுவா வர்க்க சர்வாதி காரமாக மாற்றி சோஷலிஸ சோவியத் யூனியனை சமூக-ஏகா திபத்தியமாக சீரழித்த, சோவியத் திரிபுவாதிகளால் வழி நடத்தப்படுகின்றவர்களாவர். இவர்கள் இதைவிட வேறாக

இருக்க முடியாது. ஆனால் திரிபுவாதத்தை எதிர்த்துப் போரா டிய புரட்சிவாதிகள் தாங்கள்தான் என தம்மைச் சித்தரிக் கும் வரட்டுவாதிகளின் நிலைதான் மக்கள் மத்தியில் குழப் பம் விளைவிப்பதாகும். ''மார்க்ஸிஸம் நிச்சயம் முன்னேறி வள ரும். நடைமுறை வளர்ச்சியுடன் நிச்சயம் அதுவும் வளரும், அது முன்னேறுமல் தேங்கி நிற்க முடியாது'' என்ற மார்க்ஸிஸத் தின் இயங்கியலை மறுப்பதில் இந்த இரு பகுதியினரும் ஒரே நிலையையே எடுக்கிறுர்கள்.

லெனினிஸத்திற்குத் துரோகமிழைத்த திரிபுவாதிகள் லெனின் காலத்துடன் மார்க்ஸிஸத்தின் வளர்ச்சி முற்றுப் பெற்றுவிட்டதாகப் பாசாங்கு செய்கின்றுர்கள். வரட்டு வாதி கள் ஸ்டாலின் காலத்துடன் மார்க்ஸிஸம் ஸ்தம்பித்து விட் டதாகக் கருதுகிறுர்கள். இந்த இரு பகுதியினரும் தோழர் மாஓ சே துங் பாட்டாளிவர்க்க உலகப் புரட்சிக்கும், மார்க் ஸிஸம்-லெனினிஸத்திற்கும், கம்யூனிஸ இலட்சியத்திற்கும் அளித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகத்தான பங்களிப்பை அங்கீகரிக்க மறுப்பதில் ஒன்றுகவே இருக்கிறுர் கள். இது மார்க்ஸிஸம் பற்றி ஒரு நிலையியல் கண்ணேட்ட மாகும். இதன்மூலம் இவர்கள் ''வரட்டுவாதம், திரிபுவாதம் இரண்டும் மார்க்ஸிஸத்திற்கு விரோதமானவை'' என்ற தலைவர் மாஓவின் கூற்றுக்கு சிறந்த உதாரணமாக விளங்குகிறுர்கள்.

இரண்டாவதாக, கடந்த 25 ஆண்டுகளுக்கிடையில் உலக நிலைமையை சிறப்பாக சோவியத் யூனியனில் குருஷ்சேவ்-பிரஸ்நேவ் திரிபுவாத துரோகிகளால் ஏற்படுத்தப்பட்ட பாரிய மாற்றம், அதன் உலகளாவிய விளைவுகள், அமெரிக்க ஏகாதி பத்திய ஆக்கிரமிப்பு யுத்தக் கொள்கைகளுக்கு உலகப் புரட் சிகர மக்களால் கொடுக்கப்பட்ட பாரிய அடிகள், அதனல் அமெரிக்கா அடைந்த பாதிப்பும், உலக நிலைமையில் ஏற்பட்ட மாற்றமும், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களும், நாடுகளும் உலக விவகாரங்களில் தினந் தினம் வகிக்கும் பாத்திரத்தின் அதிகரித்துவரும் முக்கியத்துவம் ஆகியவற்றை ஆராய்வதில், அதன் வளர்ச்சிப்போக்கைக் கணிப்பதில் ஓர் இயங்கியல் கண்ணேட்டத்தை எடுப்பதற்

குப் பதிலாக நிலையியல் கண்ணோட்டத்தை எடுப்பதும் இவர்களின் தவறான நிலைப்பாட்டுக்கு இன்னும் ஓர் காரணமாகும்.

மூன்றாவதாக, ஏகாதிபத்தியத்தினதும் பாட்டாளி வர்க்க உலகப் புரட்சியினதும் காலகட்டமான இன்றைய கால கட்டத்தில் யுத்தத்திற்கும் புரட்சிக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்து, அந்த அனுபவத்தின் அடிப்படையில் நடைமுறைச் சாத்தியமான உலகம் பரந்த ஐக்கிய முன்னணிக்கான கொள்கையை நடைமுறையில் கையாள்வதை எதிர்ப்பதிலும் இந்த இருபகுதியினரும் ஒரே பாதையையே எடுக்கின்றார்கள்.

எமது அணி, எமது நண்பர்கள், எமது எதிரிகள் என சக்திகளை மூன்றாக வகைப்படுத்தி, எதிரிகளைத் தனிமைப் படுத்தி, எதிரிகளை ஒவ்வொருவராக தோற்கடிக்க, நேச அணியில் பரந்துபட்ட பிரிவுகளை ஐக்கியப்படுத்துவதும்; எதிரிகள் மத்தியிலான முரண்பாடுகளை சரியாகக் கையாண்டு ஆபத்தான எதிரியை முதலில் தனிமைப்படுத்தித் தாக்குவதுமான, தலைவர் மாஓவின் வெற்றிகரமான யுத்த தந்திரோபாயத் திட்டத்தை அவதூறு செய்வதில் வரட்டுத்தத்துவ வாதிகள், எதிரிகள் அனைவரையும் ஒரே முறையில் எதிர்க்கும் ட்ரொஸ்கியவாத எதிர்-புரட்சி நிலைப்பாட்டை எடுக்கிறார்கள். இது புரட்சிக்குத் துரோகமிழைப்பதும் எதிரிகளுக்கு உதவுவதுமான செயலாகும்.

**''யுத்தம் புரட்சியைத் தூண்டும், புரட்சி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும்.''** தலைவர் மாஓவின் இந்தக் கூற்று கடந்த இரண்டு உலக மகா யுத்த காலகட்டங்களின் அனுபவங்கள் இல்லையா? இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னால் கட்டவிழ்த்து விடப்பட்ட அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தங்கள் புரட்சிகர மக்கள் யுத்தங்களால் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லையா? தலைவர் மாஓ யுத்தமும் அதுபற்றி எடுக்கவேண்டிய கண்ணோட்டத்தையும் ''மக்கள் மத்தியில் முரண்பாடுகளை சரியாகக் கையாள்வது பற்றி'' என்ற அவரது புகழ்மிக்க உரையில் 1957-ம் ஆண்

டிலேயே பின்வருமாறு தொகுத்துக் கூறினுர். ''இப்பொழுது பல்வேறு நாட்டு மக்களும் மூன்ருவது உலக மகா யுத்தம் வெடிக்குமா? இல்லேயா? என்பது பற்றி விவாதிக்கிருர்கள். இந்தப் பிரச்சினையில்கூட நாம் தார்மீக ரீதியில் தயாராயிருந்து சற்று ஆராய வேண்டும். நாம் சமாதானத்தில் அழுத்தமாக நிற்கிறேம். யுத்தத்தை எதிர்க்கிறேம். ஆனுல் ஏகாதிபத்தியவாதிகள் யுத்தத்தை கட்டவிழ்த்து விடுவதில் பிடிவாதமாக நின்ருல் நாமும் அதற்கு அஞ்சமாட்டோம். இந்தப் பிரச்சினையில் நமது மனுேபாவம், இதர எந்தக் ''குழப்பத்திலும்'' நாம் கொள்ளும் அதே மனுேபாவமாகும். முதலாவது நாம் அதை எதிர்க்கிறேம். இரண்டாவது, நாம் அதற்கு அஞ்சவில்லே. முதலாவது உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து. 20 கோடி சனத்தொகையுடைய சோவியத் யூனியன் பிறந்தது. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின் மொத்தம் 90 கோடி சனத்தொகையுடைய ஒரு சோஷலிஸ முகாம் தோன்றியது. ஏகாபத்தியவாதிகள் மூன்ருவது உலக மகா யுத்தத்தை கட்டவிழ்த்து விடுவதில் அழுங்குப் பிடியாய் நின்ருல், மேலும் பல பத்துக்கோடி மககள் சோஷலிஸத்துக்கு மாறுவர். ஏகாதிபத்திய வாதிகளுக்கு அதிக இடம் இருக்காது என்பது நிச்சயம். ஏகாதிபத்திய அமைப்பு முழுவதும் தகர்ந்து போவதுகூட சாத்தியம்.'' இது தலேவர் மாஓவின் உலகப்புரட்சிக்கான நடைமுறைச் சாத்தியமான யுத்த தந்திரோபாயத் திட்டத்தை தெளிவாக எடுத்துக்காட்டவில்லேயா? உலக யுத்தத்தின் மிக அபாயகரமான தோற்றுவாயாக இருக்கும் சோவியத் சமூக-ஏகாதிபத்தியவாதிகள் அல்லது அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் இதைக்கண்டு அச்சமடையாமல் வேறு என்னசெய்வர். தமது மேலாதிக்க யுத்த ஆக்கிரமிப்புக் கொள்கைக்கும், தமது துரோகத்திற்கும் முடிவு ஏற்படும் என்பதால் தான் சோவியத் சமூக-ஏகாதிபத்தியவாதிகள் மூன்ருவது உலகம். இரண்டாவது உலக நாடுகள் மக்களோடு ஐக்கியத்துக்கான பரந்த முன்னணிக்கான கொள்கையை நடைமுறைப்படுத்துவதைக் கண்டு அஞ்சுவதுடன் மூன்றுலகக் கொள்கையைத் தாக்கி வசைபாடுகிருர்கள். வாயளவிலான வர்க்கப் போராட்டம் பற்றிப் பசப்பும் வரட்டுவாதிகளுக்கு இது வர்க்கப் போராட்டம் சம்பந்தப்

பட்டதாக தெரியாததுதான் பெரும் வியப்புக்குரிய விஷய மாகும்.

தலைவர் மாஓ மூன்று உலகங்களை வகைப்படுத்தும்போது ''நாம் மூன்றும் உலகமாகத் திகழுகிறோம்'' என்று அழுத்தம் கொடுப்பது முக்கியமான அம்சம் ஒன்றை தெளிவுபடுத்து கின்றது. 85 கோடி சனத்தொகையைக் கொண்ட சீன தேசம் மூன்றுவது உலகநாடு என்ற உண்மையை தெளிவுபடுத்தி மூன் ருவது உலக நாடுகளுக்கும் மக்களுக்கும் நம்பிக்கை அளிப்பது மட்டுமல்ல, சோஷலிஸ நாடுகள் தமது இலட்சியத்தாலும், அடைய இருக்கும் இலக்காலும், எதிர்நோக்கும் பொது எதிரி யைப் பொறுத்தும் மூன்ருவது உலக நாடுகளுக்கும் அவைக்கும் இடையில் உள்ள பிரிக்க முடியாத உறவையும் ஒருமைப் பாட்டையும் இதன் மூலம் அவர் பிரகடனப்படுத்துகிருர். இது சர்வதேசப் பாட்டாளி வர்க்கம், சோஷலிஸ நாடுகள், அடக்கியொடுக்கப்பட்ட நர்டுகளின் மக்கள் ஆகியவற்றுக் கிடையிலான உறவையும் சரியாக நெறிப்படுத்துகின்றது.

இது, சோஷலிஸ நாடுகளின் அந்தஸ்தைக் குறைப்ப தாக அல்லது சோஷலிஸ அமைப்புக்கும் முதலாளித்துவ அமைப்புக்கும் இடையிலான பாகுபாட்டை, போராட்டத்தை கைவிடுவதாக சிலருக்குப் படுகிறது. இதனுல் மாசுப டாத தமது சோஷலிஸ தனித்துவத்தைப் பாதுகாக்க, மூன் ருவது உலக நாடுகளதும், அணிசேரா அமைப்பினதும் ஐக் கியத்தைப் பிளவு படுத்தும்-''முற்போக்கு'' ''பிற்போக்கு'' பூச்சாண்டி காட்டும் சோவியத் சமூக-ஏகாதிபத்தியவாதிக ளின் சதிக்கு தம்மை அறியாமலே இவர்கள் உதவுகிருர்கள்.

மூன்று உலக தத்துவத்திற்கெதிராக வரட்டுவாதிகள் என்னதான் வெற்று விமர்சனங்களை முன்வைத்தாலும் சரி, சோவியத் சமூக-ஏகாதிபத்திய வாதிகள் என்னதான் சதி சூழ்ச்சியில் ஈடுபட்டாலும் சரி, உலகத்தின் போக்கு இவர் களின் விருப்பத்துக்கு மாருகப் போவதையே இவர்கள் தின மும் காண்பார்கள். இவர்களின் தவருன விமர்சனங்களுக்கு தலைவர் மாஓவின் ''இரு பறவைகள்-ஒரு உரையாடல்'' என்ற

கவிதையின் ஒரு சில அடிகளே நல்ல பதிலாக அமையு மென நாம் நம்புகின்றோம்.

''நிறுத்து உந்தன் வெற்றுப் பிதற்றலை!
பாராய், உலகம்
தலைகீழாகத் திருப்பப்படுகுது.''

இதுவே தவிர்க்க முடியாத இன்றைய வரலாற்றுப் போக்கா கும். நாடுகள் சுதந்திரத்தை விரும்புவதும், தேசங்கள் விடு தலையை வேண்டுவதும், மக்கள் புரட்சியை விரும்புவதும் இன்றைய சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் மேலும் மேலும் அதிகரித்துவரும் குணும்சமாகும்.

ஆகவேதான் ''மூன்று உலகங்களை வகைப் படுத்தும் தலைவர் மாஓவின் தத்துவம் மார்க்ஸிஸம் லெனி ஸத்திற்கு ஒரு மகத்தான பங்களிப்பு'' என்ற இந்நூல் திரிபுவாதிகளும் வரட்டுவாதிகளும், எடுக்கும் மார்க்ஸிஸத் துக்கு விரோதமான அணுகுமுறையை அம்பலப்படுத்துவது டன் அவர்களின் அவதூறுகளுக்கு ஆணித்தரமான பதிலாக வும் அமைந்துள்ளது, தலைவர் மாஓவின் முடிவுகள் வரலாற்று ரீதியாகவும் தர்க்கரீதியாகவும் மார்க்ஸிஸ-லெனினிஸ முடி வுகளை எவ்வாறு அடியொற்றியது என்பதையும், அவற்றை எவ்வாறு மேலும் வளர்த்து செழுமைப் படுத்தியுள்ளது என் பதையும் இந்நூல் விஞ்ஞான பூர்வமாக தெளிவுபடுத்து கிறது. இது தர்க்க இயலுக்கு நல்லதோர் எடுத்துக்காட் டாகவும் விளங்குகிறது. மார்க்ஸிஸம்-லெனினிஸம்-மாஓசே துங் சிந்தனை வெல்லற்கரிய மகத்தான தத்துவம் என்பதை இக்கட்டுரை மேலும் ஒரு முறை நிலைநாட்டியுள்ளது.

கம்யூனிஸ்டுகள் ஆதரவாளர்கள் மட்டுமல்ல, அனைத்து புரட்சிகர மக்களும், இன்றைய உலக நிலைமையை விளங்கிக் கொள்ள விரும்பும் அனைவரும், ஏன் மூன்றுலகத் தத்துவத் தைப் பற்றி வித்தியாசமான அபிப்பிராயம் உள்ளவர்கள் கூட அவசியம் இந்நூலைப் படிக்கவேண்டும். பாட்டாளி வர்க்க உலகக்கண்ணோட்டத்தால் அனைவரும் புனருருவாக்கப்பட இந்

நூலை நாம் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். அவர்கள் இதை விளங்கிப்படித்துப் பயன்பெற நாம் அனைவரும் மேலும் முயற்சிசெய்ய வேண்டும்.

எமது தேசியப் பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, சர்வ தேசியப் பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, அவற்றைச் சரியான கோணத்திலிருந்து ஆராயவும் தவறற்ற முடிவுகளுக்கு வரவும் இந்நூல் எமக்கெல்லாம் ஒளிவிளக்காக உதவவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக ஏகாதிபத்தியம், காலனித்துவம், நவ-காலனித்துவம், மேலாதிக்கவாதம் ஆகியவற்றிற்கெதிராக மக்களின் போராட்ட பேரணியொன்றைத் தோற்றுவிக்க இந்நூல் மிகவும் பயனுள்ளதாக அமையும் என நம்புகின்றோம்.

**" போராளி "**
ஆசிரிய குழு.

புதிய இலக்கம் *413*, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ குறிப்பு: தவிர்க்க முடியாத காரணங்களால் இந் நூலில் சில அச்சுப் பிழைகள் ஏற்பட்டுள்ளன. பிழை திருத்தம் கடைசிப் பக்கங்களில் இடம் பெற்றுள்ளதை கவனிக்கவும்.

## உள்ளடக்கம்


மூன்று உலகம் பற்றிய தத்துவம் இன்றைய உலக நிலைமைகளின் விஞ்ஞான ரீதியான ஒரு மார்க்ஸிஸ மதிப்பீடு. 4

சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய இரு மேலாதிக்க வல்லரசுகளும் உலக மக்களின் பொது எதிரிகள்; சோவியத் யூனியன் உலக யுத்தத்தின் ஊற்றுமூலம். 26

மூன்ருவது உலக நாடுகளும், மக்களும் ஏகாதிபத்தியம், காலனித்துவம், மேலாதிக்கவாதம் ஆகியவற்றை எதிர்க்கும் பிரதான சக்தி ஆவர். 41

மேலாதிக்கவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் ஐக்கியப்படக்கூடிய ஒரு சக்தி இரண்டாவது உலகம். 58

அதி விசாலமான சர்வதேச ஐக்கிய முன்னணியை அமைத்து வல்லரசு மேலாதிக்கவாதத்தையும், யுத்தக் கொள்கைகளையும் உடைத்தெறியுங்கள். 69

அடிக்குறிப்புகள் 85

எமது மாபெரும் முதல்வரும் ஆசிரியருமாகிய தலைவர் மாஓசேதுங் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டுக்கு மேல் ஓடிவிட்டது. அவர் இன்று நம்மோடு இல்லை. ஆனால் மிகச் செழுமையான, மதிப்பிடற்கரிய ஆஸ்தி ஒன்றை அவர் நமக்கு விட்டுச் சென்றுள்ளார். நாம் புரட்சியைத் தொடர்ந்து நடத்தும் போது வெல்லுதற்கரிய மாஓசேதுங் சிந்தனை நமது போராட்டப் பாதைக்கு எப்பொழுதும் ஒளி கொடுத்துக் கொண்டே இருக்கும்.

ஒரு மாபெரும் புரட்சிவாதியாக வாழ்ந்த தமது காலத்தில், தலைவர் மாஓ அவர்கள் மார்க்சிஸம்-லெனினிஸத்தை கையேற்று, பாதுகாத்து, தத்துவரீதியிலும் நடைமுறையிலும் அதை வளர்த்துள்ளார். சீனப் புரட்சிக்கும் உலகப் புரட்சிக்கும் அவர் வழங்கிய சாதனைகள் அமரத்துவம் வாய்ந்தவை ஆகும்.

தலைவர் மாஓ அவர்கள் தலைமையில் சீன மக்கள் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார முதலாளித்துவம் ஆகியவற்றுக்கு எதிரான புரட்சியில் வெற்றி பெற்று, சோஷலிஸ சீன மக்கள் குடியரசை ஸ்தாபித்து, கிழக்கிலும் உலகின் முழு நிலைமையிலும் ஓர் அடிப்படை மாற்றத்தை கொண்டு வந்தார்கள். சீனப் புரட்சியை அதன் பல்வேறு கட்டங்களுக்கு ஊடாக வழிநடத்தும் போக்கில் நாட்டுப்புறத்திலிருந்து நகரங்களைச் சுற்றிவளைத்து ஆயுதப் போராட்டத்தின் மூலம் அரசு அதிகாரத்தை கைப்பற்றுவது, புதிய ஜனநாயகப் புரட்சியில் தேசிய ரீதியான வெற்றியை ஈட்டுவதன் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பது, அதிலிருந்து சோஷலிஸப் புரட்சிக்கு மாறிச் செல்வது, சோஷலிஸத்தை கட்டி வளர்ப்பது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதன் மூலம் முதலாளித்துவ மீட்சியைத் தடுப்பது போன்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அவர் சரியான தீர்வு கண்டார். ஒரு புதிய காலகட்டத்திலும் புதிய சூழ்நிலைகளிலும், புரட்சி, நிர்மாணம் இரண்டிலும் பெற்ற செழுமையான அனுபவத்தை சேகரித்தும் தொகுத்தும் மார்க்ஸிஸ - லெனி

னிஸ தத்துவத்தை பெரிதும் விருத்தி செய்தார். இது சீன மக்களுக்கு மட்டுமல்ல, சர்வதேச பாட்டாளி வர்க்கத்துக் கும் புரட்சிகர உலக மக்களுக்கும் கூட ஒரு மதிப்புள்ள சொத்தாகும்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை இடைவிடாது உயர்த்திப் பிடித்து, தலைவர் மாஓ அவர்கள் வெளி விவகா ரங்களில் சீனாவின் மார்க்கம், கோட்பாடுகள், கொள்கைகள் ஆகியவற்றை வகுத்து, அவற்றின் அமுலாக்கத்துக்கும் வழி காட்டினார். சோஷலிஸ நாடுகளுடனும், உலக பாட்டாளி வர்க்கத்துடனும், அடக்கி ஒடுக்கப்பட்ட உலக மக்களுடனும் தேசங்களுடனும் நமது ஐக்கியத்தைப் பலப்படுத்தும் படி யும், உலக மக்களின் புரட்சிப் போராட்டங்களை உறுதியாக ஆதரிக்கும்படியும் அவர் நமக்குப் போதித்தார். உலக நாடுக ளுடன் உறவுகளை விருத்தி செய்வதில் சமாதான சகவாழ்வுக் கான பஞ்சசீலக் கோட்பாடுகளை பின்பற்றும்படியும், ஏகாதி பத்தியம், சமூக-ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கைகளையும் வல்லரசு மேலாதிக்க வாதத்தையும் உறுதியாக எதிர்க்கும்படியும், இதர நாடுகளுடன் நாம் வைக் கும் உறவுகளில் எவ்விதமான பெரும்தேச அகங்காரமும் வெளிப்படாமல் எதிர்க்கும்படியும், ஒருபோதும் மேலாதிக்க வாதத்தை நாடாது இருக்கும்படியும் அவர் நமக்குப் போதித் தார். ஒரு நீண்ட காலமாக அவருடைய போராட்ட நண்பர் தோழர் சோ என்-லாய் அவர்கள் வெளிவிவகாரங்களில் அவ ருடைய புரட்சி மார்க்கத்தை உறுதியாகவும் வெகுசிறப்பாக வும் அமுல்நடத்தினார். சீன மக்களாகிய நாம் நமது அன்புக் கும் மதிப்பிற்கும் உரிய பிரதமர் சோ அவர்களின் ஆதர் சத்தை பின்பற்றி, தலைவர் மாஓ அவர்களின் இந்தக் கட்ட ளைகளை என்றென்றும் விசுவாசமாக அமுல்நடத்துவோம்.

உலகப் புரட்சியின் ஸ்தூலமான நடைமுறையுடன் மார்க் ஸிஸம் - லெனினிஸத்தின் சர்வவியாபகமான உண்மையை இணைப்பதன் மூலம், தலைவர் மாஓ அவர்கள் பல்வேறு கால கட்டங்களிலும் சர்வதேச நிலைமையை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து தெளிவான முடிவுகளை எடுத்தார். இவ்வாறு

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி லட்சியத்தையும் உலகம் பூராவுமுள்ள ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலையையும் பெரிதும் முன்தள்ளி விட்டார்.

பாட்டாளி வர்க்கப் புரட்சிவாதி ஒருவரின் துணிவுடனும் தூரதிருஷ்டியுடனும் தலைவர் மாஓ அவர்கள் சோவியத் திரிபுவாத துரோகக் கும்பலை மையமாகக் கொண்ட நவீன திரிபுவாதத்தை ஒழித்துக்கட்ட சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தில் பிரமாண்டமான போராட்டம் ஒன்றை ஆரம்பித்து, எழுச்சிமிக்க மார்க்ஸிஸம்-லெனினிஸ பதாகையின் கீழ் முன்னேற சர்வதேச பாட்டாளி வர்க்கத்தை அணிதிரட்டினர்.

சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய இரு மேலாதிக்க வல்லரசுகளும் உலக மேலாதிக்கத்துக்கான ஒரு கழுத்தறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு, புதிய யுத்தம் ஒன்றுக்கு தீவிரமாக தயார் செய்யும் ஒரு கட்டத்தில் தலைவர் மாஓ அவர்கள் தமது மூன்று உலகம் பற்றிய தத்துவத்தை முன்வைத்தார். இந்த தத்துவம் சர்வதேச பாட்டாளி வர்க்கத்துக்கும், சோஷலிஸ நாடுகளுக்கும், அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் ஐக்கியத்தை உருவாக்கவும், இரு மேலாதிக்க வல்லரசுகளுக்கும் அவற்றின் யுத்தக் கொள்கைகளுக்கும் எதிராக மிக விசாலமான ஐக்கிய முன்னணியைக் கட்டி வளர்க்கவும், உலகப் புரட்சியை முன்தள்ளிவிடவும் ஒரு பலம் வாய்ந்த சித்தாந்த ஆயுதத்தை வழங்குகின்றது.

தலைவர் மாஓ நமது சகாப்தத்தின் மாபெரும் மார்க்ஸிஸவாதி ஆவர். லெனின் அவர்களைப் போல, அவரும் சர்வதேச பாட்டாளி வர்க்கத்துக்கும் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்கள் மக்களுக்கும் ஒரு மகத்தான ஆசானாக திகழ்ந்தார். மனித குல முன்னேற்றத்துக்கு விலை மதிக்கற்கரிய சாதனை ஒன்றையும் வழங்கினர்.

இந்தக் கட்டுரையில் நாம் அவருடைய மூன்று உலகம் பற்றிய தத்துவத்தையும், உலக மக்களின் புரட்சிப் போராட்டத்தில் அது வகிக்கும் ஆழ்ந்த முக்கியத்துவத்தையும் ஓரளவு விளக்கிக் கூற விரும்புகின்றோம்.

## மூன்று உலகம் பற்றிய தத்துவம் இன்றைய உலக நிலைமைகளின் விஞ்ஞான ரீதியான ஒரு மார்க்ஸிஸ மதிப்பீடு

மூன்று உலகம் பற்றிய தலைவர் மாஓ அவர்களின் தத்துவம் இன்றைய உலக அரங்கில் வர்க்கப் போராட்டத்தின் புறநிலை உண்மைகளை விஞ்ஞான ரீதியில் பொழிப்பாகத் திரட்டித் தருகின்றது. இந்தத் தத்துவத்தில் அவர் அடிப்படை மார்க்ஸிஸம்-லெனினிஸ கோட்பாடுகளை வரன்முறையாகக் கையேற்று, பாதுகாத்து, விருத்தி செய்துள்ளார்.

1974 பெப்ரவரியில் ஒரு மூன்றுவது உலக நாட்டின் தலைவருடன் நடத்திய சம்பாஷணையில் தலைவர் மாஓ குறிப்பிட்டதாவது:- **''எனது கருத்தில், அமெரிக்காவும் சோவியத் யூனியனும் முதலாவது உலகமாக அமைகின்றன. யப்பான், ஐரோப்பா, கனடா முதலியவற்றைக் கொண்ட மத்திய பிரிவு இரண்டாவது உலகமாகும். நாம் மூன்றுவது உலகமாக விளங்குகின்றோம்.'' ''மூன்றுவது உலகம் ஒரு பிரமாண்டமான ஜனத்தொகையை உடையது. யப்பான் தவிர்ந்த ஆசியா மூன்றுவது உலகைச் சார்ந்தது. ஆபிரிக்கா முழுவதும், லத்தீன் அமெரிக்காவும் கூட மூன்றுவது உலகை சார்ந்தவையே.''**

எமது சகாப்தம் ஏகாதிபத்தியத்தினதும், பாட்டாளி வர்க்க புரட்சியினதும் சகாப்தம் ஆகும்; ஏகாதிபத்திய நாடுகளின் வளர்ச்சி சமத்துவமற்றது; ஏகாதிபத்திய வல்லரசுகள் யுத்தத்தின் மூலம் உலகை மீண்டும் பங்குபோட முயல்வது தவிர்க்க முடியாதது; உலகம் முழுவதையும் ஏகாதிபத்தியம் ஒடுக்கும் தேசங்களாகவும், ஒடுக்கப்படும் தேசங்களாகவும் பிரித்துள்ள படியால், சர்வதேச பாட்டாளி வர்க்கம் ஒடுக்கப்படும் தேசங்களுடன் சேர்ந்து நின்று போராட வேண்டும் என்று லெனின் கூறியுள்ளார். இந்த லெனினிஸ சித்தாந்தத்தின் பிரகாரம் சமகால உலக அடிப்படை முரண்பாடுகளின் வளர்ச்சியையும், அவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் ஆராய்ந்து, அந்த ஆராய்வை அடிப்படையாகக் கொண்ட ஒரு விஞ்ஞான ரீதியான முடிவே இந்த மூன்று உலகம் பற்றிய தத்துவமாகும்.

தலைவர் மாஓவின் மூன்று உலகம் பற்றிய தத்துவத்தை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால், தேசிய, சர்வ தேசிய பிரச்சினைகளின் தொடர்புகளை ஆராயும்போது லெனினும், ஸ்டாலினும் செய்தது போல, நாம் இன்றைய சர்வ தேச அரசியல் தோற்றப்பாடுகளை கணிக்கும்போது இயங்கியல் பொருள்முதல்வாதத்தை பிரயோகிக்க வேண்டும்; மானசீகக் கருத்துகளிலிருந்து தொடங்காமல் யாதார்த்த நிலைமையிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். தேசிய, சர்வதேசிய பிரச்சினைகளின் தொடர்புகளை ஆராயும்போது, அவை "தனிமையில் வைத்து ஆராயப்படாமல் உலக ரீதியில் வைத்து ஆராயப்பட வேண்டும்"[1] என்று லெனினும், "மாமூலான ஜனநாயகக் கண்ணோட்டத்திலிருந்து கணிக்கப்படாமல் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தின் பொதுப் பெறுபேற்றால் காட்டப்பட்டபடி உண்மையான விளைவுகளின் கண்ணோட்டத்திலிருந்து கணிக்கப்பட வேண்டும்"[2] என்று ஸ்டாலினும் கூறினார்கள்.

மேலோட்டமாகப் பார்த்தால், தலைவர் மாஓவின் இந்த தத்துவம் இன்றைய உலகில் நாடுகளுக்கிடையிலும் தேசங்களுக்கிடையிலும் நிலவும் உறவுகள் மாத்திரம் சம்பந்தப்பட்டது போலத் தோன்றலாம். ஆனால் சாராம்சத்தில் இது உலக ரீதியில் இன்றைய வர்க்கப் போராட்டத்தின் ஜீவாதாரப் பிரச்சினையுடன் நேரடித் தொடர்பு உடையது. இறுதியாகப் பார்த்தால், தேசிய பிரச்சினை என்பது வர்க்கப் போராட்டம் தழுவிய ஒரு பிரச்சினையாகும்.[3] நாடுகளின் உறவுகளைப் பொறுத்தவரையில் கூட இது உண்மையாகும். நாடுகளுக்கிடையில் அல்லது தேசங்களுக்கு இடையில் நிலவும் உறவுகள் வர்க்கங்களின் உறவுகளை அடிப்படையாகக் கொண்டவை. அவை பரஸ்பரம் தொடர்புடையவையும் பெரும் சிக்கலானவையும் ஆகும். முழுமையான சர்வதேச வர்க்கப் போராட்டத்திலிருந்து ஆரம்பித்து, குறிப்பிட்ட காலம், குறிப்பிட்ட இடம், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஸ்தூலமான பிரச்சினைகளை ஸ்தூலமாக ஆராய்வதற்குப் பதில் நாம் ஒரு கருத்துமுதல்வாத அல்லது நிலையியல் அணுகுமுறையை மேற்கொண்டு, மானசீகமான, தனித்தனி அவதானிப்புகளை செய்து கொண்டால், சர்வதேச அரசியல் நிகழ்ச்சிகள் பற்றி சரி

யான தீர்ப்புகளுக்கு வருவதும், உலக அரசியல் சக்திகளை சரியாக வேறுபடுத்திக் கொள்வதும் கடினமாய் இருக்கும்.

மார்க்ஸிஸ-லெனினிஸவாதிகள் ஆட்டமசைவின்றி சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் நிலைப்பாட்டை மேற்கொண்டு, சர்வதேச வர்க்கப் போராட்டத்தில் சகல நாடுகளினதும் புரட்சிகர மக்களின் பொதுநலன்களை உயர்த்திப் பிடித்து, முதலாளித்துவ அமைப்பை ஒழித்துக்கட்டி, கம்யூனிஸ அமைப்பை எற்படுத்துவதை தமது கூடியபட்ச வேலைத்திட்டமாக கொண்டுள்ளனர். ஆனால் இந்த போராட்டம் சம்பந்தமான நிலைமை சிக்கலானதும் நிலையற்றதும் ஆகும். சர்வதேச முதலாளி வர்க்கம் ஒரு போதும் ஒரே உருக்குப் பாறை போல் இருந்ததில்லை; இருக்கவும் முடியாது. சர்வதேச தொழிலாளர் வர்க்க இயக்கமும் அந்நிய வர்க்கங்களின் செல்வாக்கினால் ஒன்றன் பின் ஒன்றாக பல பிளவுகளை கண்டுள்ளது. சர்வதேச அரங்கில் வர்க்கப் போராட்டத்தை நடத்தும்போது, முற்போக்கு சக்திகளை வளர்த்து, மத்திய சக்திகளை வென்றெடுத்து, பிடிவாத சக்திகளை தனிமைப் படுத்துவதற்காக,[4] வேறுவேறு வரலாற்றுக் காலகட்டங்களில் எது அவசியமானது, எது இசைவானது எனப் பார்த்து, ஐக்கியப்படக்கூடிய சக்திகள் அனைத்துடனும் பாட்டாளி வர்க்கம் ஐக்கியப்பட வேண்டும். எனவே உலக அரசியல் சக்திகளை வேறுபடுத்துவதற்கு (அதாவது சர்வதேச வர்க்கப் போராட்டத்தில் நம்மையும், நமது நண்பர்களையும், நமது எதிரிகளையும் இனம் கண்டுகொள்வதற்கு) வளைந்து கொடுக்காத வாய்பாடு ஒன்றையும் முன்வைக்க முடியாது.

முதலாவது சோஷலிஸ நாடு உதயமானதைத் தொடர்ந்து 1921ல் முதலாளித்துவ, பாட்டாளி வர்க்க ராஜதந்திரங்கள் இரண்டையும் பற்றி குறிப்பிடும் போது லெனின், ''இன்று இரண்டு உலகங்கள் இருக்கின்றன. ஒன்று பழைய முதலாளித்துவ உலகம். மற்றது உருவாகிவரும் புதிய உலகம்''[5] என்று கூறினார். 1919ல் ஸ்டாலின் ''உலகமானது திட்டமாகவும் தீர்க்கமாகவும் முதலாளித்துவ முகாம், சோஷலிஸ முகாம் என இரு முகாங்களாக பிரிந்துள்ளது''[6]

என்று குறிப்பிட்டார். உண்மையில் இந்த முடிவு அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து உலகில் நிலவிய புதிய அடிப்படை முரண்பாட்டை பிரதிபலித்தது. ஆனால் லெனினும், ஸ்டாலினும் உலகில் இதர அடிப்படை முரண்பாடுகளும் உள்ளன என்பதையோ, அல்லது உலக அரசியல் சக்திகளை வேறுபடுத்திப் பார்க்க வேறு வழிகள் உள்ளன என்பதையோ ஒருபோதும் மறுக்கவில்லை. உதாரணமாக, 1920ல் கம்யூனிஸ அகிலத்தின் இரண்டாவது மாநாட்டில் தேசிய, குடியேற்றவாத பிரச்சினைகள் பற்றி சமர்ப்பித்த தமது அறிக்கையில், லெனின் "ஏகாதிபத்தியத்தின் விசேஷ குணும்சம் யாதெனில், உலகமானது ஒடுக்கப்பட்ட தேசங்கள் பலவாகவும், ஒடுக்கும் தேசங்கள் சிலவாகவும் பிரிந்திருப்பதாகும். பின்னையவை பிரமாண்டமான செல்வத்தையும் பலம்வாய்ந்த ஆயுதப் படைகளையும் பெற்றுள்ளன"[7] என்று கூறினார். 1924ல் "லெனினிஸத்தின் அடிப்படைகள்" என்ற நூலில் தேசியப் பிரச்சினை பற்றி விளக்கும்போது ஸ்டாலினும் "உலகம் இரு முகாங்களாகப் பிரிந்துள்ளது. ஒன்று, விரல்விட்டு எண்ணக்கூடிய நாகரிக நாடுகளின் முகாம். அதனிடம் நிதி மூலதனம் உண்டு. பூகோள ஜனத்தொகையில் பெரும் பகுதியை அது சுரண்டுகிறது. மற்றது, குடியேற்றங்களிலும் சார்பு நாடுகளிலும் உள்ள அடக்கி ஒடுக்கிச் சுரண்டப்படும் மக்களின் முகாம். மொத்த ஜனத்தொகையில் இவர்கள் பெரும்பான்மையினர் ஆவர்"[8] என்று குறிப்பிட்டார். யதார்த்தத்தில் இந்த முடிவுகள் உலகில் இன்னொரு வகையான அடிப்படை முரண்பாடுகள் இருப்பதைப் பிரதிபலிக்கின்றன. லெனினும், ஸ்டாலினும் வேறுபடுத்திக் காட்டிய இம்முறைகள் இரண்டும் சரியானவை என்பதில் சந்தேகமே இல்லை. அவர்கள் அழுத்தம் கொடுத்ததில் மட்டுமே வித்தியாசம் காணப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உலக அரசியல் சக்திகளை முழுமையாகவும் ஸ்தூலமாகவும் வேறுபடுத்திக் காட்ட நேர்ந்த போது, அவர்கள் உலகில் நிலவும் பல அடிப்படை முரண்பாடுகளையும் ஒட்டு மொத்தமாக ஆராய்வதுடன் ஆரம்பித்தனர்.

பூகோள ரீதியில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸ அமைப்புக்குச் செல்லும் மாற்றம் சிக்கலான போராட்டங்கள் நிறைந்த மிக நீடித்த, கரடுமுரடான ஒரு வளர்ச்சிப் போக்காகும். இந்தப் போக்கில் பல்வேறு காலகட்டங்களில் உலக அரசியல் சக்திகள் பல்வேறு வகையில் அணிசேர்வது தவிர்க்க முடியாதது. பாட்டாளி வர்க்கம் உலக அரசியல் சக்திகளை வேறுபடுத்திக் கொள்வதையும், போராட்டத்தில் அதற்கேற்ற யுத்த தந்திரத்தையும் தந்திரோபாயங்களையும் கடைப்பிடிப்பதையும் உலக வர்க்கப் போராட்டத்தின் யதார்த்த நிலைமைகள் நிர்ணயிக்கின்றன. இங்கு மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், தலைவர் மாஓ ஆகியோர் உலக அரசியல் சக்திகளை வேறுபடுத்திக் காட்டிய குறிப்பிட்ட சில வரலாற்று நிகழ்ச்சிகளை சுருக்கமாக மீளாய்வு செய்வது மூன்று உலகம் பற்றிய தத்துவத்தை நாம் புரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

மார்க்ஸும் ஏங்கெல்ஸும் பிரதானமாக மேற்கு ஐரோப்பாவில் தமது புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த காலத்தில், பல்வேறு நாடுகளின் வர்க்கப் போராட்டங்களை மதிப்பீடு செய்தபோது ஐரோப்பாவிலும் முழு உலகிலும் இருந்த பொது நிலைமையை இயல்பாகவே மனதில் கொண்டிருந்தார்கள். வரலாற்றில் முதல் தடவையாக அவர்கள் ''உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!'' என்ற மகத்தான அறைகூவலை முன்வைத்தார்கள். அடுத்து சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் லட்சியம் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலைக்கான போராட்டத்துடன் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்துள்ளது என்றும் முதல் தடவையாகச் சுட்டிக் காட்டினர். ''இதர தேசங்கள் மீது ஒடுக்குமுறையைத் தொடரும் அதே வேளையில் ஒரு தேசம் சுதந்திரமாக இருக்க முடியாது. ஆகவே ஜெர்மன் ஒடுக்குமுறையிலிருந்து போலந்து விடுதலை பெறுமல், ஜெர்மனி விடுதலை அடைய முடியாது''[9] என்று ஏங்கெல்ஸ் குறிப்பிட்டார். ''பல வருடங்களாக அயர்லாந்துப் பிரச்சினையில் ஈடுபட்டிருந்த பின்னர் நான் பின்வரும் முடிவுக்கு வந்துள்ளேன்:- ஆங்கில ஆளும் வர்க்கங்களுக்குக் கொடுக்கும் தீர்க்கமான அடி இங்கிலாந்தில்

அல்ல, அயர்லாந்திலேயே கொடுக்கப்பட வேண்டும். (இது உலகம் பூராவுமுள்ள தொழிலாளர் இயக்கத்திற்கும் தீர்க்கமானதாக இருக்கும்'')[10] என்று மார்க்ஸ் கூறினர். அவர்கள் இருவரும் போலந்து, அயர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளின் சுதந்திரப் போராட்டத்துக்கு மட்டுமல்ல, ஐரோப்பாவுக்கு வெகு தொலைவிலுள்ள சீனு, இந்தியா போன்ற நாடுகள் நடத்திய போராட்டங்களுக்கும் பெரும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். குறிப்பிட்ட தேசிய இயக்கங்களையும் அரசியல் சக்திகளையும் ஆராய்வதற்கு சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் ஒட்டுமொத்த நலன்களையே அவர்கள் எப்பொழுதும் தம்து ஆரம்பப் புள்ளியாக கொண்டார்கள். லெனின் ஒருகால் சுட்டிக்காட்டியது போல, ''ஜாரிஸ அதிகாரத்துக்கும் செல்வாக்குக்கும் எதிராக-அல்லது வேறுவிதமாகச் சொன்னுல், ஜாரிஸத்தின் சர்வ வல்லமைத்துவத்துக்கும் மேலோங்கியிருந்த பிற்போக்குச் செல்வாக்குக்கும் எதிராக ஐரோப்பிய ஜனநாயகம் நடத்திய போராட்டத்தின் நலன்களுக்காக மார்க்ஸ் போலந்தின் சுதந்திரத்தை ஆதரித்தார் எனத் தெரிகிறது.''[11]

''மேற்கு ஐரோப்பிய தொழிலாளர் கட்சிகள் ரஷ்ய ஜாரிஸத்துக்கு எதிராக விட்டுக் கொடுக்காத போர் ஒன்றை நடத்துவது அவசியம்''[12] என்று மார்க்ஸ் 1848ல் முதல் தடவையாக சுட்டிக்காட்டியது மாத்திரமல்ல, பின்னர் அதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியும் வந்துள்ளார். மாக்ர்ஸைப் பொறுத்தவரையில் இக் கருத்து அவருடைய பங்களிப்புகளில் ஒன்று என ஏங்கெல்ஸ் குறிப்பிட்டார். ஏனெனில் ரஷிய ஜார் சாம்ராஜ்யம் ஐரோப்பியப் பிற்போக்கின் மிகப்பெரும் பெட்டகமாக விளங்கியது; ஐரோப்பா மீது அது எப்பொழுதும் விஸ்தரிப்பு நப்பாசைகளைக் கொண்டிருந்தது; அத்துடன் ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்தின் விடுதலையை அசாத்தியம் ஆக்குவதும் அதன் நோக்கமாகும். ரஷிய ஜார் சாம்ராஜ்யத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கையை உரைகல்லாகக் கொண்டே ஐரோப்பிய அரசியல் சக்திகளை வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்றும், ஐரோப்பாவில் எந்த தேசிய இயக்கத்துக்கு சர்வதேச பாட்டாளி வர்க்கம் அதன் ஆதரவை வழங்குவதெனத் தீர்மானிக்க வேண்டுமென்றும் அடிக்கடி தமது இறுதி நாட்கள்வரை மார்க்ஸும், ஏங்கெல்ஸும்

சுட்டிக்காட்டி வந்தார்கள். இப்படிச் செய்வதன் மூலம் மார்க்ஸும், ஏங்கெல்ஸும் சர்வதேச வர்க்கப் போராட்டத்தை எவ்விதத்திலும் மறக்கவில்லை என்பது தெளிவு. மாறாக, சர்வதேச வர்க்கப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்களை அவர்கள் தமது உள்ளத்தின் ஆழத்தில் பதித்து வைத்திருந்தார்கள். இந்த விஷயத்தில் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இருவரிடமுமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது யாது? குறைந்த பட்சம் நாம் பின்வருவனவற்றையாவது கற்றுக்கொள்ள வேண்டும்:- முதலாவதாக, மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரைப் போல, சகல ஒடுக்கப்பட்ட தேசங்களையும் உள்ளடக்கிய, உலகத்தை நடுங்க வைத்த மகத்தான தேசிய புரட்சி இயக்கத்தை நாம் போற்றிப் பாராட்ட வேண்டும். இப் புரட்சி இயக்கத்தை சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கான ஒரு முக்கிய முன் - நிபந்தனையாகவும், ஒரு நம்பகமான உத்தரவாதமாகவும் கருதவேண்டும். இரண்டாவதாக, மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இருவரையும் போல, முதலாளித்துவ நாடுகளுக் கிடையிலான முரண்பாடுகளை இடைவிடாது அவதானித்து, சர்வதேச தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் கொடிய வைரிகள் யார் என்பதை இனம் கண்டு கொள்ள வேண்டும். இன்றைய உலகப் பிற்போக்கின் மிகப் பெரும் பெட்டகங்களாக விளங்கும் சோவியத் சமூக-ஏகாதிபத்தியத்தையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் ஓய்வு ஒழிச்சலின்றி எதிர்த்துப் போராட வேண்டும்.

உலகமானது ஏகாதிபத்திய, பாட்டாளி வர்க்கப் புரட்சி சகாப்தத்தில் ஏற்கனவே பிரவேசித்து விட்டது என்று முதல் முதலில் சுட்டிக்காட்டியவர் லெனின் ஆவர். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் ஒரு சோஷலிஸ அரசை உருவாக்கிய முதல்வரும் அவரே. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களின் போராட்டம் உலகப் பாட்டாளி வர்க்க சோஷலிஸ இயக்கத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதி என்று கருதி, ''உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட தேசங்களே, ஒன்று சேருங்கள்!'' என்ற யுத்த தந்திரக் கொள்கையை முதலில் வைத்த பெருமகனும் லெனின்

அவர்களே ஆவர். 1913ல் எழுதிய ''கார்ல் மார்க்ஸ் தத்துவத்தின் வரலாற்றுத் தலைவிதி'' என்ற தமது கட்டுரையில் லெனின் கூறியதாவது:- '' 'சமூக அமைதி' பிரதிஷ்டை செய்யப்பட்டு விட்டது என்றும், 'ஜனநாயகத்தின்' கீழ் புயல்கள் அவசியம் அற்றவை என்றும் கூறி சந்தர்ப்பவாதிகள் தமக்குத் தாமே வாழ்த்துத் தெரிவித்து வாய் மூடுவதற்கிடையில், மாபெரும் உலகப் புயல்களின் ஊற்றுமூலம் ஒன்று ஆசியாவில் திறந்துவிட்டது. ரஷிய புரட்சியைத் தொடர்ந்து துருக்கிய, பாரசீக, சீன புரட்சிகள் வெடித்தெழுந்தன. புயல்களும் ஐரோப்பாவில் அவற்றின் 'எதிரொலிகளும்' முழங்கும் இந்த சகாப்தத்தில் தான் நாம் இன்று வாழ்கின்றோம்.''[13] சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி இயக்கத்துக்கும் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களின் புரட்சி இயக்கத்துக்கும் உள்ள உறவு பற்றி 1916ல் லெனின் எழுதியதாவது:- ''வளர்ச்சியடையாத, பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட தேசங்களில் காணும் தேசிய விடுதலை இயக்கங்கள் உட்பட, வரிசை வரிசையான ஜனநாயக, புரட்சி இயக்கங்களுடன் இணைந்த, முன்னேறிய நாடுகளின் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான ஒரு பாட்டாளி வர்க்க உள்நாட்டு யுத்த சகாப்தத்தின் வடிவில் அன்றி வேறுவிதத்தில் சமுதாயப் புரட்சியானது நடைபெறமுடியாது.''[14] லெனின் அவர்களின் இந்தக் கருத்துகள் இன்றும் பெறுமதி உடையனவாய் உள்ளன.

அக்டோபர் புரட்சிக்கும் முதலாவது உலக யுத்தத்துக்கும் பின்னர், 1920ல் கம்யூனிஸ அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்கு ''சர்வதேச நிலைமையும் கம்யூனிஸ அகிலத்தின் அடிப்படைக் கடமைகளும் பற்றிய அறிக்கை'' ஒன்றை லெனின் சமர்ப்பித்தார். அதில் மொத்தம் 175 கோடி ஜனத்தொகையைக் கொண்ட உலக நாடுகளை மூன்று வகையாகப் பிரித்து, அப்பிரிவை சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் யுத்த தந்திர, தந்திரோபாயங்களை நிர்ணயிப்பதற்கான ஆரம்பப் புள்ளியாகக் கொண்டார். அவர் கூறியதாவது:- ''இவ்வாறு ஏகாதிபத்திய யுத்தத்துக்குப் பின் நிலவிய உலகத் தோற்றத்தின் பிரதான வரைகோடுகளை நாம் பெறுகின்றோம். காலனிகளில், அதாவது உயிரோடு துண்டாடப்படும் பாரசீகம், துருக்கி, சீனு போன்ற நாடுகளிலும், தோற்கடிக்கப்பட்டு காலனிகளின்

நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நாடுகளிலும் 125 கோடி மக்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றனர். (இங்கு லெனின் ஆஸ்திரிய-ஹங்கேரி, ஜெர்மனி, பல்கேரியா அதேபோல யுத்தத்தினால் "காலனி நிலைக்குச் சமமான அந்தஸ்துக்கு" தள்ளப்பட்ட சோவியத் ரஷியா போன்ற நாடுகளை குறிப்பிடுகின்றார். ஆ-ர்.) தமது பழைய நிலைகளைப் பேணிக் கொண்ட, ஆனால் பொருளாதாரத்துக்காக அமெரிக்காவைச் சார்ந்துள்ள நாடுகளில் சுமார் 25 கோடி மக்கள் வாழ்கின்றனர். யுத்த காலத்தில் இந் நாடுகள் எல்லாம் ஒரு ராணுவ சார்பு நிலையில் இருந்தன. காரணம், யுத்தமானது முழு உலகத்தையும் பாதித்து, எந்த ஒரு நாட்டையும் உண்மையான நடுநிலையில் நிற்க அனுமதிக்கவில்லை. கடைசியாக, உலகத்தின் பாகப்பிரிவினையால் மேல் வர்க்கத் தட்டு மட்டும், உண்மையில் முதலாளிகள் மாத்திரம் நன்மை பெற்ற நாடுகளில் சுமார் 25 கோடி பேர் வசிக்கின்றனர். (இங்கு லெனின் அமெரிக்கா, யப்பான், பிரிட்டன் போன்ற நாடுகளை குறிப்பிடுகின்றார்.) உலகின் இந்தப் படத்தை நீங்கள் மனதில் பதிக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். காரணம் புரட்சிக்கு வழிகோலுகின்ற முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடுகள், ஏகாதிபத்தியத்தின் அடிப்படை முரண்பாடுகள் இரண்டாவது அகிலத்துக்கு எதிராக பயங்கரப் போராட்டத்துக்கு வழிகோலிய தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் அடிப்படை முரண்பாடுகள் எல்லாம் உலக ஜனத்தொகையின் இந்தப் பிரிவினையுடன் சம்பந்தப்பட்டு உள்ளன."[15]

லெனின் இதை எவ்வளவு அழகாகச் சொல்லியிருக்கிறார்! உலக அரசியல் சக்திகளை இவ்வாறு வேறுபடுத்திக் காட்டுவதை பார்க்கும்போது, உண்மையில் அவர் இன்றைய போராட்டங்களைத்தான் மனதில் கொண்டிருந்தார் போல் தோன்றுகிறது! ஒடுக்கும் தேசங்களுக்கும் ஒடுக்கப்படும் தேசங்களுக்கும் உள்ள முரண்பாடு, ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலுள்ள முரண்பாடு ஆகியவற்றுக்கு மிகுதியும் முக்கியத்துவம் கொடுத்து, லெனின் உலக நாடுகளை மூன்று வகையாகப் பிரித்தார். பிரித்து அதை ஏகாதிபத்திய உலகிலும், சர்வதேச தொழிலாளர் வர்க்க இயக்கத்திலும் நிலவும் அடிப்படை முரண்பாடுகள் அனைத்துடனும் நெருக்கமாகத் தொடர்புபடுத்தினார். அவருடைய இந்த தத்துவம் சந்தர்ப்ப

வாதத்துக்கு அல்லது ஒடுக்கப்பட்ட தேசங்களின் போராட்டத்தை எப்பொழுதும் இழிவுபடுத்திவந்த இரண்டாவது அகிலத்தின் ''முதலாளித்துவ சோஷலிஸத்துக்கு''[16] நேர் விரோதமானது. லெனின் தனது அறிக்கையில் உலக நாடுகளை முதலாளித்துவ நாடுகள், சோஷலிஸ நாடுகள் என இரண்டாகப் பிரிப்பதற்குப் பதில், முதலாளித்துவ உலகின் பல்வேறு நாடுகளையும் மூன்று வகையாக, அதாவது (i) அடக்கி ஒடுக்கப்படும் காலனி, அரைக்காலனி நாடுகளும் தோற்கடிக்கப்பட்ட நாடுகளும், (ii) தமது பழைய அந்தஸ்துகளை பேணிக்கொண்ட நாடுகள் (iii) யுத்தத்தில் வெற்றி பெற்ற, உலகின் பாகப்பிரிவினையால் நன்மையடைந்த நாடுகள் என மூன்ருகப் பிரித்தார். இங்கு இவர் சோஷலிஸ ரஷியாவையும் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகள் தேசங்களையும் ஒரே பிரிவில் உள்ளடக்கஞர். ''முன்னேறிய நாகரிகம் படைத்த முதலாளித்துவம் தம்மீது திணிக்க விரும்பும் அடிமை நிலைமைகளில் வாழ்வது அசாத்தியம் எனக் காணும் 125 கோடி மக்கள் இருக்கிருர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக இவர்கள் உலக ஜனத்தொகையில் 70 வீதம் ஆவர்''[17] என்று கூறி, லெனின் உலக அரங்கில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சிப் போராட்டத்தில் இந்த 125 கோடி மக்களும் வகிக்கும் மகத்தான பாத்திரத்தை பூரணமாக கணக்கில் எடுத்துக் கொண்டார். தமது மரணத்துக்கு சற்று முன்பாக உலகம் பூராவிலும் சோஷலிஸத்தின் தவிர்க்க முடியாத இறுதி வெற்றி பற்றி கூறும்போது, அவர் தொடர்ந்தும் வற்புறுத்தியதாவது:- ''இறுதியாக ஆராய்ந்து பார்த்தால், போராட்டத்தின் பெறுபேறு பூகோள ஜனத்தொகையில் ஏகப்பெரும்பான்மை ரஷியா, இந்தியா, சீனு முதலிய நாடுகளில் உள்ளது என்ற உண்மையால் நிர்ணயிக்கப்படும். குறிப்பாக இந்தப் பெரும்பான்மை மக்கள்தான் கடந்த சில ஆண்டுகளில் விடுதலைக்கான போராட்டத்தில் வெகுவேகமாக இழுக்கப்பட்டனர். இதிலிருந்து பார்த்தால், உலகப் போராட்டத்தின் இறுதி விளைவு எவ்வாறு இருக்கும் என்பதில் எள்ளத்தனையும் சந்தேகம் இருக்க முடியாது. இந்த அர்த்தத்தில் சோஷலிஸத்தின் பூரண வெற்றி முற்றுமுழுதாகவும் சம்பூரணமாகவும் உத்தரவாதம் செய்யப்படுகின்றது.''[18]

பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வையும் கம்யூனிஸ இயக்கத்தின் வெற்றியில் நம்பிக்கையையும் ஊட்டும் இந்த கருத்துகளை வெளியிடும்போது, லெனினின் புரட்சி லட்சியத்துக்கு பூரணமாகத் துரோகம் செய்த சோவியத் சமூக ஏகாதிபத்தியவாதிகளைத் தவிர வேறுயாரும் லெனின் ''வர்க்கக் கோட்பாடுகளை கைகழுவி விட்டார்'', ''பிற்போக்கான பூகோள அரசியல் தத்துவங்களைப் போதித்தார்''19 என்பன போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்க மாட்டார்கள் என்பது தெளிவு. இங்கு லெனினிடமிருந்து நாம் யாது கற்றுக் கொள்ளவேண்டும்? குறைந்தபட்சம் பின்வருவனவற்றையாவது தெரிந்துகொள்ள வேண்டும்:- லெனினைப் போல நாமும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க கண்டங்களிலும் பிற இடங்களிலும் நடைபெறும் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலை இயச்கத்துக்கு பாராட்டும் ஆதரவும் தெரிவிக்க வேண்டும். இப் போராட்டம் உலக பாட்டாளி வர்க்க சோஷலிஸப் புரட்சி இயக்கத்தின் முக்கியமான ஒரு பகுதி என உணரவேண்டும். இன்று நிலவும் புதிய சர்வதேச வர்க்க உறவுகளின் அடிப்படையில் இன்றைய உலக நாடுகளை மூன்று புதிய பிரிவுகளாக வகுக்க வேண்டும். வகுத்து, சர்வதேச பாட்டாளி வர்க்கத்தினதும், உலக ஜனத்தொகையில் 70 வீதத்துக்கு மேலாக உள்ள மூன்றுவது உலக மக்களினதும் ஐக்கியப் போராட்டத்தினுல் உலகம் முழுவதிலும் சோஷலிஸத்தின் இறுதி வெற்றி பூரணமான, முற்றுமுழுதான உத்தரவாதத்தைப் பெறும் என்பதை கண்டுகொள்ள வேண்டும்.

லெனினுடைய மறைவின்பின், பாட்டாளி வர்க்கம் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களுடன் ஐக்கியப்பட வேண்டும் என்ற அவருடைய தத்துவத்தை ஸ்டாலின் பாதுகாத்தார். தேசிய விடுதலை இயக்கமானது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் சகல சக்திகளையும், அவற்றின் வர்க்க நிலை, அரசியல் மனுேபாவம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், அவை எல்லாவற்றையும் உள்ளடக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டினுர். ஆப்கானிஸ்தான் மன்னர் எமீர் ஏகாதிகாரத்தில் அழுங்குப் பிடியாய் நின்றபோதிலும், எகிப்

திய தேசிய விடுதலை இயக்கத் தலைவர்கள் முதலாளி வர்க்கத்தை சேர்ந்தவர்களாகவும் சோஷலிஸத்தின் எதிரிகளாகவும் இருந்தபோதிலும், அவர்கள் தமது தேசங்களின் சுதந்திரத்துக்காக தொடுத்த போராட்டங்கள் யதார்த்தத்தில் புரட்சிகரப் போராட்டங்களே என உதாரணமாக காட்டினார். ஏனென்றால் அவை ''ஏகாதிபத்தியத்தை பலவீனப்படுத்தவும், சின்னபின்னப்படுத்தவும், குழிபறிக்கவும்''[20] சேவை செய்கின்றன. ட்ரொஸ்கியவாத எதிர்ப்பை விமர்சனம் செய்தபோது ஸ்டாலின் சுட்டிக்காட்டியதாவது:- ''இங்கு எதிர்தரப்பின் குற்றம் என்னவென்றால், அது லெனினுடைய மார்க்கத்தை முற்றாக கைகழுவி விட்டது. ஏகாதிபத்தியத்துக்கு எதிராக காலனி நாடுகள் தொடுத்த புரட்சி யுத்தங்களை ஆதரிக்கும் யுக்தியை நிராகரிக்கின்ற இரண்டாவது அகிலத்தின் மார்ககத்துக்குள் சறுக்கி விழுந்து விட்டது.''[21]

ஸ்டாலின் முதலாளித்துவ, சோஷலிஸ உலகங்கள் ஒன்றுக்கு ஒன்று எதிரும் புதிருமாய் உள்ளன என்று ஒரு தடவைக்குப் பல தடவை கூறியுள்ளார். ஆனால் பல்வேறு காலகட்டங்களில் உலக அரசியல் சக்திகளை ஸ்தூலமாக ஆராயும்போது, அவர் மாறுகின்ற சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் ஒட்டுமொத்த நிலையிலிருந்து ஆரம்பித்தார். 1927ம் ஆண்டளவில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பதினைந்தாவது மகாநாட்டில் அன்றைய உலக அரசியல் சக்திகளை அவர் பின்வருமாறு பிரித்துக் காட்டினார்:- ''நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்! பூகோளம் முழுவதிலுமுள்ள 190 கோடியே 50 லட்சம் மக்களில், 113 கோடியே 40 லட்சம் பேர் காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் வசிக்கின்றனர். 14 கோடியே 30 லட்சம் மக்கள் சோவியத் யூனியனில் வாழ்கின்றனர். 26 கோடியே 40 லட்சம் பேர் இடைப்பட்ட நாடுகளில் உள்ளனர். காலனிகளையும் சார்பு நாடுகளையும் அடக்கி ஒடுக்கும் பெரிய ஏகாதிபத்திய நாடுகளில் 36 கோடியே 30 லட்சம் பேர் மட்டுமே இருக்கின்றனர்.''[22] மார்ச், 1939ல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 18வது மாநாட்டில் அவர் ஜெர்மனி, இத்தாலி, யப்பான் ஆகியவற்றை ஆக்கிரமிப்பு நாடுகள் என்றும், பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகி

யவற்றை அனுக்கிரமிப்பு நாடுகள் என்றும் வருணித்தார். 1941ல் ஹிட்லர்-ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கிய பின்னர் அது பாஸிஸ-எதிர்ப்பு முகாம் ஒன்றை உருவாக்கி அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளுடன் சேருமாறு ஸ்டாலின் பார்த்துக்கொண்டார். 1942ல் அவர் கூறியதாவது:- ''ஹிட்லர் ஜெர்மனி இதர தேசங்கள் மீது திணித்த யுத்தத்தின் போக்கில், அரசியல் சக்திகளை அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டும் ஓர் எல்லைக்கோடும், எதிரும் புதிருமான இரண்டு முகாங்களும் தோன்றியுள்ளன. அவை இத்தாலி, ஜெர்மன் கூட்டு முகாமும், ஆங்கில, சோவியத், அமெரிக்க கூட்டு முகாமும் ஆகும்.'' அத்துடன் ''உண்மைகளின் தர்க்கமானது வேறு எந்த தர்க்கத்தையும்விட பலம் வாய்ந்தது என்பது தெளிவு.''[23] உண்மையில் இன்றைய உலகில் அத்தகைய ஒரு புதிய இத்தாலி - ஜெர்மன் கூட்டோ அல்லது ஒரு புதிய ஆங்கில - சோவியத் - அமெரிக்க கூட்டோ கிடையாது. பதிலுக்கு சோவியத் யூனியன், அமெரிக்கா என்ற இரு மேலாதிக்க வல்லரசுகளும், அவற்றுக்கு எதிரான உலக மக்களின் ஒரு ஐக்கிய முன்னணியும் இருக்கின்றன. இங்கு நாம் வலியுறுத்த விரும்புவது யாதெனில், ஸ்டாலின் எடுத்த நடவடிக்கை சோவியத் யூனியன் ஒரு சோஷலிஸ நாடு என்ற அந்தஸ்தை சிறிதளவேனும் பாதிக்கவோ அல்லது சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தின் வளர்ச்சியை கிஞ்சித்தும் தடை செய்யவோ இல்லை என்பதையே ஆகும். மாறாக சோஷலிஸ சோவியத் யூனியன், சர்வதேச பாட்டாளி வர்க்கம் இவற்றின் அடிப்படை நலன்களை பாதுகாக்கும் சரியான ஒரே ஒரு மார்க்கம் அவருடைய மார்க்கமே ஆகும். இந்தக் கட்டத்தில் முதலாளித்துவ உலகம் எதிர் சோஷலிஸ உலகம் என்ற வாய்பாட்டை ஸ்டாலின் கறாராகக் கடைப்பிடிக்கவில்லை என்று குற்றம் சாட்ட முடியுமா? அன்றைய கட்டத்தில் உலக அரசியல் சக்திகளை பாஸிஸ முகாம் என்றும் பாசிஸ-எதிர்ப்பு முகாம் என்றும் பிரித்துக் காட்டியதன் மகத்தான முக்கியத்துவத்தை நாம் சந்தேகிக்க முடியுமா? உலக அரசியல் சக்திகளின் பிரிவு உண்மைகளின் தர்க்கத்தை அடிப்படையாகக்

கொண்டல்லாமல், உண்மைகளைக் கடந்த தர்க்கத்தின் அடிப்படையில் ஏற்பட முடியுமா?

ஸ்டாலின் தமது மறைவுக்கு ஓர் ஆண்டுக்கு முன் எழுதிய ''சோவியத் யூனியனில் சோஷலிஸ பொருளாதார பிரச்சினைகள்'' என்ற நூலில் கூறிய ஒரு தத்துவத்தை ஒரு கால் திருப்பிப் பார்ப்போம்:- ''முதலாளித்துவத்துக்கும் சோஷலிஸத்துக்கும் உள்ள முரண்பாடுகள் முதலாளித்துவ நாடுகள் மத்தியிலுள்ள முரண்பாடுகளிலும் பார்க்கப் பலம் வாய்ந்தவை என்று சொல்லப்படுகின்றது. தத்துவ ரீதியில் இது உண்மை என்பது தெரிவு.'' ''இருந்தும் இரண்டாவது உலக யுத்தம் சோவியத் யூனியனுடனான யுத்தமாகத் தொடங்காமல் முதலாளித்துவ நாடுகளுக்கிடையிலான யுத்தமாகவே தொடங்கியது.'' இதன் விளைவாக, சந்தைகளுக்காக முதலாளித்துவ நாடுகள் நடத்தும் போராட்டமும், தமது போட்டியாளர்களை நசுக்கும் அவர்களது நப்பாசையும், முதலாளித்துவ முகாமுக்கும் சோஷலிஸ முகாமுக்கும் உள்ள முரண்பாடுகளை விடப் பலம் வாய்ந்தவை என்பது நடைமுறையில் நிரூபிக்கப் பட்டு விட்டது.'' அவர் மேலும் கூறியதாவது:- முதலாளித்துவ நாடுகளுக்கிடையே யுத்தங்கள் தவிர்க்க முடியாதவை என்ற தத்துவம் இன்னும் பெறுமதியுடையதாகவே இருக்கின்றது.''[24] இன்று குறிப்பாக முதலாளித்துவ நாடான அமெரிக்காவுக்கும் முதலாளித்துவத்தை மீட்டெடுத்த சோவியத் யூனியனுக்கும் இடையிலேயே உலக யுத்தம் தவிர்க்க முடியாததாக உள்ளது. இவற்றிலிருந்து உண்மைகளின் தர்க்கமானது வேறு எந்தத் தர்க்கத்தையும் விட பலம் வாய்ந்தது என்ற கருத்து இன்றும் சரியானதே என்பது தெளிவாகி விட்டது.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர ஆசான்கள் அனைவரும், உலக அரசியல் சக்திகளை வளைந்து கொடுக்காத எந்த ஒரு வாய்பாட்டையும் பின்பற்றாமல், பல்வேறு கட்டங்களிலும் நிகழும் சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் ஒட்டு மொத்த நிலைமையை யதார்த்தமாகவும் ஆழமாகவும் ஆராய்ந்து, அந்த ஆய்வின் அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டியுள்ளார்கள். நமது சகாப்தத்தின் மிகப்பெரும் மார்க்

ஸிஸவாதியான தலைவர் மாஓ இன்றைய கால அரசியல் சக்திகளை மூன்று உலகங்களாக வேறுபடுத்தி காட்டியது நீண்ட காலமாக உலகின் அடிப்படை முரண்பாடுகளையும் அவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் அவதானிக்கவும் ஆராயவும் மார்க்ஸிஸத்தை அவர் ஆக்கபூர்வமாகப் பிரயோகித்ததன் ஒரு வரலாற்றுப் படைப்பே ஆகும்.

*1940*ல் வெளியான "**புதிய ஜனநாயகம் பற்றி**" என்ற தமது படைப்பில் தலைவர் மாஓ அவர்கள் முதலாம் உலக யுத்தத்துக்குப் பின்னர், சிறப்பாக அக்டோபர் புரட்சிக்குப் பின்னர், ஒவ்வொரு தேசிய விடுதலை இயக்கமும் பாட்டாளி வர்க்க சோஷலிஸ உலகப் புரட்சியின் ஒரு பகுதி என்ற லெனின், ஸ்டாலின் ஆகியோரின் தத்துவத்தை கையேற்று, பாதுகாத்து, விருத்தி செய்தார். அவர் தெட்டத் தெளிவாகச் சுட்டிக் காட்டியதாவது:- "**அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு தேசத்தில் எந்த வர்க்கங்கள், எந்தக் கட்சிகள், அல்லது எந்த தனிநபர்கள் புரட்சியில் சேர்ந்தாலும் பரவாயில்லை; அவர்கள் இதை உணர்ந்து கொண்டாலும் சரி அல்லது புரிந்து கொண்டாலும் சரி பரவாயில்லை. அவர்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் வரையில் அவர்களுடைய புரட்சி பாட்டாளி வர்க்க சோஷலிஸ உலகப் புரட்சியின் ஒரு பகுதியாகும். அவர்கள் அதன் நேச அணி ஆவர்.**"[25] தலைவர் மாஓவின் இந்த ஆய்வு சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் யதார்த்த உண்மைகளுக்கு இசைவானதா? உண்மையில் இசைவானதே. யாரும் இதைச் சந்தேகிக்க மாட்டார்கள். ஏனென்றால், குறிப்பாக இந்தக் கண்ணோட்டத்திலிருந்து தொடங்கித் தான், யப்பானிய ஏகாதிபத்தியம் சீனவை ஆக்கிரமித்த காலத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சி சியாங் கை ஷேக்கின் கோமிந்தாங் உட்பட, யப்பானிய-எதிர்ப்பு சக்திகள் அனைத்துடனும் ஓர் ஐக்கிய முன்னணியை அமைத்து யப்பானுக்கு எதிரான யுத்தத்தில் வாகை சூடியது. அதே போல, அந்த யுத்தத்துக்குப் பிறகு ஐக்கியப்படக்கூடிய சகல ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜனநாயக சக்திகளுடனும் ஐக்கியப்பட்டு, கம்யூனிஸ்ட் கட்சி கோமிந்தாங் பிற்போக்கு ஆட்சியை தூக்கிவீசிவிட்டு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் சீன மக்கள் குடியரசை ஸ்தாபித்தது.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்த சில காலத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு இடைவிடாத சோவியத் எதிர்ப்புக் கூக்குரல் எழுப்பி வந்தது. தலைவர் மாஓ அவர்கள் இப் பிதற்றலின் உண்மையான நோக்கத்தை ஐயம்திரிபற அம்பலப்படுத்தினர். அவர் சுட்டிக் காட்டியதாவது:- ''அமெரிக்காவும் சோவியத் யூனியனும் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்காவைச் சேர்ந்த பல முதலாளித்துவ, காலனி, அரைக் காலனி நாடுகள் உட்பட்ட ஒரு பிரமாண்டமான பிரதேசத்தால் பிரிக்கப்பட்டுள்ளன.'' ''தற்போது சோவியத் எதிர்ப்பு யுத்தம் ஒன்றை நடத்துவது பற்றிய அமெரிக்க சுலோகத்தின் உண்மையான தாற்பரியம் என்னவெனில், அமெரிக்க மக்களை அடக்கி ஒடுக்குவதும், எஞ்சிய முதலாளித்துவ உலகம் பூராவும் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளை விஸ்தரிப்பதும் ஆகும்.''[26] தலைவர் மாஓ அவர்கள் அமெரிக்க மக்களையும், அமெரிக்க ஆக்கிரமிப்பின் அச்சுறுத்தலை எதிர்நோக்கும் சகல தேசங்களையும் மக்களையும் ஐக்கியப்பட்டு, அமெரிக்கப் பிற்போக்குவாதிகளும் அவர்களின் வேட்டை நாய்களும் தொடுக்கும் தாக்குதலுக்கு எதிரடி கொடுக்கும்படி அறைகூவல் விடுத்தார். தலைவர் மாஓவின் இந்த ஆய்வு அன்றைய சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் யதார்த்த நிலைமைகளுக்கு இசைவானதா? உண்மையில் இசைவானதே. யாரும் இதை சந்தேகிக்க முடியாது. காரணம், அன்றைய சம்பவங்களும் பிந்திய நிகழ்ச்சிகளும் அவருடைய இந்த ஆய்வு சரி என்பதை ஊர்ஜிதம் செய்துவிட்டன.

1956 சுயெஸ் கால்வாய் சம்பவம் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையில் கூர்மையாகிவரும் முரண்பாடுகளை அம்பலப்படுத்தியது. அப்பொழுது தலைவர் மாஓ சுட்டிக்காட்டியதாவது:- ''இந்தச் சம்பவத்திலிருந்து இன்றைய உலகில் போராட்டத்தின் குவிவு மையத்தை நாம் குத்திட்டுக் காட்டலாம். ஏகாதிபத்திய நாடுகளுக்கும் சோஷலிஸ நாடுகளுக்கும் உள்ள முரண்பாடு மிகக் கூர்மையானது என்பது நிச்சயம். ஆனால் ஏகாதிபத்திய நாடுகள் தற்போது கம்யூனிஸத்தை எதிர்க்கும் போர்வையில் வேறு வேறு பிரதேசங்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஒன்றுடனொன்று போட்டியிட்டுக் கொண்டி

ருக்கின்றன. ......மத்திய கிழக்கில் இரண்டு வகை முரண்பாடு களும் மூன்று வகைச் சக்திகளும் மோதலில் ஈடுபட்டுள்ளன. இரண்டு வகை முரண்பாடுகள் என்பவை:- ஒன்று, வேறு வேறு ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையிலுள்ள முரண்பாடுகள். அதாவது, அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் உள்ள முரண்பாடும், அமெரிக்காவுக்கும் பிரான்சுக்கும் உள்ள முரண்பாடும் ஆகும். மற்றது, ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் உள்ள முரண்பாடுகள். மூன்று வகைச் சக்திகள் என்பவை:- ஒன்று, மிகப் பெரிய ஏகாதிபத்திய வல்லரசான அமெரிக்கா. இரண்டு, இரண்டாந்தர ஏகாதிபத்திய வல்லரசுகளான பிரிட்டனும், பிரான்சும். மூன்று, அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்கள்.''[27] தலைவர் மாஓவின் இந்த ஆய்வு அன்றைய சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் யதார்த்த நிலைமைகளுக்கு இசைவானதா? ஆம், உண்மையில் இசைவானதே. இதை யாரும் சந்தேகிக்க முடியாது. ஏனெனில் அன்றைய சம்பவங்களும் பிந்திய நிகழ்ச்சிகளும் அவருடைய ஆய்வு சரி என்பதை நிரூபித்து விட்டன.

தலைவர் மாஓவின் மூன்று வகைச் சக்திகள் பற்றிய இந்த ஆய்வே அவருடைய மூன்று உலகம் பற்றிய தத்துவத்தின் முன்னோடி என்பதைக் கண்டுகொள்வது கஷ்டமல்ல. இரண்டுக்குமுள்ள வித்தியாசம் பிரதானமாக அப்பொழுது சோஷலிஸ முகாம் ஒன்று, எத்தகைய நிலையிலென்றாலும், இருந்ததேயாகும். பின்னர் குருசேவ்-பிறெஸ்னேவ் கும்பல் கம்யூனிஸ இயக்கத்திற்குச் செய்த முழுத் துரோகத்தினால், சோவியத் யூனியனில் முதலாளித்துவம் மீட்கப்பட்டு, அது சீரழிந்து, ஒரு சமூக-ஏகாதிபத்தியமாக மாறிவிட்டது. உண்மையில் சீனாவும் வேறு சோஷலிஸ நாடுகளும் இருக்கின்றன. ஆனால் முன்பு இருந்த சோஷலிஸ முகாம் இப்பொழுது இல்லை. அத்துடன் இரண்டாவது தடவையாக அதை அமைப்பதற்கும் வரலாற்று நிலைமைகள் அனுமதிக்கவில்லை. அதற்கிடையில் ஏகாதிபத்திய முகாமிலிருந்த பல நாடுகள் அமெரிக்காவிடமிருந்து ஆணை பெறுவதை நிறுத்தி, அதை எதிர்த்து பகிரங்கமாகக்கூட எழுந்து நிற்கின்றன. கடினமான போராட்டங்கள் மூலம் ஆசிய, ஆபி

ரிக்க, லத்தீன் அமெரிக்க கண்டங்களைச் சேர்ந்த பெரும்பாலான காலனி, அரைக்காலனி நாடுகள் ஒன்றன் பின் ஒன்ருக சுதந்திரப் பிரகடனம் செய்தன. பெரும் குழப்பம், பெரும் பிரிவு, பெரும் புநர் சேர்க்கை என்ற கட்டத்துக் கூடாகப் போய் உலக அரசியல் சக்திகள் இன்று ஒரு புதிய வரலாற்று நிலைமையை எதிர்நோக்குகின்றன. 1960ம் ஆண்டுகளில் சோவியத் ஆளும் கும்பல் சோஷலிஸத்துக்கு துரோகம் செய்யும் பாதையில் வெகுதூரம் சென்றுவிட்டது. இருந்தும் தற்காலிகமாக அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக மக்களின் வன்ம எதிரியாக இருந்தது. பின்னர் அடுத்தடுத்து நிகழ்ந்த பல பாரதூரமான சம்பவங்களைத் தொடர்ந்து சோவியத் யூனியன், அமெரிக்கா ஒரு காலத்தில் உலகத்தை அச்சுறுத்தியது போன்ற ஒரு ஏகாதிபத்திய வல்லரசாக மாறியது மட்டுமல்ல, இன்னெரு உலக யுத்தத்தின் மிக அபாயகரமான ஊற்றுமூலமாகவும் மாறிவிட்டது. சோவியத் ஆளும் கும்பலின் துரோகம் தவிர்க்க முடியாதபடி சர்வதேச தொழிலாளர் இயக்கத்திலும், உலகின் ஏகாதிபத்திய-எதிர்ப்புப் புரட்சிப் போராட்ட அணிகளிலும் பல்வேறு அளவுக்கு பிளவுகளை ஏற்படுத்தி, தற்காலிகமாகக் கஷ்டங்களையும் விளைவித்தது. இதைத் தவிர்சகும் வழி யாது? இக் காலகட்டத்தில் நடைபெறும் சம்பவங்களுக்கு முன் கண்ணை மூடிக்கொண்டு, முதலாளித்துவ முகாம், சோஸலிஸ முகாம் இரண்டும் இன்னும் இருக்கின்றன என மற்றவர்களை நம்பச் செய்து, இந்த இரு முகாங்களுக் கிடையில் உள்ள எதிர்ப்பே உலக அரசியலில் பிரதான முரண்பாடு என எண்ணிக் கொண்டிருப்பதா? சோவியத் யூனியனையும் அதற்கு முன் மண்டியிடும் நாடுகளையும் சோஷலிஸ முகாமிலிருந்து விலக்கிவிட்டு, அதே வேளையில் பழைய வாய்பாட்டைப் படித்துக் கொண்டு, சோஷலிஸ நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகள் எல்லாம் முதலாளித்துவ உலகைச் சேர்ந்த வேறுபடுத்தப்பட முடியாத வெறும் பிற்போக்குப் பிண்டங்கள் என்று எண்ணிக் கொண்டிருக்க முடியுமா? உண்மையில் இது உலக மக்கள் உண்மைகளை உணர்வதையும், முன்னேறும் சரியான மார்க்கத்தைக் காண்பதையும் தான் அசாத்தியமாக்கிவிடும். இன்றைய சர்வதேச நிலைமையில் ஏற்பட்டு

வரும் பூதாகரமான மாற்றங்களும் பல்வேறு நாடுகளின் மக்கள் சக்தியிலும் புரட்சிக்கான அம்சங்களிலும் ஏற்பட்டுவரும் நாளொருவண்ண வளர்ச்சியும், நமக்கும், நமது நண்பர்களுக்கும், நமது எதிரிகளுக்கும் இடையில் நிலவும் புதிய உறவுமுறைக் கிணங்க சர்வதேச பாட்டாளி வர்க்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் தேவையான புதிய கோள யுத்த தந்திரம் ஒன்றை உருவாக்குவதற்காக, உலக அரசியல் சக்திகளை புதிதாக வகைப்படுத்திக் கொள்ளும்படி கோருகின்றன. தலைவர் மாஓவின் மூன்று உலகம் பற்றிய தத்துவம் குறிப்பாக இந்தக் கோரிக்கைக்கு ஈடு கொடுக்கின்றது.

இந்த தத்துவம் பின்வருவனவற்றைத் தெளிவு படுத்துகின்றது:- சோவியத் யூனியன், அமெரிக்கா என்ற இரு ஏகாதிபத்திய மேலாதிக்க வல்லரசுகளும் முதலாவது உலகாக அமைகின்றன. அவை மிகப் பெரிய சர்வதேச சுரண்டல்காரராகவும், ஒடுக்குமுறையாளராகவும் ஆக்கிரமிப்பாளராகவும், உலக மக்களின் பொது எதிரிகளாகவும் மாறியுள்ளன. இவற்றுக்கு இடையிலான போட்டி புதிய உலக யுத்தம் ஒன்றுக்கு வழிகோலுவது நிச்சயம். மேலாதிக்க வல்லரசுகள் இரண்டுக்கும் இடையில் உலக மேலாதிக்கத்துக்காக நடைபெறும் போட்டி, அவற்றால் சகல நாட்டு மக்களுக்கும் வரும் ஆபத்து, மேற்படி மக்கள் அவற்றுக்குக் காட்டும் எதிர்ப்பு - இவை எல்லாம் இன்றைய உலக அரசியலில் கேந்திரப் பிரச்சினையாகி உள்ளன. சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் கோட்டையாக விளங்கும் சோஷலிஸ நாடுகளும், உலக ஜனத்தொகையில் ஏகப் பெரும்பான்மையாக விளங்குகின்ற, மிக மோசமாகச் சுரண்டப்பட்டு, அடக்கி ஒடுக்கப்படுகின்ற தேசங்களும் மூன்றாவது உலகமாக அமைகின்றன. அவை இரண்டு மேலாதிக்கவாதிகளுக்கும் எதிரான போராட்டத்தின் முன்வரிசையில் நிற்கின்றன. ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்க வாதத்துக்கும் எதிரான உலகம் தழுவிய போராட்டத்தின் பிரதான படையாக விளங்குகின்றன.

இந்த இரு உலகங்களுக்கும் இடைப்பட்ட அபிவிருத்தி அடைந்த நாடுகள் இரண்டாவது உலகமாக அமைகின்றன.

அவை அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களை அடக்கியும் சுரண்டியும் வருகின்றன. அதேவேளையில் மேலாதிக்க வல்லரசுகளால் கட்டுப்படுத்தப்பட்டும் இம்சிக்கப்பட்டும் வருகின்றன. அவை இரட்டைக் குணம்சம் உடையவை. முதலாவது உலகம் மூன்ருவது உலகம் இரண்டுடனும் முரண்பாடு உடையவை. ஆனுல் அவை மேலாதிக்க வாதத்துக்கு எதிரான போராட்டத்தில் மூன்ருவது உலகம் தன்பக்கம் வென்றெடுக்கக்கூடிய அல்லது ஐக்கியப்படக்கூடிய ஒரு சக்தியாக இன்னும் விளங்குகின்றன. உலகம் பூராவுமுள்ள மக்கள் ஒரு தரப்பிலும், இரு மேலாதிக்க வல்லரசுகள் எதிர் தரப்பிலும் நிற்கும் சமகால உலகில் மிக முக்கியமான வர்க்கப் போராட்டம் சம்பந்தமான யுத்ததந்திர நிலைமையை இத் தத்துவம் தொகுத்துக் கூறுகின்றது. பல்வேறு நாடுகளின் உள்நிலவும் வர்க்கப் போராட்டங்களும் உண்மையில் கோள ரீதியான வர்க்கப் போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாதவை. ஆகவே இந்த மூன்று உலகம் பற்றிய தத்துவமானது சமகால உலகில் காணும் பல்வேறு அடிப்படை முரண்பாடுகளின் மிக அடக்கமான தொகுப்பாக திகழ்கிறது. தலைவர் மாஓ அவர்களின் இந்த விஞ்ஞான ரீதியான தத்துவம் - ஏகாதிபத்தியத்தின் அசமத்வமான வளர்ச்சியும், தவிர்க்க முடியாதபடி யுத்தத்துக்கு இட்டுச் செல்லும் முதலாளித்துவ நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளும் சம்பந்தமான தத்துவங்கள், சமூக-ஏகாதிபத்தியம் பற்றிய தத்துவம், அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களின் போராட்டம் உலகப் பாட்டாளி வர்க்க சோஷலிஸ புரட்சியின் ஒரு முக்கியமான பகுதி என்பது சம்பந்தமான தத்துவம், சர்வதேச பாட்டாளி வர்க்கம், சோஷலிஸ நாடுகள், தேசிய விடுதலை இயக்கங்கள் ஆகியவற்றுக்கிடையில் பரஸ்பர ஆதரவு பற்றிய தத்துவம், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் யுத்ததந்திர, தந்திரோபாயங்கள் சம்பந்தமான தத்துவம் ஆகிய எல்லாவற்றையும் செழுமைப்படுத்தி வளர்த்துள்ளது. இவை எல்லாம் மார்க்ஸிஸம் - லெனினிஸத்துக்கு வழங்கப்பட்ட பிரதான பங்களிப்புகளாக திகழ்கின்றன.

தலைவர் மாஓவின் ஒளிவீசும் இந்தத் தத்துவத்தை சோவியத் சமூக ஏகாதிபத்தியவாதிகள் நச்சுத்தனமாகத்

தாக்குவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. துரோகிகளும் ஆக்கிரமிப்பாளரும் தாம் எத்தகையவர்கள் என்பதை ஏற்றுக்கொள்வர் என எவ்வாறு எதிர்பார்க்க முடியாதோ, அவ்வாறு தமது ஆட்சியிலுள்ள சோவியத் யூனியன் ஒரு ஏகாதிபத்திய, மேலாதிக்க வல்லரசாகவும், இன்னொரு உலக யுத்தத்தின் அதிபயங்கர ஊற்றுமூலமாகவும் மாறிவிட்டதை அங்கீகரிப்பர் என எதிர்பார்க்க முடியாது. மூன்று உலகம் பற்றிய தத்துவம் வர்க்கப் போராட்டத்தை கைகழுவி விடுகின்றது, சோஷலிஸ நாடுகளையும் முதலாளித்துவ நாடுகளையும் ஒன்றாக போட்டுக் குழப்புகின்றது என்றெல்லாம் கூறி சோவியத்-சமூக ஏகாதிபத்தியவாதிகள் இத் தத்துவத்தை பிசாசு போலத் தாக்குகின்றனர். அவர்களுடைய அவதூறு மாபெரும் மார்க்ஸிஸவாதியான தலைவர் மாஓ அவர்களுக்கும் மகத்தான சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் எதிராக பொழியப்படுவது மாத்திரமல்ல, பெருமைக்குரிய மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோருக்கு எதிராகவும் வீசப்படுகின்றது. ஏனெனில் நாம் முன்பு கண்டது போல, கோட்பாட்டு ரீதியில் தலைவர் மாஓவின் தத்துவம் மார்க்ஸும், ஏங்கெல்ஸும் ரஷிய ஜார் சாம்ராஜ்யம் பற்றிய தமது அணுகுமுறையின் பிரகாரம் 19ம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் ஐரோப்பாவின் அரசியல் சக்திகளை வேறுபடுத்திப் பார்ப்பதற்கு முன்வைத்த வரையறைக்கு இசைவானதாகும். அதேபோல லெனின் முதலாவது உலக யுத்தத்துக்குப் பின் உலக நாடுகளை மூன்றாக வகை செய்ததற்கும், ஸ்டாலின் இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன்னர் ஆக்கிரமிப்பு நாடுகள் அனாக்கிரமிப்பு நாடுகள் என்றும், யுத்தத்தின் போது பாஸிஸ முகாம், பாஸிஸ - எதிர்ப்பு முகாம் என்றும் பிரித்துக் காட்டியதற்கும் பொருத்தமானதாகும். இன்னும் உலக அரசியல் சக்திகளை வேறுபடுத்தும் அவர்களது தத்துவங்களின் தர்க்க ரீதியான வளர்ச்சியாகவும் மாஓவின் தத்துவம் விளங்குகின்றது. இந்த மூன்று உலக தத்துவத்தை வெறிபிடித்த முறையில் வசைபாடும் நபர்கள் லெனினுடைய லட்சியத்தின் ''விசுவாசமான வாரிசுகள்'' என்று தம்மைத்தாமே உரிமை பாராட்டுவது உண்மையே.

ஆனால் ஒருவரை எடைபோட்டுப் பார்க்கும் போது, அவருடைய செயல்களைக் கொண்டு தீர்மானிக்காமல், அவருடைய சொற்களை மட்டும் கொண்டு தீர்மானிக்கலாமா? அவர்களுடைய நடவடிக்கைகளைக் கொண்டு நாம் அவர்களை எடைபோட்டுப் பார்க்கும்போது, வர்க்கப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கு துரோகம் செய்தவர்களும், ஒரு சோஷலிஸ நாட்டைச் சீர்குலைத்து அதை ஒரு முதலாளித்துவ நாடாக மாற்றியவர்களும் அவர்கள் தான் என்பது தெளிவாகவில்லையா?

நமது சொந்த நாட்டில்கூட தலைவர் மாஓவின் மூன்று உலகம் பற்றிய தத்துவத்தை பிசாசு போல எதிர்க்கும் பேர்வளிகள் இல்லாமல் இல்லை. அவர்கள் வாங் ஹுங் வென், சாங் சுன் சியௌ, சியாங் சிங், யாஓ வென் யுவான் என்ற ''நால்வர் கோஷ்டி'' அன்றி வேறுயாரும் அல்ல. மிகவும் ''புரட்சிகரமான'' பதாகை ஒன்றைத் தொங்கவிட்டுக் கொண்டு, அவர்கள் மூன்றுவது உலகுக்கான சீனாவின் உதவியை எதிர்த்தனர். ஐக்கியப்படக்கூடிய சக்திகள் அனைத்துடனும் ஐக்கியப்படும் சீனாவின் முயற்சியை எதிர்த்தனர். மிகவும் பயங்கரமான எதிரிக்கும் நாம் அடிபோடுவதை எதிர்த்தனர். மேலாதிக்கவாதத்துக்கு எதிராக ஒரு சர்வதேச ஐக்கிய முன்னணி அமைப்பதற்கு எதிராகசதி செய்ய வீணே முயன்று, சீனாவின் மேலாதிக்கவாத எதிர்ப்புப் போராட்டத்துக்கு குழிபறித்து, இவற்றின் மூலம் சோவியத் சமூக-ஏகாதிபத்தியத்துக்கு பேருதவி புரிந்தார்கள். அவர்களுடைய சீர்குலைவு நடவடிக்கைகள் ஓரளவுக்கு பாதகமான விளைவை ஏற்படுத்திய போதிலும், நமது கட்சியும் அரசாங்கமும் வெளிவிவகாரங்களில் தலைவர் மாஓ வகுத்த புரட்சிகர மார்க்கத்தை ஆட்டம் அசைவின்றி பின்பற்றி வருகின்றன. ''நால்வர் கோஷ்டி'' எவ்விதத்திலும் சீன மக்களை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. அவர்கள் சீன மக்களால் தூக்கி வீசப்பட்ட துரோகிகள் ஆவர்.

சோவியத் சமூக - ஏகாதிபத்தியவாதிகளும், ''நால்வர் கோஷ்டி''யும் இம் மூன்று உலகம் பற்றிய தத்துவத்தை எவ்வாறு தூற்றி வசைபாடிய போதிலும், இன்றைய உலக அரசியலில் உண்மையில் நடைபெற்றுவரும் சம்பவங்கள்

இதன் மதிப்பை மென்மேலும் நிரூபித்து வருகின்றன' எனவே அதன் தாக்கம் அதைமென்மேலும் உணரச் செய்கிறது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 11வது தேசிய காங்கிரசுக்கு சமர்ப்பித்த தமது அரசியல் அறிக்கையில் தலைவர் ஹுவா குவோ பெங் கூறியதாவது:- ''தலைவர் மாஓ அவர்களின் மூன்று உலகம் பற்றிய தத்துவம் இன்றைய சர்வதேச போராட்டத்துக்கு ஒரு சரியான திசை மார்க்கத்தைச் சுட்டிக்காட்டி, பிரதான புரட்சி சக்திகள், பிரதான எதிரிகள், வென்றெடுத்து ஐக்கியப்படுத்தக்கூடிய நடுநிலைமை சக்திகள் ஆகியவற்றை தெளிவாக வரையறுத்துக் காட்டி, உலக அரங்கில் பிரதான எதிரிகளுக்கு எதிரான வர்க்கப் போராட்டங்களில் ஐக்கியப்படக்கூடிய சகல சக்திகளுடனும் ஐக்கியப்பட்டு, இயன்றளவு விசாலமான ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்க சர்வதேச பாட்டாளி வர்க்கத்துக்கு உதவுகின்றது.'' இந்த தத்துவம் சர்வதேச பாட்டாளி வர்க்கத்தினதும் அடக்கிஒடுக்கப்பட்ட உலகத் தேசங்கள் மக்களினதும் சமகாலப் போராட்டங்களின் யுத்ததந்திர தேவைகளுக்கு ஈடுகொடுப்பது மட்டுமல்ல, சோஷலிஸம், கம்யூனிஸம் இவற்றின் வெற்றிக்கான போராட்டத்தின் யுத்ததந்திர தேவைகளுக்கும் உதவுகின்றது. உலக மக்கள் ஒரு உறுதியான, தெளிவான கொள்கையின் வழிகாட்டலில் ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்க வாதத்துக்கும் எதிரான போராட்டத்தில் மகோன்னத வெற்றிகளுக்காகப் பாடுபடும் கூட்டுமுயற்சியிலும் அது அவர்களுக்கு உற்சாகம் ஊட்டிக் கொண்டே இருக்கும்.

## சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய இரு மேலாதிக்க வல்லரசுகளும் உலக மக்களின் பொது எதிரிகள்

## சோவியத் யூனியன் உலக யுத்தத்தின் மிக ஆபத்தான ஊற்றுமூலம்

ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சி வரலாற்றில் இரண்டு மேலாதிக்க வல்லரசுகளின் உதயம் ஒரு புதிய தோற்றப்பாடாகும். ஏகாதிபத்தியத்தின் அசமத்துவ வளர்ச்சி தவிர்க்க

முடியாதபடி மோதல்களுக்கும் யுத்தங்களுக்கும் வழி கோலு கின்றது. அவை திரும்பவும் இந்த சமத்துவமற்ற வளர்ச்சிக் குப் பழுவேற்றி, இளைத்துப்போன ஏகாதிபத்திய வல்லரசுக ளுக்கு மேல் ஏகாதிபத்திய மேலாதிக்க வல் ரசுகளின் ஆதிக் கத்தை கொண்டு வருகின்றன. ''ஏகாதிபத்தியம் என்பது உல கத் தேசங்களுக்கு மேல் ஒரு சில பெரு வல்லரசுகளின் மென மேலும் அதிகரித்துவரும் ஒடுக்குமுறை என்று அர்த்தமுடை யது. தேசங்களின் ஒடுக்குமுறையை விஸ்தரிக்கவும் பலப்படுத்த வும் அவ்வல்லரசுகளுக்கு இடையிலான ஒரு யுத்தங்களின் கால கட்டம் என்று அர்த்தமுடையது''[28] என லெனின் கூறினார். விரல்விட்டு எண்ணக்கூடியதாக இருந்த ஏகாதிபத்திய வல் லரசுகள் இன்று சோவியத் யூனியன், அமெரிக்கா என்ற இரண்டு மேலாதிக்க வல்லரசுகளாகச் சுருங்கிவிட்டன. அவை உலக மேலாதிக்கத்துக்காகப் போட்டியிடக்கூடிய ஆற்றலு டையவை. அத்துடன் ஏனைய ஏகாதிபத்திய வல்லரசுகள் எல்லாம் இரண்டாம்தர அல்லது மூன்றும்தர வல்லரசுகளின் நிலைக்குக் கீழே தள்ளப்பட்டுவிட்டன. ஒரு மேலாதிக்க வல் லரசுக்கு உரிய விசேஷ லட்சணங்கள் பின்வருமாறு:- அதன் அரசு யந்திரம் அதன் செறிந்த வடிவில் ஏகபோக மூலதனத் தால் கட்டுப்படுத்தப்படுகின்றது. பொருளாதாரச் சுரண்ட லையும் அரசியல் ஒடுக்குமுறையையும் நடத்தவும், பூகோள ரீதியில் ராணுவக் கட்டுப்பாட்டுக்காகப் பாடுபடவும் இதர நாடுகளின் பொருளாதார, ராணுவ பலத்திலும் பார்க்க பெரிதும் மேம்பட்ட பொருளாதார, ராணுவ பலத்தை அது சார்ந்துள்ளது. ஒவ்வொரு மேலாதிக்க வல்லரசும் பிரத்தி யேக உலக மேலாதிக்கத்தை குறிக்கோளாக வைத்து, அதற் காக புதிய உலக யுத்தம் ஒன்றுக்கு மூர்க்கத்தனமான தயாரிப் புகளில் ஈடுபடுகின்றது.

ஒரு சில பெரு வல்லரசுகள் உலக ஆதிக்கத்தைப் பெற முயன்ற சம்பவங்களை ஏகாதிபத்திய வரலாற்றிலிருந்து நாம் எடுத்துக்காட்ட முடியும். ஆனால் அவை இன்றைய சோவி யத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இணையாக மாட்டா. இந்த இரு நாடுகளுக்குமிடையில் மேலாதிக்கத்துக்காக நடை

பெறும் போட்டி இரண்டாவது உலக யுத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வளர்ச்சிகளின் விசித்திரமான வெளிப் பாடாகும்.

யுத்த பிற்காலத்தில் அமெரிக்க ஏகபோக மூலதனத்தின் செறிவும் அதன் விரிவும் பிரமிக்கத்தக்க எல்லைகளை எட்டி யுள்ளன. அண்மைக்காலப் புள்ளிவிபரங்கள் காட்டுவது போல, அமெரிக்காவிலுள்ள 500 மிகப் பெரிய தொழில் துறைக் கூட்டுஸ்தாபனங்களில் 1976ல் விற்பனை மூலம் தலா 1000 கோடி டாலர் சம்பாதித்த ராட்சஸ நிறுவனங்கள் 12 இருந்தன. அவற்றின் மொத்தச் சொத்தும் விற்பனையும் முறையே 27 வீதமும் 29 வீதமும் ஆகும். நாட்டின் 50 மிகப் பெரிய வங்கிகளில் 10 ராட்சஸ வங்கிகளின் சொத்துக ளும் வைப்புகளும் 61 வீதமாகும்.[29] யுத்தத்தின் பின் பெரி தும் செறிவுஅடைந்த அமெரிக்காவின் மூலதன ஏற்றுமதி கடந்த 20 ஆண்டுகளில் வாயுவேகம் மனோவேகத்தில் அதி கரித்துள்ளது. அதே சமயம் 1950ல் 1180 கோடி டாலராக இருந்த நேரடித் தனியார் வெளிநாட்டு முதலீடுகள் 1976ல் 13,720 கோடியாக உயர்ந்து விட்டன.[30] ஏகபோக மூல தனத்தின் உயர்ந்த, வேகமான செறிவு அமெரிக்கா ஒரு மேலாதிக்க வல்லரசாவதற்குரிய பொருளாதார அத்திவா ரத்தை வழங்கியது. யுத்தத்தில் பெற்ற பொருளாதார, ராணுவ மேம்பாடு, அணு ஆயுதங்களில் அது அனுபவித்து வந்த தனியுரிமை, பலதரப்பட்ட நுட்பமான ராணுவ விஞ் ஞான, தொழில் நுட்பவியல், அது உருவாக்கிய உலக ரீதி யான டாலர்-மைய நாணய முறை, வட அமரிக்கா, லத்தின் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா, ஓஷானியா ஆகியவற்றில் அது கட்டுப்படுத்தும் பல்வேறு ராணுவக் கூட்டணிகள்— இவை எல்லாவற்றையும் பயன்படுத்தி அமெரிக்க ஏகாதிபத் தியம் முதலாளித்துவ உலகில் முன்னென்றும் கண்டிராத எஜமானனின் அந்தஸ்தை பெற்றுக் கொண்டது. இதர முத லாளித்துவ நாடுகள் அனைத்தையும் தனது காலடியில் வைத் தது. பல ஆண்டுகளாக அது உலகப் பொலீஸ் படையாக செயல்பட்டு, (அமெரிக்க மக்கள் உட்பட்ட) புரட்சிகர உலக மக்களுக்கும், ஒடுக்கப்பட்ட உலகத் தேசங்களுக்கும் எதிராக

எண்ணற்ற இரத்தம் சிந்தும் குற்றங்களை இழைத்தது. ஆனல் உலக மக்களின் இந்த எதிரி எவ்வளவு தான் கொக்கரித்தாலும், கைகட்டிக் கொண்டு வெற்றியீட்டலாம் என்று கணக்கும் போட்ட ஆக்கிரமிப்பு யுத்தங்களில் அது ஆசிய மக்களிடமிருந்து மரண அடிகளை வாங்கிக் கட்டியது. வீரமிக்க கொரிய மக்கள் அமெரிக்கா வெல்லப்பட முடியாதது என்ற கட்டுக்கதையை முதல் முதலாகப் புட்டுக் காட்டினர். அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், தேச விமோசனத்துக்காகவும் நடத்திய தமது யுத்தத்தில் வியட்நாம், கம்புச்சியா, லாவோஸ் மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை ராணுவ, அரசியல், பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கடித்து, அதன் வீழ்ச்சியைத் துரிதப்படுத்தினர். இதற்கிடையில் மேற்கு ஐரோப்பாவும், யப்பானும் விரைவாக மீட்சி பெற்று, பொருளாதார பலத்தில் மேம்பட்டு, அமெரிக்காவை எதிர்த்துப் போட்டியிடுவதற்காக தமது நிலைமையை கெட்டியாக்கிக் கொண்டன. இவ்வாறு, அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகில் இனிமேல் தான் நினைத்தமாதிரி நடக்க முடியாது என்பதை ஒப்புக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. இருந்தும், முதலாளித்துவ உலகில் மிகவும் பலம்வாய்ந்த நாடாக விளங்குவதோடு, தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும் அது பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது.

அமெரிக்கா யுத்தங்களில் மூழ்கி, அதன் பலம் குன்றத் தொடங்கியதும், சோவியத் சமூக ஏகாதிபத்தியம் பின்னணியிலிருந்து முன்னணிக்கு வந்தது. 30 ஆண்டுகளுக்கு மேலாக சோவியத் மக்கள் சோஷலிஸ நிர்மாணத்தில் ஈட்டிய கனிகளை அபகரித்த குருசேவ்-பிறெஸ்னேவ் துரோகக் கும்பல் ஒரு சோஷலிஸ வல்லரசை படிப்படியாக முதலாளித்துவ வல்லரசாக மாற்றியமைத்தது. சோவியத் யூனியன் சமாதானமான முறையில் சோஷலிஸத்திலிருந்து முதலாளித்துவமாய் மாறுவதைக் காண்பது ஏகாதிபத்தியவாதிகளின் நீண்டகாலக் கனவாகும். ஏகாதிபத்தியத்தின் அசமத்துவ வளர்ச்சி விதிக்கு இணங்க உலக மேலாதிக்கத்துக்கான போட்டியாக முடிந்த இந்தப் பரிணமம் அவர்களை ஒரு பிரமாண்டமான, அடக்கமுடியாத எதிரியின் முன் கொண்டுவந்து நேருக்குநேர்

நிறுத்தியது. நாம் அனைவரும் அறிந்தது போல, சோவியத் திரிபுவாத துரோகக் கும்பல் உயர்ந்தளவில் மத்தியப்படுத்தப் பட்ட ஒரு சோஷலிஸ பொருளாதாரத்தை, அமெரிக்காவில் கூட அடைய முடியாத அளவு மத்தியப்படுத்தப்பட்ட ஓர் அரசு - ஏகபோக முதலாளித்துவ பொருளாதார மாக மாற்றியது. வியட்நாம், கம்புச்சியா, லாவோஸ் நாடு களில் தனது ஆக்கிரமிப்பு யுத்தச் சகதியில் அமெரிக்கா அமிழ்ந்திருந்த 10 வருட காலத்தில், சோவியத் யூனியன் அதன் சொந்தப் பலத்தை ஊக்கமாக வளர்த்து, தனக்கும் அமெரிக்காவுக்கும் பொருளாதார வளர்ச்சியில் நிலவிய இடை வெளியைக் குறுக்கி, அதன் ராணுவ பலத்தை விரிவாக்கிக் கொண்டது. அணு ஆயுதத் துறையில் அது அமெரிக்காவை எட்டிப்பிடித்ததோடு வழமையான ஆயுத வகைகளில் அதைத தாண்டிவிட்டது. அதன் ராணுவ, பொருளாதார பலம் அதி கரிக்க அதிகரிக்க, சோவியத் சமூக ஏகாதிபத்தியம் உலகின் எல்லாப் பாகங்களிலும் வியாபிக்கவும் ஊடுருவவும் எடுக்கும் முயற்சிகள் மென்மேலும் அப்பட்டமாகி வருகின்றன. அது எங்கெங்கும் தனது தரை, கடல், விமானப் படைகளைக் கொண்டு பெரும் வேடிக்கைகள் காட்டி, பூகோள ரீதியில் அமெரிக்காவுடன் மேலாதிக்கத்துக்கான ஒரு பயங்கரப் போராட்டத்தில் ஈடுபட்டு, உலக வரலாற்றில் சமாந்தர மற்ற அதன் ஆக்கிரமிப்பு நப்பாசைகளை அம்பலப்படுத்து கின்றது.

''மூலதனத்தின் அளவுக்கு ஏற்ப'', ''பராக்கிரமத்தின் அளவுக்கு ஏற்ப''[31] ஏகாதிபத்தியவாதிகள் உலகத்தைப் பங்கு போடுகின்றனர் என்று லெனின் குறிப்பிட்டார். குறிப்பாக வேறு எந்த ஒருநாட்டிலும் இணையாகக் காணமுடியாத தமது பொருளாதார, ராணுவ தசைநார்களை மடக்கி நீட் டித்தான் இந்த மேலாதிக்க வல்லரசுகள் இரண்டும் மேலா திக்கத்தை நாடுகின்றன. 1976ல் அமெரிக்காவின் மொத்த தேசிய உற்பத்தி ஒரு லட்சத்து 69 ஆயிரம் கோடி டால ருக்கு மேலாகவும், சோவியத் யூனியனின் உற்பத்தி 93 ஆயி ரம் கோடிக்கு மேலாகவும் இருந்தது.[32] இவை இரண்டும் உலக மொத்த உற்பத்தியில் சுமார் 40 வீதம் ஆகும். அமெ ரிக்கா, சோவியத் யூனியன் இரண்டினதும் தொழில்துறை உற்பத்தியின் பெறுமதி மேற்கு ஜெர்மனி, பிரான்சு, பிரிட்

டன் ஆகிய மூன்று பிரதான ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளின் உற்பத்திப் பெறுமதியையும் கடந்துவிட்டது. ராணுவ பலத்தில் வேறு எந்த ஏகாதிபத்திய நாடும் இரண்டில் எந்த மேலாதிக்க வல்லரசுக்கும் இணையாக மாட்டாது. இரண்டும் பல்லாயிரக் கணக்கான யுத்ததந்திர அணு ஆயுதங்களையும், பல நூறு ராணுவ செய்மதிகளையும், சுமார் 10 ஆயிரம் ராணுவ விமானங்களையும், பல நூறு பிரமாண்டமான போர்க் கப்பல்களையும், இதர வழமையான ஆயுதங்களின் பெருங் கையிருப்புகளையும் பெற்றுள்ளன. ராணுவ செலவினங்களில் சோவியத் யூனியன், அமெரிக்கா இரண்டும் மேற்கு ஐரோப்பா, யப்பான், கனடா மூன்றையும் தாண்டி வெகுதூரம் சென்றுவிட்டன. மேலாதிக்க வல்லரசு ஒவ்வொன்றின் யுத்த தந்திரமும் சமாதான காலத்தில் கூட மனித வரலாற்றில் முன்னென்றும் கண்டிராத அளவைத் தொட்டு நிற்கிறது.

சோவியத் திரிபுவாத துரோகக் கும்பல், சோவியத் யூனியன் ஒரு பெரிய வல்லரசு தான், ஆனால் ஒரு ஏகாதிபத்திய மேலாதிக்க வல்லரசு அல்ல என்று சொல்லி தன்னைத்தானே பூசி மெழுகப் பெரிதும் முயல்கின்றது. இந்த வாதத்தை பாரதூரமாக எடுக்க முடியுமா? அமெரிக்காவைப் போல அதேவிதமான ஏகாதிபத்திய பொருளாதாரச் சுரண்டல், அரசியல் கட்டுப்பாடு, ராணுவ விஸ்தரிப்பு ஆகியவற்றில் சோவியத் யூனியன் ஈடுபடவில்லையா?

அமெரிக்கா பிரதானமாக மூலதனத்தை ஏற்றுமதி செய்து கடல்கடந்த நாடுகளில் முதலீடு செய்வதன் மூலம் இதர நாடுகளைச் சுரண்டுகின்றது. அமெரிக்காவின் உத்தியோக பூர்வமான புள்ளி விபரங்களின் பிரகாரம், 1976ல் தனியுரிமைகள் உட்பட, லாபங்களாகவும், வருமானங்களாகவும் கடல்கடந்த அதன் நேரடித் தனியார் முதலீடுகளிலிருந்து 2240 கோடி டாலர்களை சம்பாதித்தது. இதன் லாப விகிதம் 16 வீதத்துக்கும் கூடுதலாகும்.[33] உலக மக்களின் இரத்தத்தை அமெரிக்க ஏகபோக மூலதனம் எவ்வாறு உறிஞ்சுகின்றது என்பதை சித்தரிக்கும் அசிங்கமான பதிவேடு இது ஆகும். இதர நாடுகளிலிருந்து பிடுங்கும் லாபங்

களின் மொத்த தொகையில் அமெரிக்காவிலும் பார்க்க சோவியத் யூனியன் குறைவாகப் பெற்றபோதிலும், கொள் ளையடிக்கும் முறைகளில் அமெரிக்காவை விட சோவியத் யூனியன் குறைந்ததல்ல. பிரதானமாக மூன்றாவது உலக நாடுகளுக்கு வழங்கும் ''பொருளாதார உதவி'', ''ராணுவ உதவி'' மூலம் சோவியத் யூனியன் பொருட்களை மலிவாக வாங்கி ஒறுப்பாக விற்று; பிரமாண்டமான லாபங்களைப் பெறுகின்றது, உதாரணமாக, சோவியத் யூனியன் ''உதவி'' என்ற பெயரில் உலகச் சந்தையிலும் பார்க்க 20 முதல் 30 வீதம், சிலவேளைகளில் 200 வீதம் கூடுதலான விலையில் இந்தியாவுக்கு பண்டங்களை விற்பனை செய்தது.[34] ''சோவி யத் வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களின்'' பிரகா ரம் ஆசிய நாடுகளிலிருந்து இயற்கை வாயுவை இறக்கு மதி செய்வதற்கு சோவியத் யூனியன் செலுத்திய விலை, அதை மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் விலையில் ஏறக்குறைய அரைவாசியே ஆகும். சோவியத் யூனியன் எகிப்துக்கு ஏற்றுமதி செய்த அந்தரசைட்டு, வார்ப்பிரும்பு முதலிய பண்டங்களின் விலை மேற்கு ஜெர்மனியிடமிருந்து அவற்றுக்கு பெற்ற விலையிலும் பார்க்க 80 முதல் 150 வீதம் கூடுதலாகும் என்றும் அதே புள்ளி விபரங்கள் தெரி வித்தன.[35] *1973* அக்டோபரில் அரபு - இஸ்ரேலிய யுத்தத் தின் போது ''ரஷியா தான் விற்பனை செய்த ஆயுதங்களுக் கான பணத்தை ரொக்கமாகக் கோரியது மட்டுமல்ல, யுத் தம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது அவற்றின் விலைவாசி களையும் உயர்த்தி விட்டது''[36] என்று மேலைநாட்டுப் பத் திரிகைகள் அறிவித்திருந்தன. பிரதான எண்ணெய் ஏற்று மதி நாடுகள் அத் தொகையை அமெரிக்க டாலரில் செலுத் தியதும், சோவியத் யூனியன் அதை 10 வீதம் அல்லது அதற்குக் கூடுதலான வட்டியில் ஐரோப்பிய-டாலர் கடன் ஒன்றை வழங்க உபயோகித்தது.[37]

அமெரிக்கா அதன் கடல்கடந்த கூட்டுஸ்தாபனங்கள், இதர ஆக்கிரமிப்புக் கருவிகள் மூலம் பலநாடுகளின் பொரு ளாதாரத்தையும் அரசியலையும் கட்டுப்படுத்துகின்றது. இன்று சோவியத் யூனியன் அதே நடவடிக்கைகளை பிரதா

னமாக ''சோஷலிஸ குடும்பத்துக்குள்'' கடைப்பிடித்து வரு கின்றது, ''சர்வதேச உழைப்புப் பங்கீடு'', ''திட்டமிட்ட ஒருமுகப்பாடு'', ''பன்முக ஒன்றிணைப்பு'', ''அமைப்பியல் ஒன்றிணைப்பு'' முதலிய பெயர்களில் அது பல நாடுகளின் பொருளாதார உயிர்நாடிகளை கட்டுப்படுத்தி, மூலப் பொருட் கள், சந்தை, வெளிநாட்டு வர்த்தக விலைவாசிகள், உற்பத் தித் திட்டங்கள், நிர்ப்பந்தக் கடன்கள், மூலதன நிர்மாணத் தில் உழைப்புச் சக்தி ஆகியவை சம்பந்தமாக அவற்றை கொள்ளையடித்து, ஆதிக்கம் செலுத்த சுரம் பிடித்தவர் போல் ஈடுபட்டுள்ளது. இன்னும் அவற்றின் பொருளாதா ரங்களையும் ''வரையறுக்கப்பட்ட'' இறைமையையும் சோவி யத் செல்வாக்குக்குள் பூரணமாக கொண்டுவந்து, அக் ''குடும்பத்தின்'' கூறப்படும் ''சர்வதேச சோஷலிஸ உடைமை முறை''யை ஸ்தாபிக்கவும் அது படாதபாடு படு கின்றது.[38]

அமெரிக்கா ஏனைய நாடுகளிலிருந்து ஏராளமான லாபங் களைச் சம்பாதித்து, அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துவ தற்காக, உலக ரீதியான ஆயுத விற்பனையில் ஈடுபட்டுள் ளது. 1966க்கும் 1976க்கும் இடையில் அது 3490 கோடி டாலர் பெறுமதியான ஆயுதங்களை ஏற்றுமதி செய்தது. அதே காலத்தில் அதே நோக்கத்திற்காக சோவியத் யூனிய னும் 2020 கோடி டாலருக்கு ஆயுத விற்பனை செய்துள் ளது.[39] அமெரிக்க ஆயுதக் கட்டுப்பாடு, ஆயுத ஒழிப்பு நிறுவனம் வெளியிட்ட தரவுகளின் பிரகாரம், சோவியத் யூனியன் 1974ல் ஆயுத விற்பனை மூலம் 550 கோடி டால ரைப் பெற்றது. இத்தொகை அவ் ஆண்டு மொத்த உலக ஆயுத விற்பனையில் 37.5 வீதமாகும். இவ்வாறு அமெரிக் காவுக்கு அடுத்தபடியாக சோவியத் யூனியன் இரண்டாவது மிகப்பெரிய மரண வியாபாரியாக விளங்குகின்றது. மேலும் சோவியத் யூனியன் அத்தியாவசியமான உப உறுப்புகள், உதிரிப்பாகங்களின் விநியோகத்தை நிறுத்துவது, கடன்க ளைக் கட்டுமாறு நெருக்குவது போன்ற வழிகள் மூலம் தனது வாடிக்கைக்காரரைக் கட்டுப்படுத்த முயல்கிறது.

அமெரிக்கா அதன் மேலாதிக்கத்துக்கான பாதையை சுத்தி செய்வதற்காக, ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெ

ரிக்க கண்டங்களில் சட்டபூர்வமாக அமைந்த பல அரசாங்கங்களை கவிழ்த்துக் கொட்டியது. அதே போல சோவியத் யூனியனும் ஆபிரிக்க, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் செய்தது; செய்து வருகின்றது.

அமெரிக்கா அதன் ஆயுதப் படைகளில் சுமார் 4 லட்சம் துருப்புகளை வெளிநாடுகளில் நிறுத்தியுள்ளது. சோவியத் யூனியன் சுமார் 7 லட்சம் படைகளை பிறநாடுகளில் வைத்திருக்கின்றது. இன்னும் உலகம் பூராவும் ஓர் இறைமை படைத்த நாடு என அங்கீகரித்த செக்கோஸ்லவாக்கியா முழுவதையும் நீண்டகாலமாக (உண்மையில் காலவரையறையின்றி) ராணுவ ரீதியில் இடங்கொண்டிருக்கிறது.

அமெரிக்கா ராணுவ ஒப்பந்தங்கள் மூலம் பல நாடுகளின் பிரதேசங்களை அமெரிக்க இராணுவத் தளங்களாக மாற்றியுள்ளது. சோவியத் யூனியனும் கிழக்கு ஐரோப்பா, மங்கோலிய மக்கள் குடியரசு, கியூபா, ஆபிரிக்கா ஆகியவற்றிலும் மத்தியதரைக் கடலிலும், இந்து சமுத்திரத்திலும் ராணுவத் தளங்களை நிறுவியுள்ளது அல்லது நிறுவனங்களை வைத்திருக்கின்றது. அது மட்டும் அல்ல, யப்பானின் வட பிரதேசங்களையும் ஆதிபத்திய கடல் எல்லைகளையும் நிரந்தரமாக இடம் கொள்வதற்கு அடம் பிடிக்கின்றது. ஸ்பிட்ஸ்பர்கன் தீவுகளை நோர்வேயிடமிருந்து அபகரிக்கக்கூட அது பிரயத்தனம் செய்கின்றது. ''என்னுடையது என்னுடையது தான். உன்னுடையது பேச்சுவார்த்தைக்கு உரியது.'' இது மேலைநாட்டு ராஜதந்திர வட்டாரங்களில் அடிபடுகின்ற ஒரு நகைச்சுவைக் குறிப்புரை. ஆனால் சோவியத் யூனியன் ''உன்னுடையது என்னுடையது தான்'' என்பதைத் தீர்மானிக்க கடினமான பேச்சுவார்த்தை நடத்துவதிலும் அவ்வளவு அக்கறை உடையதல்ல.

அமெரிக்கா கைக்கூலிகளை அனுப்பி கியூபாவை ஆக்கிரமித்தது. அதனால் பெரும் அவப்பெயர் ஒன்றைச் சம்பாதித்துக் கொண்டது. அதே போல சோவியத் யூனியனும் அங்கோலாவில் ஆயுத தலையீடு நிகழ்த்தவும் சைறேயில்

படையெடுக்கவும் கூலிப்படைகளை ஏவியது. அதன் ஆக்கிர மிப்பு எல்லையையும் அது தொடர்ந்து விஸ்தரிக்கின்றது.

சுருக்கமாகச் சொன்னால், சோவியத் யூனியன், அமெரிக்கா இரண்டும் ஏகாதிபத்திய மேலாதிக்க வல்லரசுகள், மிகப் பெரிய சர்வதேசச் சுரண்டல்காரர்கள், ஒடுக்குமுறை யாளர்கள், யுத்த, ஆக்கிரமிப்புக்கான அசுர சக்திகள், உலக மக்களின் பொது வைரிகள். ''இதர தேசங்கள் மீது தனது 'சொந்த' தேசம் கொண்டுவரும் மிகச் சிறிய பலவந்தத்தைத் தானும் சகித்துக் கொள்ளும் பாட்டாளி வர்க்கம் ஒரு சோஷலிஸ பாட்டாளி வர்க்கமாய் இருக்க முடியாது''[40] என்று லெனின் குறிப்பிட்டார். சர்வதேச விவகாரங்களில் சோவியத் யூனியனின் நடைமுறை சாராம்சத்தில் சோஷலிஸ பாட்டாளி வர்க்க உணர்வு இம்மியளவேனும் இல்லாது, ஏகாதிபத்தியவாதமும் மேலாதிக்கவாதமும் தழுவிய ஒன்ருக இருக்கின்றது. இத்துடன் விஷயம் முடிந்துவிடவில்லை. ஏகாதிபத்திய மேலாதிக்க வல்லரசுகள் இரண்டில் சோவியத் யூனியன் தான் அதி பயங்கரமானது, மூர்க்கத்தனமானது, நய வஞ்சகமானது. இன்னும் உலக யுத்தத்தின் மிக ஆபத்தான ஊற்றுமூலமாகவும் திகழ்கிறது.

நாம் ஏன் அப்படிச் சொல்லுகிருேம்? சோவியத் யூனியன் ஒப்பந்தக் கடப்பாடுகளுக்கு விரோதமாக சீனுவின் வட கிழக்கு, வட மேற்கு எல்லைகளிலுள்ள சீன பிரதேசத்தை இடங் கொண்டு, அதன் பந்தோபஸ்தை அச்சுறுத்துகின்ற காரணத்துக்காகவா? இல்லை. சோவியத் யூனியனைப் போல் அமெரிக்காவும் சீனுவின் தைவானை ஆக்கிரமித்து, இடங்கொண்டு சீனுவின் பந்தோபஸ்துக்கு ஓர் அச்சுறுத்தலாக விளங்குகின்றது. குறிப்பிட்ட ஒவ்வொரு பிரதேச மக்களும் தமது சொந்த சூழ்நிலைகளின் பிரகாரம், எந்த மேலாதிக்க வல்லரசு அல்லது எந்த ஏகாதிபத்திய நாடு தமக்கு உடனடி அச்சுறுத்தலாக இருக்கிறதென தீர்மானிக்க முடியும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனுல் இங்கு நாம் விவாதிப்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசம் சம்பந்தமான ஒரு குறிப்பிட்ட பிரச்சினை பற்றி அல்ல, மாருக, முழுமையான உலக நிலைமை சம்பந்தமான ஒரு பொதுப் பிரச்சினை பற்றியே

நாம் ஆராய்கின்றோம். இவ் இரண்டு மேலாதிக்க வல்லரசுகளில் சோவியத் யூனியன் உலக ரீதியில் மிக ஆபத்தானதாக மாறியது ஏதும் தற்செயலான, தற்காலிகமான அல்லது அரைகுறை காரணங்களினால் அல்ல. பதிலுக்கு, சோவியத் யூனியன் வளர்ந்து, ஒரு ஏகாதிபத்திய மேலாதிக்க வல்லரசாக மாறுவதற்கு ஏதுவாயிருந்த ஒரு முழுக் கோவையான வரலாற்றுச் சூழ்நிலைகளினாலேயே இது நிர்ணயிக்கப் பட்டது.

முதலாவதாக, சோவியத் சமூக-ஏகாதிபத்தியம் அமெரிக்காவின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் ஓர் ஏகாதிபத்திய வல்லரசாகும். எனவே அது மேலும் ஆக்கிரமிப்புடையதாகவும், துணிச்சல்வாதம் நிறைந்ததாகவும் இருக்கின்றது. ஏகாதிபத்திய நாடுகளில் பிந்தி வந்தவை எப்பொழுதும் உலகைப் புதிதாகப் பங்குபோட விரும்பின என்று லெனின் வெகுகாலத்துக்கு முன்பே கூறினார். அவை "எல்லா ஆசனங்களும் இடம் கொள்ளப்பட்டபின் முதலாளித்துவ விருந்தினர் மேசைக்கு வந்தவை." அவை "மேலும் பேராசையுடையவையாகவும் பெரும் கொள்ளைக்காரராகவும்" இருந்தன.[41] "காலனிகளைப் பலாத்காரத்தால் பு ர் பங்கீடு செய்யாமல் புதிய ஏகாதிபத்திய நாடுகள் பழைய (பலவீனமான) ஏகாதிபத்திய வல்லரசுகள் அனுபவித்த சலுகைகளை பெற முடியாது.[42] உலக மேலாதிக்கத்தைப் பெற, 2வது கெய்ஸர் வில்லியம், ஹிட்லர் காலத்தைய ஜெர்மனியும் யுத்த பிற்கால அமெரிக்காவும் பிரித்தானியாவினதும், இதர பழைய கால ஏகாதிபத்தியவாதிகளினதும் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களை முயன்று கைப்பற்றியது போல, சோவியத் யூனியனும் அமெரிக்கக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை முயன்று கைப்பற்ற வேண்டும். இது மனித சித்தத்துக்குப் புறம்பான ஒரு வரலாற்று விதி ஆகும். எனவே 1976 பெப்ரவரியில் நிகழ்ந்த ஒரு சம்பாஷணையில் தலைவர் மாஓ "அமெரிக்கா உலகிலுள்ள அதன் நலன்களை பாதுகாக்க விரும்புகிறது. சோவியத் யூனியன் விஸ்தரிக்க விழைகின்றது. இதை எவ் விதத்திலும் மாற்ற முடியாது" என்று சுட்டிக் காட்டினார். அமெரிக்கா உலக ஆதிக்கத்தை தொடர்ந்து நாடுவது நிச்

சயம். ஆனால் அது எட்டமுடியாத அளவுக்கு அதன் கை களை நீட்டிவிட்டது. இப்பொழுது அது செய்யக்கூடியது எல்லாம் அதன் முதலீட்டு நலன்களை பாதுகாத்து, ஒட்டு மொத்த யுத்த தந்திர ரீதியில் தற்காப்பில் நிற்பதாகும். மறுபுறம் ''சமாதானம்'' என்ற கவர்ச்சிச் சொல்லை விற் பனை செய்யும் அதே வேளையில் பிறெஸ்னேவ் இறுமாப்பு டன் பிரகடனம் செய்ததாவது:- ''சோவியத் யூனியன் அதன் பொருளாதார, பாதுகாப்பு ஆற்றலைப் பலப்படுத்தி யது சர்வதேச அரங்கில் ஒரு ஊக்கமிக்க, வெற்றிகரமான 'தாக்குதலை'த் தொடுக்க அதற்கு உதவுகின்றது.''[43] இன் னும் ''நமது வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கும் போது யதார்த்தத்தில் பூகோளத்திலுள்ள ஒவ்வொரு பொட் டிலும் உள்ள விவகார நிலைமையுடன் ஏதோ ஒரு வழியில் நாம் உறவு கொள்ள வேண்டியுள்ளது.''[44] இதன் உண்மை யான அர்த்தம் என்னவெனில், சோவியத் யூனியன் அதன் சொந்த உலக மேலாதிக்கத்தை ஸ்தாபிக்கும் முயற்சியில், ஏனைய நாடுகள் அனைத்தினதும் இறைமையை ஊறுபடுத்த வும், உலகின் சகல பகுதிகளிலுமுள்ள அமெரிக்க செல் வாக்கை பலவீனப்படுத்தி, தனது செல்வாக்கை நிலைநாட்ட வும் ஒரு தாக்குதல் யுத்த தந்திரத்தை மேற்கொள்ளத் தீர் மானித்து விட்டது.

இரண்டாவதாக, சோவியத் சமூக-ஏகாதிபத்தியம் ஒப் பீட்டுவகையில் பொருளாதார பலத்தில் குறைவாக உள்ள காரணத்தால், விஸ்தரிப்புப் பாதையில் செல்வதற்கு அதன் ராணுவ பலத்தைப் பிரதானமாகச் சார்ந்து, யுத்த அச் சுறுத்தல்களில் இறங்கவேண்டியுள்ளது. பொருளாதார ரீதி யில் அது இரண்டாந்தர ஏகாதிபத்திய நாடுகளைத் தாண்டி வெகுதூரம் சென்றுவிட்ட போதிலும், அதன் பலமிக்க எதி ரியுடன் ஒப்பிடும்போது இன்னும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளது. அதன் பொருளாதார பலம் உலக மேலாதிக்கத் துக்கான அதன் தேவைகளுக்குப் போதுமானதல்ல. ஆகவே ராணுவ மேம்பாட்டைச் சுவீகரிப்பதற்காக அது சுரம்பிடித் தவர் போல ஆயுத விஸ்தரிப்பிலும் யுத்த தயாரிப்புகளி லும் ஈடுபடுகின்றது. இவ்வாறு இதர நாடுகளின் மூலவளங் கள், செல்வங்கள், உழைப்புச்சக்தி போன்றவற்றைக்

கவர்ந்து, அதன் பொருளாதார குறைபாட்டை ஈடுசெய்ய எண்ணுகின்றது. இது கடந்த காலத்தில் ஜார் ரஷிவா, பாஸிஸ ஜெர்மனி, இத்தாலி, யப்பான் ஆகியவை சென்ற வங்குரோட்டுப் பாதையாகும். தற்பொழுது சோவியத் யூனியனின் ஆயுதப் படைகள் அமெரிக்காவின் படைகளைப் போல் இரட்டிப்பு மடங்காகும். அமெரிக்காவை விட சோவியத் யூனியன் 400 யுத்த தந்திர அணு ஆயுதந்தாங்கி(வாகனங்)களுக்கு மேல் கூடுதலாக வைத்திருக்கின்றது.[45] அது மிகக் கூடுதலான டாங்கிகளையும், கவச மோட்டார்களையும், களத் துப்பாக்கிகளையும், வழமையான ஆயுதங்களின் இதர வகைகளையும் பெற்றிருக்கின்றது. இப்பொழுது அது அமெரிக்கக் கடற்படையின் மொத்தத் தொன் எடைக்கு கிட்டத் தட்டச் சமமான ''தாக்குதல் கடற்படை'' ஒன்று பற்றிப் புளுகியடிக்கிறது. ஒரு மேலைநாட்டுக் கணிப்பின் பிரகாரம், சமீப ஆண்டுகளில் சோவியத் ராணுவச் செலவினங்கள் ஆண்டுக்குச் சராசரி 4 முதல் 5 வீதம் வரை அதிகரித்து, அதன் மொத்த தேசிய உற்பத்தியில் ஏறக்குறைய 12 முதல் 15 வீதத்தை விழுங்கி ஏப்பமிடுகின்றன. (அமெரிக்க ராணுவ செலவினங்கள் அதன் மொத்த தேசிய உற்பத்தியில் ஏறக்குறைய 6 வீதமேயாகும்.) 1976 நிதி ஆண்டுக்கான சோவியத் ராணுவச் செலவினம் 12,700 கோடி டாலர் என மதிப்பிடப்பட்டது. இது அமெரிக்காவின் 10,270 கோடி செலவுத் திட்டத்திலும் பார்க்க சுமார் 24 வீதம் கூடுதலானதாகும்.[46] உலக மேலாதிக்கத்துக்காக அமெரிக்காவுடன் நடத்தும் போட்டியில் சோவியத் யூனியன் தாக்கும் யுத்ததந்திரம் ஒன்றைக் கைக்கொள்வதும், பிரதானமாக பலாத்காரத்திலும், பலாத்கார அச்சுறுத்தல்களிலும் ஈடுபடுவதும் தவிர்க்க முடியாது என்பதை இவை எல்லாம் காட்டுகின்றன.

மூன்றாவதாக, சோவியத் அதிகாரத்துவ, ஏகபோக முதலாளித்துவ கும்பல் ஓர் உயர்ந்தளவில் மத்தியப்படுத்தப்பட்ட சோஷலிஸ அரசுடைமைப் பொருளாதாரத்தை வேறு எந்த ஏகாதிபத்திய நாட்டிலும் இணை காணமுடியாத ஓர் அரசு - ஏகபோக முதலாளித்துவ் பொருளாதாரமாக

மாற்றியதோடு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் இருந்த ஓர் அரசை பாசிஸ சர்வாதிகாரத்தின் கீழான ஓர் அரசாகவும் மாற்றிவிட்டது. எனவே, சோவியத் சமூக-ஏகாதிபத்தியத்தைப் பொறுத்தவரையில் முழுப் பொருளாதாரத்தையும் ஒரு ராணுவ நிலைப்பாட்டில் வைத்து, அரசு யந்திரம் முழுவதையும் ராணுவமயப் படுத்துவதும் எளிதாயிருக்கின்றது. பிறெஸ்னேவ் கும்பல் தேசிய வருமானத்தில் 20 வீதத்தை ராணுவச் செலவினங்களுக்காக ஒதுக்கிவிட்டு, ''பொருளாதாரத்தை ராணுவ வேலைத் திட்டமாக மாற்ற எந்த நேரத்திலும் தயாராய்''[47] இருப்பதாக கூச்சலிடுகின்றது. இந்தக் கும்பல் அரசு யந்திரத்தை தொடர்ந்தும் பலப்படுத்தி, சோவியத் மக்களை அதன் யுத்த ரதத்தில் பிணைக்கவும் பாடுபடுகின்றது. கே. ஜி. பி. (K. G. B.) என்ற சோவியத் இரகசிய சேவை ஸ்தாபனம் சோவியத் மக்களினதும் வேறு பல நாட்டு மக்களினதும் தலைகளுக்கு மேல் தொங்கும் ஒரு வாளாக விளங்குகின்றது. சோவியத் அதிகாரிகள் ராணுவவாதத்தைக் கொண்டு மக்கள் நெஞ்சில் நஞ்சூட்டவும், வெகுஜன தொடர்பு சாதனங்கள், கலை, இலக்கியம், கல்வி முதலிய பல்வேறு வாயில்கள் மூலம் ரஷியப் பேரின வெறியைத் தட்டி எழுப்பவும் சகல முயற்சிகளையும் செய்கின்றனர். சோவியத் துரோகிகள் ஒரு நிமிட அறிவித்தலில் தமது புதிய ஆக்கிரமிப்பு யுத்தங்களில் பல பத்து லட்சம் மக்களை பீரங்கித் தீனியாய் அனுப்புவதற்காக, வெளி நாடுகளில் ஆக்கிரமிப்பை நடத்தி ''பாராட்டுக்குரிய சேவைகளை'' ஆற்றிய ஜார் ரஷியாவின் ராணுவ, அரசியல் எஜமானர்களையும், துணிச்சல்வாதிகளையும் திட்டமிட்ட முறையில் போற்றிப் புகழ்கின்றனர். பழைய ஜார் மன்னர்களின் விஸ்தரிப்புவாத ''பாரம்பரியத்தை'' முன்னெடுத்துச் செல்லுமாறு பகிரங்க அறைகூவல் விடுக்கின்றனர்.

நாலாவதாக, உலகில் தோன்றிய முதலாவது சோஷலிஸ நாடு சீரழிந்ததன் விளைவாக சோவியத் சமூக ஏகாதிபத்தியம் உதயமானது. ஆகவே, அது உலகெங்கனுமுள்ள மக்களைப் பேய்க்காட்டி ஏமாற்ற லெனினின் கௌரவத்தை பயன்படுத்த முடியும். ,'சோஷலிஸம்'' என்ற பதாகையை

தொங்கவிட முடியும், அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு நீண்ட காலமாக ஆக்கிரமிப்பு, மேலாதிக்கவாதக் கொள்கைகளை கடைப்பிடித்து வருகின்றது. இதனால் அடிக்கடி பல எதிர்ப்புகளை சந்தித்தது, உலகம் பூராவுமுள்ள பாட்டாளிவர்க்கத்தினதும், அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்கள் மக்களினதும், அமெரிக்க மக்கள் உட்பட நல்லெண்ணம் படைத்த மக்கள் அனைவரினதும் அம்பலப்படுத்தலுக்கும், கண்டனத்துக்கும் ஆளாகியது. முற்போக்கான உலக அபிப்பிராயம் அதன் உண்மையான இயல்புடன் ஏற்கனவே பரிச்சயம் பெற்று, அதற்கெதிரான போராட்டத்தை தொடர்ந்து நடத்துகின்றது. சோவியத் சமூக ஏகாதிபத்தியம் ஒரு புத்தம் புதிய வளர்ந்து வரும் வல்லரசு ''சோஷலிஸம்'' என்ற முகமூடியை அணிந்திருக்கின்றது. இதன் விளைவாக அதை எதிர்ப்பதும், அம்பலப்படுத்துவதும், கண்டிப்பதும் சற்றுக் கடினமாகும். அதன் விஸ்வரூபத்தை உலக மக்கள் அறிந்து கொள்வதற்கு உதவியாக பாரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்பு, மேலாதிக்கவாதக் கொள்கைகளை அவற்றின் நிஜ வடிவில் மென்மேலும் அதிகப்படியான மக்கள் உணர்கின்ற போதிலும், ''சோஷலிஸம்'' என்ற அதன் பெயர்ப்பலகையின் சாயம் நாளுக்கு நாள் வெளுக்கின்ற போதிலும், மக்களை ஏமாற்றும் ஆற்றலை சோவியத் யூனியன் முற்றாக இழந்து விட்டது என யாரும் எண்ணி விடக் கூடாது. ஆக்கிரமிப்பு, தலையீடு, கவிழ்ப்பு, விஸ்தரிப்பு ஆகியவற்றில் ஈடுபடும் போதெல்லாம், அது ''சர்வதேசக் கடப்பாடுகளை நிறைவேற்றுவது,'' ''தேசிய விடுதலை இயக்கங்களை ஆதரிப்பது,'' ''புதிய பழைய ஏகாதிபத்தியங்களை எதிர்ப்பது,'' ''சமாதானம், ஜனநாயகம் இவற்றின் நலன்களைப் பாதுகாப்பது'' என்பன போன்ற போர்வைகளைப் போர்த்திக்கொள்கிறது. எனவே அதன் சாராம்சத்தை உணரச் சிலகாலம் செல்லலாம். இந்த விஷயத்தில் சீனாவுக்கு அதன் சொந்த அனுபவம் உண்டு, சோவியத் யூனியனுக்கு பிரத்தியேக உரிமையாயுள்ள இந்த இரட்டை வேடம், ஏகாதிபத்திய மேலாதிக்க வல்லரசு என்ற வகையில் அதனால் ஏற்படக் கூடிய விசேஷ அபாயத்தை மேலும் இரட்டிப்பாக்குகின்றது.

சோவியத் யூனியனின் இந்த யதார்த்தமான வரலாற்று லட்சணங்கள், உலகயுத்தத்தின் ஓர் ஊற்று மூலம் என்ற வகையில், அமெரிக்காவை விட அதை மேலும் அபாய கரமானதாகச் செய்வதில் சந்தேகமே இல்லை.

அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் ஆக்கிரமிப்பு, மேலாதிக்கவாதக் கொள்கைகள் சம்பந்தப்பட்டவரையில் இன்னும் மாறவே இல்லை. அன்றி, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மக்களை சுரண்டுவதையும், அடக்கி ஒடுக்குவதையும் கூட குறைக்கவில்லை. ஆகவே, சோவியத் யூனியன் அமெரிக்கா என்ற மேலாதிக்க வல்லரசுகள் இரண்டும் உலக மக்களின் இரண்டு பொது எதிரிகள் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் மேற்சொன்ன கருத்துகளுக்கு மாறாக இரு மேலாதிக்க வல்லரசுகளையும் எவ்வித வேறுபாடுமின்றி சமாந்தரமாக வைத்து, சோவியத் யூனியனை உலக யுத்தத்தைத் தூண்டிவிடும் மிகப் பயங்கரமான ஒன்று என அதை தனிமைப்படுத்தத் தவறினால், உலக மக்களின் புரட்சிகர விழிப்புணர்வை மழுங்கடித்து, மேலாதிக்கவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் பிரதான இலக்கை மங்கலாக்கியவர்கள் ஆவோம். எனவே எந்தக் காலத்திலும் நாம் சோவியத் யூனியனின் ஏமாற்றுக்கும் சதி ஆலோசனைகளுக்கும் பலியாகி விடக்கூடாது அதனுடைய யுத்த தயாரிப்புகளுக்கும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கும் பச்சை விளக்கு காட்டிவிடக் கூடாது.

## மூன்றாவது உலக நாடுகளும் மக்களும் ஏகாதிபத்தியம், காலனித்துவம், மேலாதிக்கவாதம் ஆகியவற்றை எதிர்க்கும் பிரதான சக்தி ஆவர்.

மூன்றாவது உலக நாடுகளும் மக்களும் இரு வல்லரசுகளினதும் மேலாதிக்கவாதம், ஏகாதிபத்தியம், காலனித்துவம் ஆகியவற்றுக்கெதிரான உலகம் தழுவிய போராட்டத்தில் பிரதான சக்தியாக விளங்குகின்றனர். ''ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க கண்டங்களில் வீசும் புரட்சிப் புயல் பழைய உலகம் முழுவதுக்கும் ஒரு தீர்க்கமான அடி கொடுப்பது நிச்சயம்,'' என்று தலைவர் மாஓ 1966 அக்டோபர் 25ல் அனுப்பிய செய்தியொன்றில் குறிப்பிட்டார். இது உலக ரீதியான ஏகாதிபத்திய-

எதிர்ப்புப் புரட்சிப் போராட்டத்தில் பிரதான சக்தியாக விளங்கும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் பாத்திரம் பற்றிய தலைவர் மாஓ அவர்களின் விஞ்ஞான பூர்வமான தீர்க்கதரிசனமும், உயர்ந்த மதிப்பீடும் ஆகும்.

நாம் இப்படிச் சொல்வதற்கான ஆதாரங்கள் யாவை? 2வது உலக யுத்தம் முடிந்தது முதல் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க கண்டங்களையும் இதர பிராந்தியங்களையும் சேர்ந்த புரட்சிகர மக்கள் ஏகாதிபத்திய - எதிர்ப்பு, காலனித்துவ - எதிர்ப்பு போராட்டங்களின் முன்வரிசையில் நின்று, ஒன்றன் பின் ஒன்ருகப் பல புரட்சிகர ஆயுதப் போராட்டங்களை நடத்தி, உலகத் தோற்றத்தையே மாற்றியமைத்து மகோன்னதமான வெற்றிகள் பலவற்றை ஈட்டினுர்கள். இது சர்வதேச பாட்டாளி வர்க்கத்துக்கும் சகல நாடுகளின் மக்களுக்கும் அவர்களது ஏகாதிபத்திய-எதிர்ப்பு புரட்சிப் போராட்டங்களில் பேருற்சாகத்தையும் பேராதரவையும் அளித்தது. 1949ல் வாகை சூடிய சீனப் புரட்சி, 1953ல் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் தாய்நாட்டின் பாதுகாப்புக்காகவும் நடைபெற்ற கொரியாவின் எதிர்ப்பு யுத்தம் ஈட்டிய வெற்றி, 1955ல் கூடிய ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் பாண்டுங் மாநாடு, 1956ல் சுயெஸ் கால்வாய் மீதான யுத்தத்தில் எகிப்திய மக்கள் பெற்ற வெற்றி, 1959 கியூபா புரட்சி யுத்தம் முதல் 1970ம் ஆண்டுகளின் முற்பகுதியில் ஜனநாயகத்துக்கான சிலியின் போராட்டம் வரை லத்தீன் அமெரிக்காவில் வரிசை வரிசையான தேசிய விடுதலை இயக்கங்களின் வெற்றிகள், 1962ல் அல்ஜீரிய தேசிய விடுதலை யுத்தம் ஈட்டிய வெற்றி, 1960ம் ஆண்டுகளில் தமது சுதந்திரத்தை வென்றெடுத்துப் பாதுகாக்க பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் மக்கள் தொடுத்த உலகை குலுக்கும் வீரதீரப் போராட்டங்கள், 1971ல் ஐக்கிய நாடுகள் சபையில் சீனுவின் சட்டபூர்வமான அந்தஸ்தின் மீட்பு, 1975ல் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் தேச விமோசனத்துக்காகவும் நடத்திய போர்களில் வியட்நாம், கம்புச்சியா, லாவோஸ் மக்கள் அடைந்த வெற்றிகள், 1970ம் ஆண்டுகளில் கினி-பிஸோவிலும், மொஸாம்பிக்கிலும் நடைபெற்ற சுதந்திரப் போர்களின் வெற்றிகளும், இதர நாடுக

ளில் நடந்த சுதந்திர யுத்தங்களின் முன்னேற்றமும், கட்டுப்பாட்டுக்கும் கவிழ்ப்பு வேலைகளுக்குமான சோவியத் சதித் திட்டங்களுக்கு எகிப்தும், சூடானும், ஏனைய நாடுகளும் கொடுத்த பலமான தலையடிகள், 1977ல் சோவியத் கூலிப் படைகளின் படையெடுப்பை முறியடித்த சைறே மக்களின் வெற்றி, கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக ஆக்கிரமிப்பை எதிர்த்த யுத்தங்களிலும், இதர போராட்ட வடிவங்களிலும் ஈடுபட்ட பாலஸ்தீன, அரபு நாட்டு மக்களின் உறுதிப்பாடு, வெள்ளை இனவாதத்துக்கு வளர்ந்துவரும் ஆபிரிக்க மக்களின் எதிர்ப்பு, சகல தடைகளையும் தாண்டி ஆழமாகி வரும் தென் கிழக்கு ஆசிய மக்களின் தேசிய ஜனநாயக இயக்கங்கள் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க கண்டங்களையும் உலகின் இதர பாகங்களையும் சேர்ந்த 80க்கு மேலான நாடுகள் வென்றெடுத்த சுதந்திரம்-இந்த மகோன்னதமான வெற்றிகள் அனைத்தும் யுத்த பிற்கால உலகில் புரட்சிகர மாற்றத்தை தூண்டி விடும் ஒரு பலம் வாய்ந்த சக்தியாக அமைகின்றன. காலனித்துவ அமைப்புமுறை தகர்ந்து தரைமட்டமாகி வருகின்றது. முதலில் தோன்றிய பெருவல்லரசான அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு சரித்திர ரீதியான பின்னடைவை கண்டு விட்டது. அதை அடியொற்றி அரங்குக்கு வந்த மற்ற வல்லரசான சோவியத் சமூக-ஏகாதிபத்தியமும் அமெரிக்காவைப் போல அதே சேற்றில் புதைந்து கொண்டிருக்கின்றது.

மூன்றுவது உலகமானது ஏகாதிபத்தியம், காலனித்துவம், மேலாதிக்கவாதம் ஆகியவற்றுக்கு எதிரான உலக ரீதியான போராட்டத்தில் பிரதான சக்தி ஆக விளங்குவதோடு இது புத்தம் புதிய முன்னென்றும் கண்டிராத நிலைமையையும் தோற்றுவித்துள்ளது. இதை நாம் மதிப்பீடு செய்வது எப்படி?

முதலாவதாக, உலக ஜனத்தொகையில் ஏகப் பெரும்பான்மையாக விளங்கும் சுமார் 300 கோடி அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் காலனித்துவ விலங்குகளிலிருந்து விடுதலை பெற்றுவிட்டனர். அல்லது விடுதலை பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இதன் அர்த்தம் உலக வர்க்க

சக்திகளின் பலாபல நிலையில் ஓர் அடிப்படையான சரித்திர மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்பதாகும்.

தேசங்கள் முதன் முதலில் ஒடுக்கப்பட்ட காலம் முதல், அத்தகைய ஒடுக்குமுறைக்கு அவை எதிர்ப்பும் காட்டத் தொடங்கின. ஆனால் சில நூற்றாண்டுகளாக இந்த எதிர்ப்பானது, ஒரு சில விதிவிலக்குகளோடு, அங்கொன்றும் இங்கொன்றுமாக, தனித்தனி நிகழ்ச்சிகளாக நடைபெற்று வந்தது. ஆனால் அக்டோபர் புரட்சியின் பின்னர் பிரமாண்டமான மாற்றம் ஒன்று ஏற்பட்டது. ஒரு சில நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் அமைக்கப்பட்டு, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலும், தொழிலாளர்-விவசாயிகள் நேசஅணியின் அடிப்படையிலும் பரந்துபட்ட ஏகாதிபத்திய-எதிர்ப்புப் புரட்சிப் போராட்டங்கள் தொடுக்கப்பட்டன. மாபெரும் வெற்றிகள் ஈட்டப்பட்டு, மதிப்புடைய அனுபவமும் தொகுக்கப்பட்டது. ஆனால் ஒரு பூரணமான கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், எல்லா பிரதேசங்களையும் தழுவிய உலக ரீதியான இயக்கம் இன்னும் ஆரம்பமாகவில்லை. இரண்டாவது உலக யுத்தம் வரலாற்றின் புரட்சி வேகத்தை மேலும் தீவிரப்படுத்தியது. இன்று அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களையும், அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளையும், சோஷலிஸ நாடுகளையும் உள்ளடக்கிய மூன்றாவது உலகமானது உலக ஜனத்தொகையில் 70 வீதத்துக்கு மேலான மக்களை கொண்டிருந்த போதிலும், உலக நிலைமை 1920ல் லெனின் எதிர்நோக்கியதிலும் பார்க்க பெரிதும் வேறுபட்டதாகவே இருக்கின்றது. உலகம் தழுவிய ஒரு ஏகாதிபத்திய-எதிர்ப்பு சக்தியாக விளங்கும் அவை இன்றைய உலகப் புரட்சிப் போராட்டத்தின் பிரதான ஓட்டமாக விளங்குகின்றன. அகலத்திலும், ஆழத்திலும், சாதனையிலும், அனுபவத்திலும் இன்றைய போராட்டம் கடந்த காலத்திலும் பார்க்க பெரிதும் முன்னேறி விட்டது. தற்போது பெரும் தொகையான மூன்றாவது உலக நாடுகள் தமது சொந்தப் படைகளை வைத்திருக்கின்றன. காலனிச் செல்வாக்கை பல்வேறு அளவில் உதறித் தள்ளிவிட்டன. மனித வர்க்கத்தில் ஐந்தில் ஒரு பங்கை வகிக்கும் சீனா ஒரு அரை-காலனி, அரை-பிரபுத்துவ நிலையிலிருந்து ஒரு மாபெ

ரும் சோஷலிஸ அரசாக மாறிவிட்டது. ஏகாதிபத்தியத்தை யும் மேலாதிக்கவாதத்தையும் உறுதியாக எதிர்க்கும் இதர சோஷலிஸ நாடுகளுடன் சேர்ந்து சீன இதர மூன்ருவது உலக நாடுகளின் பக்கத்தில் உறுதியாக நிற்கின்றது. மூன்ருவது உலகில் அவை ஒரு திடகாத்திரமான சக்தியாக மாறி விட்டன.

இரண்டாவதாக, மிக ஈவிரக்கமற்ற ஒடுக்குமுறைக்கு இரையாகியுள்ளதால், மூன்ருவது உலக நாடுகளும் மக்களும் தமது எதிர்ப்பில் மிகவும் திடசித்தத்துடன் நிற்கின்றனர். லெனின் கூறியது போல, ''காலனிகள் தீயாலும் வாளாலும் வெற்றி கொள்ளப்பட்டவை.''[48] அதுபோல காலனி மக்களும் தீயாலும் வாளாலும் தான் தமது பூரண விடுதலையை பெறமுடியும். காலனிகள், அரை-காலனிகள், அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகள் தேசங்களைக் கொள்ளையடிக்காமல் உலக ஏகாதிபத்தியம் வாழவோ வளரவோ முடியாது. காலனி மக்களின் விடுதலைப் போராட்டங்கள் ஏகாதிபத்தியம் அதன் வாழ்வுக்காகச் சார்ந்திருக்கும் அடிப்படையை ஆட்டம் காணச் செய்ததோடு, இறுதியில் அதை அழித்தொழிக்கவும் செய்யும். இந்நிலையில் ஏகாதிபத்தியம் ஒரு நிர்க்கதியான போராட்டத்தை நடத்துவதும் இயற்கையானதே.

யுத்த பிற்கால ஆரம்பத்தில் மூன்ருவது உலக நாடுகளில் பெரும்பாலானவை இன்னும் தமது சுதந்திரத்தை வென்றெடுக்கவில்லை. அவற்றில் சில ஒரு அரைச் சுதந்திர நிலையில் இருந்தன. அக்காலத்தில் அவற்றின் போராட்டம் தேசிய விடுதலையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதை குறிக்கோளாக கொண்டிருந்தது. அது அடிப்படையில் புரட்சிகர ஆயுதப் போராட்டமாகவே நடைபெற்றது. பின்னர் அவை ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் பிரதான சக்தியாக உலக ரீதியில் அங்கீகரிக்கப்பட்டன. இப்பொழுது மூன்ருவது உலகத்தின் சில பகுதிகளிலுள்ள மக்கள் விடுதலைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் ஆயுதப் போராட்டத்தை இன்னும் நடத்திக் கொண்டிருக்கின்றனர். ஏகாதிபத்தியத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான உலகம் பரந்த போராட்டத்தில் இன்னும் முன்னணியில் நின்று போரிடுகின்றனர். அவர்களுடைய போராட்டத்துக்கு உறுதியான ஆதரவு

அளிப்பது சர்வதேச பாட்டாளி வர்க்கம், புரட்சிகர உலக மக்கள் இரு சாராரையும் பொறுத்தவரையில் தட்டிக் கழிக்க முடியாத புனிதக் கடமையாகும்.

இன்று புதிய பிரச்சினை ஒன்று எழுகின்றது:- சுதந்திரம் பெற்ற ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்தில் இனனும் ஓரளவு நீண்ட சரித்திர காலகட்டம் வரை பிரதான சக்தியாக விளங்க முடியுமா? நமது விடை 'ஆம்' என்பதேயாகும். அவை சுதந்திரப் பிரகடனம் செய்துள்ள போதிலும், அவை இன்னும் பூரணமான அரசியல், பொருளாதார சுதந்திரத்தை வென்றெடுக்கும் பாரதூரமான கடமையை எதிர் நோக்கியுள்ளன. காரணம் தேசிய விடுதலைப் போராட்டமானது அலைமேல் அலையெறிந்து கொந்தளித்துப் பாய்ந்த போது, பெரும்பாலான ஏகாதிபத்தியவாதிகள் தமது முன்னுள் காலனிகளிலிருந்து ''வெளியேறும்'' படியும், இந்த புதிய நாடுகளின் சுதந்திரத்தை அங்கீகரிக்கும்படியும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இருந்தும் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் அவர்கள் தமது செல்வாக்கை பேணிக்காக்க புதிய சூழ்ச்சிகளையும் தந்திரோபாயங்களையும் பாவிப்பது நிச்சயம். அத்துடன் அவற்றின் இடத்தை நிறைப்பதற்கு புதிய ஏகாதிபத்தியவாதிகளும் மேலாதிக்கவாதிகளும் காத்துக் கொண்டிருக்கிறுர்கள். பொருளாதார ரீதியில், ஏகாதிபத்திய நாடுகளும் விசேஷமாக மேலாதிக்க வல்லரசுகளும் மூன்ருவது உலகத்தில் பரந்தளவில் ஊடுருவ மட்டுமல்ல, ஒற்றைப் பயிர்ச்செய்கைப் பொருளாதாரத்தையுடைய வளர்முக நாடுகளின் உற்பத்திகளை கட்டுப்படுத்தவும், அடிப்படை உற்பத்திகளின் விலைவாசிகளைக் குறைக்கவும், தொழிற்துறை உற்பத்திப் பண்டங்களின் விலைவாசிகளை கூட்டவும் உலகச் சந்தையிலுள்ள தமது ஏகபோக நிலைமையைப் பயன்படுத்தி, அவற்றை ஈவிரக்கமின்றிச் சுரண்டுகின்றன. அரசியல் ரீதியில், புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளைக் கட்டுப்படுத்தவும், கவிழ்க்கவும், அவற்றில் தலையிடவும் அவர்கள் பல்வேறு உத்திகளைக் கையாண்டு, அவற்றின் சுதந்திரத்தையும் இறைமையையும் ஊறுபடுத்துகின்றனர். அங்கெல்லாம்

தமக்குக் கீழ்ப்படிவுள்ள ஆமாம் சாமிகளைப் போஷித்து வளர்க்கவும் இயன்றதெல்லாம் செய்கின்றனர். ராணுவ ரீதியில், மூன்றாவது உலக நாடுகளை அடிமைப்படுத்தி. யுத்த தந்திர மூலவளங்கள், யுத்த தந்திர பிரதேசங்கள், யுத்த தந்திர மார்க்கங்கள் ஆகியவற்றைக் கவரும் நோக்கத்துடன், இந்த நாடுகளுக்கான ஆயுத விநியோகத்தைக் கட்டுப்படுத்தவும், அவற்றின் ஆயுதப் படைகளைப் பயிற்றி, ஆணை வழங்கவும் சாத்தியமான எல்லா வழிகளிலும் முயல்கின்றனர். இன்னும் பலாத்காரத்தைப் பிரயோகிப்பதாக அப்பட்டமாய் அச்சுறுத்துகின்றனர், ஆக்கிரமிப்பு யுத்தங்களைக் கூட கட்டவிழ்த்து விடுகின்றனர். சுதந்திரமாக இருந்து, வாழ்ந்து, வளர்வதற்காக மூன்றாவது உலக நாடுகளும், மக்களும் ஏகாதிபத்தியத்தின், எல்லாவற்றுக்கும் மேலாக மேலாதிக்கவாதத்தின் ஆக்கிரமிப்பு, விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக ஒரு நீடித்த, பயங்கரமான ஜீவமரணப் போராட்டத்தை நடத்துவது தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லை. இந்நிலையில் புதிய தேசிய விடுதலை யுத்தங்கள் வெடித்தெழுவது நிச்சயம் ஒருபுறம் மூன்றாவது உலகத்துக்கும், மறுபுறம் ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்கவாதத்துக்கும் இடையில் நிலவும் தவிர்க்க முடியாத இந்த முரண்பாடுகளும் போராட்டங்களும் ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்கவாதத்துக்கும் எதிரான போராட்டத்தில் பிரதான சக்தியாக விளங்கும் மூன்றாவது உலகத்தின் நீண்டகாலப் பாத்திரத்தை நிர்ணயிக்கின்றன.

மூன்றாவதாக, மூன்றாவது உலக நாடுகளும் மக்களும் போராட்டத்தின் போக்கில் தமது அரசியல் விழிப்புணர்வை பெரிதும் விரிவாக்கி, தமது ஐக்கியத்தை பலப்படுத்தியுள்ளனர். 2வது உலக யுத்தத்துக்குப் பிந்திய சுமார் 30 ஆண்டு காலத்தில், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க கண்டங்களிலும் பிறவற்றிலும் உள்ள பல நாடுகள் தமது நீடித்த கர்ணகடூரமான போராட்டத்தில் ஆழமான ஒரு உண்மையை, அதாவது ஒரு பலவீனமான நாடு ஒரு பலமான நாட்டைத் தோற்கடிக்க முடியும், ஒரு சிறிய நாடு ஒரு பெரிய நாட்டைத் தோற்கடிக்க முடியும் என்ற உண்மையை

உணரத் தலைப்பட்டுள்ளன. இது மூன்றாவது உலகம் முழுவதுக்கும் ஒரு மகத்தான மனோ விடுதலையாகவும், ஒரு பெரும் அரசியல் முன்னேற்றப் பாய்ச்சலாகவும் திகழ்கிறது. 1970 மே 20ல் வெளியிட்ட தமது பிரசித்திபெற்ற அறிக்கையில் தலைவர் மாஓ கூறியதாவது:- "ஒரு நீதியான லட்சியம் அமோக ஆதரவைப் பெறும்; அதே சமயம் ஒரு அநீதியான லட்சியம் அற்ப ஆதரவையே பெறும் என்று எண்ணற்ற சான்றுகள் நிரூபிக்கின்றன. ஒரு பலவீனமான நாடு ஒரு பலமான நாட்டைத் தோற்கடிக்க முடியும். ஒரு சிறிய நாடு ஒரு பெரிய நாட்டைத் தோற்கடிக்க முடியும். துணிவுடன் போராட்டத்தில் எழுந்து, துணிவுடன் ஆயுதம் ஏந்தி, தமது நாட்டின் தலைவிதியை தமது சொந்தக் கைகளில் எடுத்துக் கொண்டால், ஒரு சிறிய நாட்டு மக்கள் ஒரு பெரிய நாட்டின் ஆக்கிரமிப்பை நிச்சயம் தோற்கடிக்க முடியும். இது ஒரு வரலாற்று விதியாகும்." தலைவர் மாஓவின் இந்த அறிக்கை கடந்த சில தசாப்தங்களில் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்கள் தமது ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்தில் ஈட்டிய பிரதான அனுபவத்தின் ஒரு விஞ்ஞான ரீதியான தொகுப்புரையாகவும், மூன்றாவது உலக மக்கள் அனைவருக்கும் பேருற்சாகம் ஊட்டுவதாகவும் உள்ளது. இனிமேல் மூன்றாவது உலக நாடுகளும் மக்களும் ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்கவாதத்துக்கும் அஞ்சவில்லை. மாறாக, ஏகாதிபத்தியமும் மேலாதிக்கவாதமும் தான் மூன்றாவது உலக நாடுகளுக்கும் மக்களுக்கும் அஞ்சுகின்றன என்பதை இன்றைய உலகின் அடிப்படை வரலாற்றுப் போக்கு காட்டுகின்றது.

இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன் ஒடுக்கப்பட்ட தேசங்களின் ஏகாதிபத்திய - எதிர்ப்புப் போராட்டம் அடிக்கடி பலத்த, நிலையான உலக ரீதியான ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் இன்று விஷயங்கள் வேறாக உள்ளன. சோஷலிஸ நாடுகள் உட்பட மூன்றாவது உலக நாடுகள் மத்தியிலும், சர்வதேச பாட்டாளி வர்க்கம் உட்பட ஆக்கிரமிப்பை எதிர்க்கும் சக்திகள் மத்தியிலும் காணப்படும் பரஸ்பர ஆதரவு, மூன்றாவது உலக நாடுகளையும் மக்களையும் பொறுத்தவரையில், அவர்கள் ஏகாதிபத்தியத்துக்கும் மேலா

திக்கவாதத்துக்கும் எதிரான போராட்டத்தில் பிரதான சக்தியாக விளங்கி, மேலும் பயனுள்ள பாத்திரம் ஒன்றை வகிப்பதை சாத்தியமாக்கி விட்டது. அரசு அதிகாரத்தை தமது கைகளில் எடுப்பதன் மூலம் சுதந்திரம் பெற்ற மூன்ருவது உலக நாடுகள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு கடந்த காலத்திலும் பார்க்க விசாலமான அரங்குகளேயும் அதிகப்படியான சாதனங்களேயும் பெற்றுள்ளன. இன்னும் தமது ஒத்துழைப்பை தீவிரமாக விரிவுபடுத்தவும், கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளவும் அவற்ருல் முடியும். மூன்ருவது உலக நாடுகள் பிரதானமாக சர்வதேச அரங்குகளே பொது அபிப்பிராயத்தின் நீதி மன்றங்கள் ஆக்கி, அவற்றின் முன் ஏகாதிபத்திய மேலாதிக்கவாதிகளே நிறுத்தி, குற்றப்பத்திரிகை படிக்கின்றன. அவை பிராந்திய நோக்கங்களுக்காக சர்வதேச ஸ்தாபனங்களே அல்லது விசேஷ நிறுவனங்களே அமைத்து, அவற்றின் மூலம் தமது பொது உரிமைகளேயும் நலன்களேயும் பாதுகாக்க ஒன்று சேர்கின்றன. கூட்டுச்சேரா இயக்கமானது அதன் எண்ணற்ற அங்க நாடுகளின் நலன்களே ஒருமுகப்படுத்துவதற்கும், மேலாதிக்கவாதத்தை கூட்டாக எதிர்ப்பதற்கும் உரிய ஒரு பிரதான உலக சக்தியாக, எல்லாராலும் அங்கீகரிக்கப்பட வேண்டிய ஒரு சக்தியாக மாறிவிட்டது. போராட்டத்தில் வளர்ந்துவரும் ஐக்கியம் என்பது, மூன்ருவது உலக நாடுகளேப் பொறுத்த வரையில், அவை தமது மேலாதிக்கவாத-எதிர்ப்பு போராட்டத்தை விரிவாக்குவதையும், அப் போராட்டத்தை ஓர் உயர்ந்த மட்டத்தில் நடத்துவதையும், மேலும் குறிப்பிடத்தக்க விளேவுகள் ஈட்டுவதையும் சாத்தியமாக்கி உள்ளது. உதாரணமாக, மேலாதிக்கவாதிகளின் கடல் ஆதிக்கத்துக்கு எதிராக லத்தீன் அமெரிக்க நாடுகள் தொடக்கி வைத்த போராட்டம். மூன்ருவது உலகத்தைச் சேர்ந்த அரபு நாடுகளும், இதர எண்ணெய் ஏற்றுமதி நாடுகளும் தமது எண்ணெய் உரிமைகளேப் பாதுகாக்கத் தொடுத்த போராட்டம், இதர மூலப்பொருள் உற்பத்தி நாடுகளின் போராட்டம் எல்லாம் ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்கவாதத்துக்கும் எதிர்பாராத கடுமையான தோல்விகளே ஏற்படுத்தி விட்டன. இது

வரை காலமும் இகழ்ந்து நோக்கப்பட்ட ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் தமது தலைவிதியை தமது சொந்தக் கைகளில் துணிகரமாக எடுத்து தமக்குரிய உரிமைகளையும் இன்று வென்றெடுத்துள்ளன. இது இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன் கற்பனை செய்யக்கூட முடியாத ஒரு காரியமாகும்.

நாலாவதாக, ஒரு பன்முகக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், 120க்கு மேலான மூன்றாவது உலக நாடுகளைக் கொண்ட விசாலமான ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க, ஓஷானிய பிரதேசங்களில் ஏகாதிபத்திய நாடுகளின் அடக்கு முறை ஆற்றலுக்கும் ஓர் எல்லை உண்டு என்பதை மட்டுமல்ல, அவற்றின் நலன்களும் ஏதோ ஒரு வகையில் மோதுகின்றன என்பதையும் காண முடியும். இது ஒரு நீண்ட காலப் போக்கில் தமது பலத்தில் வளர்வதற்குரிய ஒரு சாதகமான சூழ்நிலையை மூன்றாவது உலகின் ஏகாதிபத்திய-எதிர்ப்புச் சக்திகளுக்கு வழங்குகின்றது. இரண்டு மேலாதிக்க வல்லரசுகளுக்கும் இடையில் போட்டியின் குவிவு மையமாயுள்ள ஐரோப்பா அவற்றின் பலத்தில் பெரும் பகுதியை இழுத்து, குத்தி மடக்கி வைத்திருக்கின்றது. எனவே மூன்றாவது உலக நாடுகள் பலவற்றின் மீது இறுக்கமான கட்டுப்பாட்டை நிலை நிறுத்துவது அவற்றுக்கு இயலாது. காரணம், ஒன்றன் பிடி நெகிழாமல் மற்றதைப் பிடிக்க முடியாத நிலை அவற்றுக்கு அடிக்கடி ஏற்படுகின்றது. இரண்டாவது உலக யுத்தம் முதல் நடந்துவரும் நீண்ட காலப் போராட்டத்தில் தமது விழிப்புணர்வை உயர்த்தி, தமது ஐக்கியத்தைப் பலப்படுத்திக் கொண்ட மூன்றாவது உலக நாடுகளும் மக்களும் தமது எதிரிகளின் இந்தப் பலவீனத்தை உணர்வுபூர்வமாக உபயோகிக்கவும், இரண்டு மேலாதிக்க வல்லரசுகளுக்கும் இரண்டாம் உலக நாடுகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடு, இரண்டு மேலாதிக்க வல்லரசுகளுக்கும் இடையே உள்ள முரண்பாடு, ஆகியவற்றைப் பயன்படுத்தவும், தமது பலமான அம்சங்களைப் பாவித்து சகல தடைகளையும் தாண்டவும், இவ்வாறு ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்கவாதத்துக்கும் எதிரான புரட்சி இயக்கத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவும் தொடங்கியுள்ளனர்.

முதலாவது, இரண்டாவது உலகங்களின் தொழிலாளர் இயக்கங்களும், மூன்றாவது உலகத்தின் ஏகாதிபத்திய-எதிர்ப்

புப் போராட்டங்களும் பரஸ்பரம் ஒன்றுக்கு ஒன்று ஆதர வாக இருக்கின்றன. அபிவிருத்தியடைந்த முதலாளித்துவ நாடுகளின் உழைப்பாளி வர்க்கமும், புரட்சிகர வெகுஜனங்க ளும் தமது வீரதீரப் போராட்டங்களில் பாரிய வெற்றிகள் பலவற்றை ஈட்டி, ஏகாதிபத்தியத்துக்கும் சமூக-ஏகாதிபத்தி யத்துக்கும் மரண அடி கொடுத்து, மூன்றுவது உலக மக்கள் ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்கவாதத்துக்கும் எதிராக நடத்தும் போராட்டங்களுக்கும் பலத்த ஆதரவை வழங்கி னர். நிலைமை வளர்ச்சியடையும் போது, அவர்கள் புரட்சி இயக்கத்தில் புதிய எழுச்சிகளைத் தோற்றுவித்து, ஏகபோக மூலதனத்தின் தாக்குதல்களை விலக்கும் போரில் பலம்பெற்று வளர்ந்து, தமக்கும் பல்வேறு வர்க்கத் தட்டுகளைச் சேர்ந்த மக்களுக்கும் பொருளாதார, அரசியல் உரிமைகளை வென்றெ டுத்து, ஆளும் வர்க்கத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைகளை எதிர்த்து, ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்கவாதத்துக்கும் எதிரான மூன்றுவது உலக மக்களின் போராட்டத்துக்கு ஆத ரவு அளிப்பர். ஆனால், பொதுவாகச் சொன்னால், தற்காலிக மாக சோவியத் ஆளும் கும்பலின் துரோகம், திரிபுவாத சித் தாந்தத்தின் வியாபகம், உழைப்பாளி வர்க்க அணிகளில் ஏற் பட்ட பிளவுகள் ஆகியவற்றின் விளைவாக அபிவிருத்தி அடைந்த முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்களின் புரட்சி இயக்கம் அதன் அணிகளைப் புநரமைத்து, பலத்தைச் சேகரித்து கொள்வது அவசியம். இந்த நாடுகளில் உடனடி யாக அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு உரிய புரட்சிச் சூழ்நிலை இன்னும் தோன்றவில்லை. நிலைமை இவ்வாறு இருப் பதால், ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்கவாதத்துக்கும் எதி ரான போராட்டத்தில் பிரதான சக்தியாக விளங்கும் தமது பாத்திரத்தை மூன்றுவது உலக நாடுகளும் மக்களும் எவ்வளவு ஊக்கமாக வகிக்கிறார்களோ, அபிவிருத்தியடைந்த நாடுகளின் தொழிலாளர் இயக்கத்துக்கு அவர்கள் வழங்கும் ஆதரவும் உந்து சக்தியும் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக் கும்.

ஏகாதிபத்தியத்தையும் மேலாதிக்க வாதத்தையும் எதிர்ப் பதில் மூன்றுவது உலகத்தை பிரதான சக்தியாகக் கணிப்

பது இந்தப் போராட்டத்தில், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் பொறுப்பை அல்லது பாத்திரத்தை குறைத்து மதிப்பது என்று அர்த்தம் ஆகுமா? இரண்டு மேலாதிக்க வல்லரசுகளுக்கும் எதிரான போராட்டம் உலக பாட்டாளிவர்க்க சோஷலிஷ இயக்கத்தின் பிரதான பகுதியாக விளங்குகின்றது. இது மிக கடினமான மிகச் சிக்கலான ஒரு போராட்டமாகும். சகல நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் முயற்சியுடன் மார்க்ஸிஸம்-லெனினிஸத்தை படித்து, பிரசாரம் செய்து, இந்தப் போராட்டத்தில் ஆதர்சமான முன்னணிப் பாத்திரத்தை வகிக்க வேண்டும். தமது சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும். ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்கவாதத்துக்கும் எதிரான போராட்டத்தில் ஈடுபடும் சகல நாட்டு மக்களுக்கும் பூரண ஆதரவும் உதவியும் வழங்க வேண்டும். அப்பொழுதுதான் இந்தப் போராட்டம் சரியான பாதையில் முன்னேறி, இறுதி வெற்றியை ஈட்ட முடியும். இதிலிருந்து, மூன்றாவது உலகம் ஏகாதிபத்தியத்தையும், மேலாதிக்கவாதத்தையும் எதிர்ப்பதில் பிரதான சக்தியாகிவிட்டது, என்று கூறினால் அது இப்போராட்டத்தில் சர்வதேச பாட்டாளிவர்க்கத்தின் பொறுப்பையும் பாத்திரத்தையும் எவ்விதத்திலும் குறைத்துவிடாது என்பது தெளிவாகின்றது, லெனின் தொழிலாளர் விவசாயிகளின் செஞ்சேனையை நிறுவியபோது, வறிய விவசாயிகள் அதன் முதுகெலும்பாக விளங்கினர். இது செஞ்சேனை சம்பந்தப்பட்ட வரையில் ரஷிய பாட்டாளி வர்க்கத்தின் பொறுப்பை லேசாக்கிவிட்டதா? விவசாயிகளின் பிரச்சினை தேசியப் பிரச்சினையின் அடிப்படையாகவும் சராம்சமாகவும் விளங்குகின்றது என்றும், ''விவசாய வர்க்கமானது தேசிய இயக்கத்தின் பிரதான படையாக அமைகிறது''[49] என்றும் ஸ்டாலின் கூறியபோது, இந்த இயக்கத்தில் பாட்டாளி வர்க்கத்தின் பாத்திரத்தை அவர் மறந்து விட்டாரா? சீனாவின் வறிய விவசாய வெகுஜனங்கள் பாட்டாளி வர்க்கத்தின் இயற்கையான, மிக நம்பகமான நேச அணியாகவும், சீனாவின் புரட்சி சக்திகளின் பிரதான படையாகவும்''[50] திகழ்கின்றனர் என்று தலைவர் மாஓ சுட்டிக்காட்டியபோது, முழுமையான

புரட்சி லட்சியத்தின் சீன பாட்டாளி வர்க்கத்தின் பாத்திரத்தையும் அதே சமயத்தில் அவர் வலியுறுத்த வில்லையா? இன்றைய வரலாற்று நிலைமைகளில் சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை சாக்குப்போக்காக வைத்து, கூறப்படும் கேந்திரம் ஒன்றை அமைத்து, அதன் மூலம் ஏகாதிபத்திய-எதிர்ப்புப் புர்ட்சிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல்வேறு நாடுகளின் மக்களுக்கும் 'இப்படிச் செய், அப்படிச் செய்' என்று ஆணையிட அல்லது இப்போராட்டத்தை ஒரு நாட்டின் தனிப்பட்ட நோக்கங்களுக்கு கீழ்ப்படுத்த முயன்றால், அது உலக மக்களின் போராட்டத்தை மாத்திரம் ஊறுபடுத்தி, குழிபறித்து சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் நேர் விரோதமாகச் செல்லும் என்பதை அனுபவம் மீண்டும் மீண்டும் காட்டியுள்ளது. கூலிப்படைகள் மூலம் இதர நாடுகள் மீது ஆயுதத் தலையீடும் படையெடுப்பும் நடத்துவதை ''பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசக் கடமையை நிறைவேற்றுவது'' என்று சமூக-ஏகாதிபத்தியவாதிகள் வருணிக்கின்றனர். இது அவமானத் தோல்வியில் மட்டும் முடியக்கூடிய ஒரு அப்பட்டமான ஏமாற்றாகும்.

ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்கவாதத்துக்கும் எதிரான போராட்டத்தில் மூன்றாவது உலக நாடுகள் பிரதான சக்தியாக விளங்குவதை ஊர்ஜிதம் செய்யும் போது, அவற்றின் சமுதாய, அரசியல் நிலைமைகள், சர்வதேச போராட்டத்தில் அவற்றின் நடத்தை சம்பந்தமாக அந்நாடுகள் மத்தியில் நிலவும் வேறுபாடுகளை நாம் மறுக்க முனைகின்றோமா? அவற்றின் சமுதாய, அரசியல் அமைப்புகள் வேறுபட்டவை; அவற்றின் பொருளாதார வளர்ச்சித் தரம் சமமானதல்ல. ஒவ்வொரு நாட்டின் அரசியல் நிலைமையிலும் அடிக்கடி மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆக, அந்த நாடுகளின் அதிகாரப் பேர்வளிகள் ஏகாதிபத்தியம், மேலாதிக்கவாதம், தமது சொந்த மக்கள் சம்பந்தமாக வேறுபட்ட மனோபாவங்களைக் கடைப்பிடிப்பது சகஜம். குறிப்பிட்ட சில வரலாற்றுக் காரணங்களுக்காகவும், விசேஷமாக ஏகாதிபத்தியவாதிகளும் மேலா

திக்கவாதிகளும் மூன்றுவது உலக நாடுகள் மத்தியில் வேற்றுமைகளை விதைப்பதன் காரணமாகவும், சில தகராறுகள் தோன்றியதோடு, சில நாடுகளுக்கிடையில் ஆயுத மோதல்களும் இடம்பெற்றன. ஆனால் முழுமையாக நோக்கும்போது, இவற்றில் பெரும்பாலான நாடுகள் ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்க வாதத்துக்கும் எதிரான போராட்டத்துக்காக நிற்கின்றன. மூன்றுவது உலக நாடுகளுக்குள் கூட வேறுபட்ட அரசியல் சக்திகளுக்கிடையில் போராட்டங்கள் நிலவுவது உண்மைதான். சில நபர்கள் புரட்சிவாதிகள், தேசிய ஜனநாயகப் புரட்சியை நடத்துவதில் உறுதியாக நிற்பவர்கள். வேறு சிலர் முற்போக்கு வாதிகள், பல்வேறு இயல்புகளையுடைய மத்திய பாதையினர். ஒரு சிலர் பிற்போக்கு வாதிகள் ஏகாதிபத்தியத்தின் அல்லது சமூக-ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டுகளாகக் கூட சிலர் இருக்கின்றனர். வர்க்கங்கள் இருக்கும் வரை-பாட்டாளி வர்க்கம், விவசாய வர்க்கம், குட்டி முதலாளி வர்க்கம், பல்வர்ண முதலாளி வர்க்கம், நிலப்பிரபு வர்க்கம், இதர சுரண்டும் வர்க்கங்கள் போன்றவை இருக்கும் வரை, இத்தகைய தோற்றப்பாடுகள் தவிர்க்முடியாதவை. இருந்தும், இந்தச் சிக்கலான நிலைமை ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்க வாதத்துக்கும் எதிரான போராட்டத்தில் மூன்றுவது உலக நாடுகள் பிரதான சக்தியாக விளங்கும் அடிப்படை உண்மையை பாதிக்க மாட்டாது. நாம் ஒரு பிரச்சினையை நோக்கும்போது, நாம் அதன் சாராம்சத்தை அல்லது பிரதான அம்சத்தைக் கிரகித்துக்கொள்ள வேண்டும். பொது வரவு செலவுத் தொகுப்புரையில் காட்டப்பட்ட பிரகாரம் உண்மையான விளைவுகளைப் பார்க்கவேண்டும். மூன்றுவது உலக நாடுகளின் அரசியல் நிலைமைகளில் எத்தகைய வேறுபாடுகள் இருந்த போதிலும், அவை ஒருபுறம் ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்க வாதத்துக்கும் மறுபுறம் மூன்றுவது உலக நாடுகள் மக்களுக்கும் இடையில் உள்ள அடிப்படை முரண்பாட்டை மாற்ற முடியாது. அன்றி நாடுகள் சுதந்திரத்தை விரும்புகின்றன, தேசங்கள் விடுதலையை விரும்புகின்றன, மக்கள் புரட்சியை விரும்புகின்றனர் என்ற தடுக்கமுடியாத வரலாற்று ஓட்-

டத்தையும் இவ் வித்தியாசங்களால் மாற்ற முடியாது கடந்து 30 ஆண்டுகளுக்கு மேலான காலத்தில் சர்வதேச அரசியல் போராட்டங்களில் அ வர் க ளின் செயல்களையும் பொதுத் திசை மார்க்கத்தையும் கொண்டு பார்க்கும்போது, ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் ஒடுக்கப் பட்ட தேசங்கள், அவற்றின் உள்ளடக்கத்தையும் பிரதான அம்சத்தையும் பொறுத்த வரையில், புரட்சிகரமானவையும், முற்போக்கானவையும் ஆகும். அவை ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்க வாதத்துக்கும் எதிரான உலகம் தழுவிய போராட் டத்தில் பிரதான சக்தியாய் விளங்குவதை யாரும் மறுக்க முடியாது.

சோஷலிஸ சீனு மூன்ருவது உலகத்தின் ஒரு பகுதி. தலைவர் மாஓ குறிப்பிட்டதாவது:- "சீனு மூன்ருவது உல கத்துக்கு உரியது. காரணம் செல்வந்த அல்லது பலம் வாய்ந்த நாடுகளுடன் அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும், பிற வற்றிலும் சீனுவை ஒப்பிட முடியாது, ஒப்பீட்டு வகையில் வறிய நாடுகளுடன் தான் அதைச் சேர்க்க முடியும்."[51] சீனு ஒரு நீண்ட காலமாக ஏகாதிபத்திய ஒடுக்கு முறையால் பாதிக்கப்பட்டது. அதற்கெதிராக பல போராட்டங்களை நடத்தியது. இன்று சீனுவில் சோஷலிச அமைப்பு முறை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆனல் ஏனைய மூன்ருவது உலக நாடுகளைப்போல, அது இன்னும் ஒரு வளர்முக நாடாகவே உள்ளது. ஏகாதிபத்திய பெருவல்லரசுக்ளுக்கு எதிராக ஒரு நீண்டகால, திட்டமிட்ட போராட்டத்தை நடத்தும் கட மையை இன்னும் எதிர் நோக்கியுள்ளது. முக்காலத்திலும் காணும் பொது அனுபவம் போராட்டத்தில் பொதுக் கட மைகள், பொது நலன்கள் ஆகியவை எல்லாம் சீனு மூன் ருவது உலகுக்கு உரியது என்பதை நிர்ணயிக்கின்றன.

சீனு தான் மூன்ருவது உலகைச் சேர்ந்ததென்று பிர கடனம் செய்துள்ளது. இது குறிப்பாக சீனு சோஷலிஸ பாதையை பின்பற்றி, லெனினிஸ கோட்பாடுகளை உயர்த் திப் பிடிப்பதற்கு ஒரு அத்தாட்சியாகும். லெனின் ரஷியா வையும், காலனிகளிலுள்ள ஒடுக்கப்பட்ட தேசங்களையும்

ஒரே வகையில் சேர்த்த பொழுது, ரஷியா ஏற்கெனவே ஒரு சோஷலிஸ நாடு என்பதை அவர் மறந்திருக்க முடியுமா? லெனின் இவ்வாறு ரஷியவளர்ச்சியின் சோஷலிஸ திசை மார்க்கத்தை மாற்றிவிட்டார் என்று சொல்ல முடியுமா? அப்படி ஒன்றும் சொல்ல முடியாது. அவருடைய நிலைப் பாடு சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் லட்சிய நலன்களுக்கு முற்றிலும் இசைவானது. ரஷிய வளர்ச்சியின் சோஷலிஸ திசைமார்க்கத்தை அவர் உண்மையில் உயர்த்திப் பிடித்தார். இன்று சீனவும், இதர சோஷலிஸ நாடுகளும் ஏகாதிபத்தியத்துக்கும் மேலாதிக்க வாதத்துக்கும் எதிரான போராட்டத்தில் ஏனைய மூன்ருவது உலக நாடுகளுடன் ஒன்ருக நின்று, ஒன்றுக்கு ஒன்று ஆதரவும் உதவியும் அளித்து, தோளோடு தோளிணைந்து முன்னேறுகின்றன. இப்படிச் செய்வதன் மூலம், அவைலெனினின் இம் மகத்தான சிந்தனையை விசுவாசமாக கையேற்று, அதை முன்னெடுத்துச் செல்கின்றன.

''சர்வதேச உறவுகளில், சீன மக்கள் பெரும் தேச வெறியை உறுதியாகவும், முற்று முழுதாகவும், துப்புரவாகவும், பூரணமாகவும் ஒழித்துகட்ட வேண்டும்.''[52] ''விதிவிலக்கின்றி சிறிய அந்நிய நாடுகள் அனைத்தையும் சமமாக நடத்த வேண்டும். ஒருபோதும் செருக்குக் கொள்ளக் கூடாது.''[53] ''ஒருபோதும் மேலாதிக்கவாதத்தை நாடக்கூடாது.''[54] என்று தலைவர் மாஓ எங்களை மீண்டும் மீண்டும் எச்சரித்துள்ளார். இது சீனவின் சோஷலிஸ அமைப்பினதும், தலைவர் மாஓவின் பாட்டாளி வர்க்கப் புரட்சி மார்க்கத்தினதும் ஒரு திட்டவட்டமான கோரிக்கையாகும். இன்று சீன ஒரு வளர்முகநாடு. அது மூன்ருவது உலகத்தைச் சேர்ந்தது. அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களுடன் அக்கம்பக்கமாக நிற்கின்றது. எதிர்காலத்தில் அது பொருளாதார ரீதியில் அபிவிருத்தி அடைந்து ஒரு பலம்வாய்ந்த சோஷலிஸ நாடாக மாறிய போதிலும், அது இன்னும் மூன்ருவது உலகைச் சேர்ந்ததாக இருந்து, அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களுடன் தொடர்ந்தும் ஓரணியில் நிற்கும். 1974 ஏப்ரல் 10ந் தேதி ஐ.நா. பொதுச்சபையின் விசேஷ மாநாட்டில் சீன அரசாங்கத்தினதும் சீன மக்களினதும் சார்பில் தோழர் தெங் சியௌ பிங் பயபக்தியுடன்

பிரகடனம் செய்ததாகவது:- ''ஒரு காலத்தில் சீஞ அதன் அரசியல் சாயம் வெளுத்து, ஒரு மேலாதிக்க வல்லரசாக மாறினுல், உலகில் ஒரு கொடுங்கோலனுக நடந்து, உலகெங்குமுள்ள ஏனைய நாடுகளை அதன் இம்சை, ஆக்கிரமிப்பு, சுரண்டல் ஆகியவற்றுக்கு உள்ளாகினுல், உலக மக்கள் அதன் மீது சமூக ஏகாதிபத்தியம் என்ற முத்திரையைப் பொறிக்க வேண்டும். அதை அம்பலப்படுத்த வேண்டும். எதிர்க்கவேண்டும். அதை தூக்கி வீச சீன மக்களுடன் சேர்ந்து உழைக்க வேண்டும். இங்கு நாம் பின்வருமாறு கேட்க விரும்புகிறோம்:- இஃறு இத்தகைய வெளிப்படையான, நேர்மையான பிரகடனத்தை வெளியிடத் துணியும் இதர வல்லரசு ஏதும் உண்டா?

இருந்தும், சோவியத் திரிபுவாத துரோகக் கும்பல் மூன்ருவது உலகில் ''மேலாதிக்கத்தை நாடும்'' ஒரு நாடென்று சீஞவை அகந்தையுடன் திட்டியது. இத்தகைய மானங்கெட்ட பழிச்சொல் நகைப்பிற்கு உரியதாகும். கடந்த காலங்களில் ஏனைய மூன்ருவது உலக நாடுகளுடன் சீஞ கொண்டுள்ள உறவுகளிலும், தனது ஆற்றலுக்கு ஏற்ப அவற்றுக்கு அளிக்கும் உதவியிலும், அது மேலாதிக்கத்தை நாடுவதைக் காட்டும் ஒரு உதாரணமேனும் உண்டா? எந்த ஒரு நாட்டையும் ஆக்கிரமித்து இடங்கொள்ள சீஞ ஒரு படை வீரனையேனும் அனுப்பியதுண்டா? எந்த நாட்டிடமிருந்து எப்போதாயினும் ஒரு ராணுவத்தளமேனும் கோரியதுண்டா? எந்த நாட்டிடமுமிருந்து எந்த காலத்திலும் ஒரு சதமேனும் அபகரித்ததுண்டா? அல்லது பதில் கிரயத்துக்காக உதவி வழங்கும்போது, அதைப் பெறும் நாடு சீஞவைப் பொறுத்த வரையில் இப்படி நடக்க வேண்டும் அல்லது அப்படி நடக்க வேண்டும் என்று எந்த நாட்டுக்கேனும் ஆணையிட்டதுண்டா? எந்த நாட்டையேனும் பிடித்ததுண்டா? தலைவர் மாஓ எப்பொழுதும் கூறியது போல, **''உலக மக்கள் தமது நீதியான போராட்டங்களில் ஒருவரை ஒருவர் ஆதரிக்கின்றனர்''**[35] வழங்குபவனுக்கும் வாங்குப்பவனுக்கும் இடையில் ஒருபோதும் ஒற்றை வழிப்பாதை என்பது கிடையாது. ஏனைய மூன்ருவது உலக நாடுகளுடன் கொள்ளும் அதன் உறவுகளில் சீஞ

பிரசித்தி பெற்ற சமாதான சுகவாழ்வுக்கான ஐந்து கோட்பாடுகளையும், இதர நாடுகளுக்கான பொருளாதார உதவி பற்றிய எட்டுக் கோட்பாடுகளையும் வகுத்து, அவற்றை விசுவாசமாக கடைப்பிடித்து வருகின்றது. இது எல்லாருக்கும் தெளிவான ஒரு விஷயம். சீன மக்களுக்கும் ஏனைய மூன்ருவது உலக மக்களுக்கும் உள்ள நேசப் பிணைப்புகளை குழப்புவதற்கான சோவியத் திரிபுவாத துரோகக் கும்பலின் வீண் முயற்சி அதன் பிற்போக்கு இயல்புகளை மீண்டும் ஒரு தடவை அம்பலப்படுத்துவதற்கு மட்டுமே சேவை செய்கின்றது. மேலாதிக்கவாதிகளின் கண்களில் இம் மண்ணுலகில் மேலாதிக்கம் செலுத்துகின்றவர்களும் அதற்கு அடிபணிகின்றவர்களும் என இரண்டு வகையான மக்கள் மட்டும் இருக்கின்றனர். என்பது தெளிவு. லெனினினுடைய இந்த யோக்கியமற்ற வாரிசுகள் எத்தகைய பரிதாபத்துக்கு உரியவர்கள்! எத்தகைய குறுகிய நோக்கு உடையவர்கள். சீன மக்களுக்கும் இதர மூன்ருவது உலக நாடுகளின் மக்களுக்கும் உள்ள மகோன்னத ஒருமைப்பாடு ஒன்ருகப் போரிடுவதிலும் ஒன்ருக உழைப்பதிலும் சிந்திய இரத்தத்தாலும் வியர்வையாலும் இணைக்கப்பட்டுள்ளது; இதை எந்தத் துரோகியாலும் சிதைக்க முடியாது என்ற இந்த சாமானிய உண்மை கூட அவர்களுடைய மண்டைக்குள் ஏறவில்லை:

## மேலாதிக்க வாதத்திற்கு எதிரான போராட்டத்தில் ஐக்கியப்படக் கூடிய ஒரு சக்தி இரண்டாவது உலகம்

சமீப ஆண்டுகளின் உலக அரசியல் நிலைமையை ஆராயும்போது, தலைவர் மாஓ எப்பொழுதும் இரண்டு மேலாதிக்க வல்லரசுகளுக்கும் எதிரான போராட்டத்தில் இரண்டாவது உலக நாடுகளை ஐக்கியப்படக் கூடிய ஒரு சக்தியாக கருதினர். "நாம் பிரிட்டன், பிரான்சு, மேற்கு ஜெர்மனி போன்ற இந்த நாடுகளை வென்றெடுக்க வேண்டும்"[56] என்று அவர் கூறினர்.

மேலாதிக்க வாதத்துக்கு எதிரான போராட்டத்தில் இரண்டாவது உலக நாடுகள் ஐக்கியப் படக் கூடிய ஒரு

சக்தியாக விளங்குவது எப்படி? காரணம் என்னவெனில், கடந்த 30 ஆண்டுகளில் சர்வதேச அரசியல், பொருளாதார உறவுகளில் அவற்றின் பாத்திரத்தில் ஒரு முக்கியமான மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க கட்டுப்பாட்டுக்கு எதிராக 20, 30 ஆண்டுகள் நடத்திய போராட்டத்தின் மூலமும், அமெரிக்கா அதன் ஆக்கிரமிப்புக் கொள்கையில் அடைந்த உலகரீதியான பெரும் பின்னடைவுகளை சாதகமாக பயன்படுத்துவதன் மூலமும், மேற்கு ஐரோப்பிய நாடுகள் யுத்த பிற்கால ஆரம்பத்தில் அமெரிக்க ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டிருந்த தமது நிலைமையை மாற்றுவதில் வெற்றி பெற்றன. யப்பானுடைய நிலைமையும் அதுவே ஆகும், மேற்கு ஐரோப்பாவில் பொதுச் சந்தையின் ஸ்தாபகம், டி கால் தலைமையில் பிரான்சு கடைப்பிடித்த சுதந்திரமான கொள்கைகள், வியட்நாம், கம்புச்சியா, லாவோஸ் ஆகியவற்றில் அமெரிக்க ஆக்கிரமிப்பு யுத்தம் சம்பந்தமாக மேற்கு ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட செயலற்ற, விமர்சன மனோபாவம், முதாளித்துவ உலகில் டாலர்-மைய நாணய அமைப்பின் வீழ்ச்சி, ஒருபுறம் மேற்கு ஐரோப்பாவுக்கும் யப்பானுக்கும், மறுபுறம் அமெரிக்காவுக்கும் இடையில் கூர்மையாகி வரும் வர்த்தக, நாணய யுத்தங்கள்-இவை எல்லாம் அமெரிக்கா தலைமை தாங்கிய முன்னால் ஏகாதிபத்திய முகாமின் சீரழிவை கோடிட்டுக் காட்டுகின்றன. மேற்கு ஐரோப்பிய நாடுகள், யப்பான் முதலியவற்றின் ஏகபோக முதலாளிகள் ஆயிரமாயிரம் தளைகளால் அமெரிக்காவுடன் பிணைக்கப்பட்டுள்ளனர். சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தால் வரும் அபாயத்தை எதிர்நோக்கும்போது, இந்த நாடுகள் அமெரிக்க ''பாதுகாப்புக் குடை'' யிலேயே இன்னும் ஒதுங்க வேண்டியுள்ளது. ஆனால் அமெரிக்கா அதன் கட்டுப்பாட்டுக் கொள்கையை மேலும் தொடர்ந்தால், அவை அத்தகைய கட்டுப்பாட்டுக் கெதிராகவும் சமத்துவ பங்குதார் முறைக்காகவும் நடத்தும் தமது போராட்டத்தை நிறுத்திவிட மாட்டா.

ஆனால் இன்று சோவியத் சமூக-ஏகாதிபத்தியம் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மிகப் பெரும் ஆபத்தாக விளங்கு

வது தெளிவு, காரணம், உலக மேலாதிக்கத்துக்கான சோவியத் யுத்ததந்திரத்தில் ஐரோப்பா குவிவுமையமாக உள்ளது. சோவியத் யூனியன் கிழக்கு ஐரோப்பாவிலும், ஐரோப்பாவின் வடக்கு, தெற்கு கடல்களிலும் அதன் ராணுவ, கடற்படைகளைக் குவித்து வைத்திருக்கின்றது. இவை மேற்கு ஐரோப்பாவை சுற்றிவளைக்கவே அனுப்பப்பட்டுள்ளன, அதே சமயம் செங்கடலிலிருந்து இந்து சமுத்திரத்தக் கூடாக நன்னம்பிக்கை முனை வழியாய் தென் அத்லாந்திக் சமுத்திரத்தின் கிழக்குக் கரையோரங்கள் வரை செல்லும் மார்க்கத்திலுள்ள யுத்ததந்திர பிரதேசங்களைக் கைப்பற்றி ஐரோப்பாவை எல்லாப் பக்கங்களிலுமிருந்து ராணுவ ரீதியில் சுற்றிவளைத்து, மேற்கு ஐரோப்பாவுக்கு ஜீவாதாரமாயுள்ள பிரதான போக்குவரத்து மார்க்கங்களை பாரதூரமாக அச்சுறுத்துகின்றது. இது மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பந்தோபஸ்துக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கி, அவற்றின் பாதுகாப்புகளைப் பலப்படுத்துமாறும், அவற்றின் பரஸ்பரத் தொடர்புகளை ஒருமுகப்படுத்துமாறும், பொருளாதார, அரசியல் ரீதியிலும் பாதுகாப்பிலும் அவற்றின் ஐக்கியத்தைப் பேணி விரிவுபடுத்துமாறும் அந் நாடுகளை நிர்ப்பந்திக்கின்றது. தூரகிழக்கில் யப்பானும் இதுபோன்ற பாரதூரமான அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது. சீனுவை இலக்காகக் கொண்டு தூர கிழக்கில் சோவியத் படைகள் பெருமளவில் குவிக்கப்பட்டிருப்பது அடிப்படையில் அமெரிக்காவையும் யப்பானையுமே இலக்காக கொண்டுள்ளன. சோவியத் யூனியன் யப்பானின் வட பிரதேசங்களையும் பாரம்பரிய கடற் பிராந்தியங்களையும் பலாத்காரமாக இடம் கொண்டுள்ளது. இது யப்பானில் அதன் ஊடுருவலை தீவிரமாக்கி, அதிகரித்து வரும் அச்சுறுத்தலாக திகழ்கின்றது. யப்பானின் தேசபக்த சக்திகள் அனைத்தையும் பொறுத்தவரையில், இது அவற்றின் ஆத்திரத்தையும் எதிர்ப்பையும் கிளப்பிவிட்டுள்ளது. அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா ஆகியவையும் கூட சோவியத் விஸ்தரிப்புக்கும் ஊடுருவலுக்கும் எதிராக தமது விழிப்புணர்வை உயர்த்தியுள்ளன.

சமீப ஆண்டுகளில் ஒருபுறம் மேற்கு ஐரோப்பிய நாடுகள், யப்பான் முதலியவற்றுக்கும், மறுபுறம் மூன்ருவது உல

கத்துக்கும் இடையிலான உறவுகளிலும் புதிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பிரிட்டன், பிரான்சு, மேற்கு ஜெர்மனி, யப்பான் முதலியவை புதிய சூழ்நிலைகளிலும், புதிய வடிவங்களிலும், அரசியல், பொருளாதார ரீதியிலும் பிறவழிகளிகளிலும் பல மூன்ருவது உலக நாடுகள் மீதான தமது கட்டுப்பாட்டை நிலைநிறுத்தவும், சுரண்டலை நடத்தவும் பாடுபடுகின்ற போதிலும், முழுமையாக நோக்கினுல், இந்த நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தி அடக்கி ஒடுக்கும் பிரதான சக்தி பிரிட்டன் முதலியவை அல்ல. சில சந்தர்ப்பங்களில் அவற்றின் சொந்த நலன்கள் மூன்ருவது உலக நாடுகளுக்கு சில சலுகைகளை வழங்குமாறு, அல்லது மேலாதிக்கவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் அவற்றுக்கு ஆதரவு அளிக்குமாறு, அல்லது நடுநிலைமை வகிக்குமாறு, கூட அவற்றை நிர்ப்பந்திக்கின்றன. உதாரணமாக, எண்ணெய்த் தடை சம்பந்தமான 1973 போராட்டத்துக்குப் பின், மேற்கு ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகள் எண்ணெய் உற்பத்தி நாடுகளை எதிர்ப்பதற்குப் பதில், பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்து, மத்திய கிழக்கு பிரச்சினையின் தீர்வுக்கு அறிவு பூர்வமான சில ஆலோசனைகளையும் கொடுத்தன. 1977-ல் சோவியத் யூனியனுல் திட்டமிடப்பட்ட ஆயுதப் படையெடுப்பை சைறே முறியடித்தபோது, பிரான்சு அதன் ராணுவப் போக்குவரத்துக்கு ஓரளவு ஆதரவை அளித்தது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சோவியத் கட்டுப்பாட்டுக் கெதிராக போராட்டங்கள் நடத்துவதை தளர்த்தவில்லை. செக்கோஸ்லவாக்கியாவை சோவியத் யூனியன் இடங்கொண்டது முதல், மக்களின் எதிர்ப்பு தொடர்ச்சியாக வளர்ந்து வருகின்றது. 1976-ல் புதிய அரசியல் சட்டந்தில் போலந்து-சோவியத் உறவு பற்றிய சரத்து ஒன்று சேர்க்கப்பட்டதை ஆட்சேபித்து. போலந்து மக்கள் பரந்துபட்ட போராட்டங்களை அடுத்தடுத்துத் தொடுத்தனர். அங்கு வெடித்தெழுந்த தொழிலாளர் வேலை நிறுத்தங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ''நமக்கு சுதந்திரம் வேண்டும்'' ''நமக்கு ரஷியர்கள் வேண்டாம்'' என்பன போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளின்

அரசாங்கங்கள் கூட சோவியத் கட்டுப்பாட்டை எதிர்க்கும் ஒரு தெளிவான மனேபாவத்தை வெளிக்காட்டின, அவற்றின் பத்திரிகைக் கட்டுரைகள் சிலவற்றில் ''பரஸ்பர நலன் பற்றிய கோட்பாடுகள் அரைகுறையாகவும் பல்வேறு அளவிலும் அத்து மீறப்பட்டன,''[57] என்பன போன்ற முறைப்பாடுகள் காணப்பட்டன. சோவியத் யூனியனுடன் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உறவு ''ஒரு சோஷலிஸ நாடு இன்னெரு சோஷலிஸ நாட்டுக்கு அடிக்கடி தியாகங்கள் செய்யும் அடிப்படையில் வளர்க்கப்பட முடியாது,''[58] ''எல்லாவற்றையும் ஒரு முகப்படுத்தும் முயற்சி நடைமுறையில் ஒன்றையும் ஒருமுகப்படுத்த முடியாத நிலைமைக்கு வழிகோலும்''[59] என்பன போன்ற கருத்துகளும் அவற்றில் காணப்பட்டன ''ஒவ்வொரு பரஸ்பா பொருளாதார கமிஷன் நாட்டினதும் விசேஷ நலன்கள் கவனிக்கப்பட வேண்டும்,''[60] ஒரு சுதந்திரமான தேசிய பொருளாதாரம் பேணப்பட வேண்டும்''[61] என்பன போன்ற கோரிக்கைகளும் அவற்றில் இடம்பெற்றன. உலக மேலாதிக்கத்துக்கான அதன் போட்டியை சோவியத் யூனியன் தீவிரமாக்கும் போது, மேற்கு ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் எதிரான சோவியத் தயாரிப்புகளில் கிழக்கு ஐரோப்பா ஒரு மிதிபலகை ஆகின்றது. வார்ஸோ ஒப்பந்த ஸ்தாபனத்தின் மூலம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் சோவியத் கட்டுப்பாடும் தலையீடும் நாளுக்கு நாள் சகிக்க முடியாதபடி அதிகரிக்கின்றன. இவ்வாறு கிழக்கு ஐரோப்பிய மக்கள் மத்தியில் அமைதியின்மை வளர்ந்து, அவற்றின் சுதந்திரம், பந்தோபஸ்து, சமத்துவ உரிமைகள் ஆகியவற்றைப் பேணுவதற்கான போராட்டம் திரண்டு உருண்டு வருகின்றது.

உண்மையில் மூன்ருவது உலக நாடுகள் பலவற்றில் ஆழ்ந்து வேரோடிய தமது சுரண்டலையும் கட்டுப்பாட்டையும் சில இரண்டாவது உலக நாடுகள் லேசாகக் கைவிடமாட்டா என்பது உணரப்பட வேண்டும். இரண்டாவது உலகத்துடன் மூன்ருவது உலகம் சமத்துவமும் பரஸ்பர நலனும் தழுவிய உறவுகளை ஸ்தாபிப்பது ஒரு நீடித்த கடினமான போராட்டத்தை உள்ளடக்கியதாகும். இருந்தும் ஏற்

கனவே சுட்டிக்காட்டியது போல, இரண்டாவது உலகம் இரண்டு மேலாதிக்க வல்லரசுகளினதும் தலையீடு, கட்டுப்பாடு, இம்சை ஆகியவற்றுக்கு, விசேஷமாக சோவியத் யூனியனின் யுத்த அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருக்கின்றது. இது ஒரு பயங்கர உண்மையாகி விட்டது மட்டுமல்ல, தொடர்ந்தும் அப்படியே இருக்கும். யப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் போது ஏகாதிபத்தியம் சம்பந்தமாக சீன கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையை விளக்குகையில் தலைவர் மாஓ குறிப்பிட்டதாவது :- ''கம்யூனிஸ்ட் கட்சி எல்லா ஏகாதிபத்தியத்தையும் எதிர்க்கின்றது. ஆனுல் சீனுவுக்கு எதிராக ஆக்கிரமிப்பு நடத்தும் யப்பானிய ஏகாதிபத்தியத்துக்கும் இன்று ஆக்கிரமிப்பு நடத்தாத ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் இடையில், மஞ்சுக்கோ ஆட்சியை அங்கீகரித்த, யப்பானின் நேச அணிகளான ஜெர்மன், இத்தாலிய ஏகாதிபத்தியத்துக்கும் யப்பானுக்கு எதிரான பிரித்தானிய, அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் இடையில், தூரகிழக்கில் ஒரு மியூனிச் கொள்கையைப் பின்பற்றி, சீனுவின் யப்பானிய - எதிர்ப்புக்குக் குழிபறித்த நேற்றைய பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இந்தக் கொள்கையைக் கைவிட்டு சீனுவின் எதிர்ப்புக்கு ஆதரவான இன்றைய பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நாம் ஒரு வேறுபாட்டைச் செய்துகொள்ள வேண்டும்.''[62] இதே காரணத்துக்காக இன்று நமது பிரதான எதிரிகளாக விளங்கும் இரு மேலாதிக்க வல்லரசுகளுக்கும் இரண்டாவது உலக நாடுகளுக்கும் இடையில் வேறுபாடு செய்துகொள்வது தமது போராட்டத்தின் போக்கில் மூன்ருவது உலக நாடுகளும் மக்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டிய ஒரு முக்கியமான பிரச்சினையாகும். சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் எதிரான பொதுப் போராட்டத்தில் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் இரண்டாவது உலகத்துடன் இணைந்து கொள்வது தேவையானதும், சாத்தியமானதுமாகும்.

சோவியத் யூனியன் ஐரோப்பாவை யுத்த தந்திர குவிவு மையமாக கொள்வதால், கிழக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகள் இரண்டும் அதன் தாக்குதலின் பழுவை தாங்கிக் கொள்ள வேண்டும். அவை தமது தேசிய சுதந்திரத்தைப் பாதுகாக்

கும் ஒரு பாரதூரமான பிரச்சினையையும் எதிர் நோக்குகின்றன.

இரண்டாவது உலகத்தை அல்லது ஐரோப்பாவைச் சேர்ந்த இத்தகைய அபிவிருத்தியடைந்த நாடுகளின் தேசிய சுதந்திரத்தை பாதுகாக்கும் சுலோகத்தை இன்னும் முன் வைப்பது கோட்பாட்டு ரீதியில் சரியானதா?

நவீன ஐரோப்பிய வரலாற்றின் பல்வேறு கட்டங்களில், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தேசிய சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான யுத்தங்கள், அபிவிருத்தியடைந்த ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரையில் கூட, சந்தர்ப்பவாதிகள் தாம் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கு செய்த துரோகத்தை மறைப்பதற்கு ''தாய்நாட்டின் பாதுகாப்பு'' என்ற சுலோகத்தை உபயோகித்தற்காக கண்டிக்கப்பட்ட போதும் கூட, அனுமதிக்கக் கூடியவை மட்டுமல்ல, தேவையானவையும் புரட்சிகரமானவையும் ஆகும்.

1891ல் ஜெர்மனி ரஷியாவிடமிருந்து உடனடியான ஒரு ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்கிய போது, ஏங்கெல்ஸ் எழுதியதாவது:- ''ரஷிய ஜாரிஸம் மேலைத் தேசங்கள் அனைத்தினதும் எதிரி, இந்த தேசங்களின் முதலாளி வர்க்கத்தின் எதிரியும் கூட.''[63] ''யுத்த அபாயம் இன்னும் பெரிதாக வந்தால், அரசாங்கம் இடையீடின்றி யுத்தத்தை நடத்துவதற்கு புரட்சிகர மார்க்கம் உட்பட சகல வழிகளையும் உபயோகிக்கும் என்ற நம்பிக்கையில், வெளிநாட்டுப் பகைவனுக்கு எதிரான போரில் நாம் அதை ஆதரிப்பதை சாத்தியமாக்கும் வகையில் நியாயமாக நடந்து கொண்டால் நாம் அரசாங்கத்தை ஆதரிக்கத் தயாராய் இருக்கிறோம்... இது தேசிய வாழ்வு சம்பந்தமான ஒரு பிரச்சினையும், நம்மைப் பொறுத்தவரையில் நாம் பெற்றுள்ள அந்தஸ்தையும் எதிர்கால வாய்ப்புகளையும் பேணிக் காக்கும் ஒரு பிரச்சினையும் ஆகும்.''[64]

1916ல் ஏகாதிபத்திய யுத்தத்தில் ஒரு பக்கத்தை ஆதரித்த இரண்டாவது அகிலத்தில் சந்தர்ப்பவாதிகளை எதிர்க்கும் போது, லெனின் ஏங்கெல்ஸின் மேற்படி சித்தாந்தம் முற்றிலும் சரி என வலியுறுத்தியதோடு,[65] ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய யுத்தங்கள் ஐரோப்பாவில் இன்றும்

நடைபெறுவது சாத்தியம் என்றும் வாதாடினுர்:- ''ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசிய யுத்தங்கள் ஐரோப்பாவில் கூட அசாத்தியம் என்று கருதப்பட முடியாது... கிழக்கு ஐரோப்பாவில் பரந்த அளவிலான தேசிய இயக்கங்கள் நடைபெறுவதை அது எவ்வாறு தவிர்க்கவில்லேயோ, அவ்வாறு சிறிய (வல்லிணேக்கப்பட்ட அல்லது தேசிய ரீதியில் அடக்கி ஒடுக்கப்பட்ட) நாடுகள் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு எதிராக தேசிய யுத்தங்கள் நடத்துவதையும் இந்த சகாப்தம் தவிர்க்கவில்லே,'' ''ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு எதிரான தேசிய யுத்தங்கள் சாத்தியமானவை, நிகழக் கூடியவை மாத்திரமல்ல, அவை தவிர்க்க முடியாதவை, முற்போக்கானவை, புரட்சிகரமானவையும் ஆகும்.''[66] ''ஏகாதிபத்தியத்தின் இயல்பான லட்சணம் யாதெனில், குறிப்பாக அது விவசாயப் பிரதேசங்களே மட்டுமல்ல, மிக உயர்ந்த தொழில்மயமாக்கப்பட்ட பிராந்தியங்களேயும் கூட வல்லிணக்க முயல்வதாகும்.''[67] என்று லெனின் மேலும் சுட்டிக் காட்டினுர். ''ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக அல்லது தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக நடத்தும் யுத்தங்களுக்கு நான் ஒரு போதும் எதிரானவன் அல்ல. இந்த யுத்தங்களே அல்லது கிளர்ச்சிகளே 'தாய்நாட்டுப் பாதுகாப்பு' போன்ற வார்த்தைகளால் குறிப்பிட்டாலும் நான் அஞ்சமாட்டேன்''[68] என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு நாடு அபிவிருத்தி அடைந்ததாயினும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஓர் ஏகாதிபத்திய வல்லரசின் படையெடுப்புக்கும் வல்லிணேப்புக்கும் பலியாகும் போது, அவற்றுக்கு எதிராக அது தொடுக்கும் தேசிய யுத்தமானது ஒரு நீதியான யுத்தமாகும். அதற்கு சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் ஆதரவும் உதவியும் இருக்கவே செய்யும் என்பதை நமது புரட்சிகர ஆசான்களின் மேற்படி கூற்றுகள் காட்டுகின்றன.

1930ம் ஆண்டுகளில் பாசிஸ சக்திகள் வெறியாட்டம் ஆடி, ஆக்கிரமிப்பு யுத்தங்கள் உண்மையில் வெடிப்பதற்கு முன்னர் அவற்றின் அச்சுறுத்தல் மென்மேலும் பெருகிவரும் போது, பாஸிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக ஒரு விசாலமான ஐக்கிய முன்னணியை கட்டியமைக்குமாறு கம்யூனிஸ்ட்

அகிலம் சகல நாடுகளினதும் தொழிலாளர் வர்க்கத்துக்கு அறைகூவல் விடுத்தது. கடைசியில் ஆக்கிரமிப்பு யுத்தம் வெடித்தபோது எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் தேசிய சுதந்திரத்தை பாதுகாப்பதிலும் பாஸிஸத்தை எதிர்ப்பதிலும் ஒரு ஊக்கமான பாத்திரத்தை வகித்து, யுத்தத்தின் வெற்றிக்கும் வீரமிக்க சாதனைகளை வழங்கியது.

இன்று ஐரோப்பிய நாடுகள் சோவியத் சமூக-ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து பாரதூரமான படையெடுப்பு, வல்லிணைப்பு அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளன. ''சோவியத் யூனியன் அடங்காத நப்பாசைகளை உடையது. அது ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா முழுவதிலும் கைபோட விரும்புகின்றது''[69] என்று தலைவர் மாஓ மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுக்கு பலதடவை குறிப்பிட்டுள்ளார். மேற்கு ஐரோப்பிய நாடுகள் புதிய ஜார்களின் இரும்புக் குதியில் அகப்பட்டால், அவை சார்பு நாடுகளாக சீரழிந்துவிடும். அவற்றின் மக்களும் அந்நிய நாடுபிடிகாரரினதும் உள்நாட்டு சரணாகதிவாதிகளினதும் இரட்டை ஒடுக்குமுறைக்கு உள்ளாகி, இரண்டாந்தர பிரஜைகளாக சுருங்கி விடுவர். ஜார் ரஷியா அப்பொழுது தொழிலாளர் வர்க்க இயக்கம் வெகுவாக முன்னேறியிருந்த ஜெர்மனியைத் தோற்கடிக்குமானால், ''ஐரோப்பாவில் சோஷலிஸ இயக்கம் 20 ஆண்டுகள் பின்தள்ளப்பட்டுவிடும்''[70] என ஏங்கெல்ஸ் ஒருகால் குறிப்பிட்டிருந்தார். ஏங்கெல்ஸின் இந்த பாரதூரமான எச்சரிக்கை இன்று நமது மிக கூர்மையான கவனத்தை தூண்டவேண்டும். தேசிய யுத்தங்கள் சம்பந்தமாக பல தசாப்தங்களுக்கு முன் ஏங்கெல்ஸ், லெனின் இருவரும் கூறியவை இன்றும் அதே படிப்பினைகளை எடுத்துக் கொள்ளுமாறு நம்மை நிர்ப்பந்திக்கின்றன. பல ஐரோப்பிய நாடுகள் தமது தேசிய சுதந்திரத்தை பாதுகாக்கும் பிரச்சினையை மீண்டும் ஒரு தடவை எதிர்நோக்கியுள்ளன. ஐரேப்பிய தொழிலாளர் வர்க்கமும் ஏற்கனவே பெற்றுள்ள அந்தஸ்தையும் எதிர்கால வாய்ப்புகளையும் பேணிக்காக்கும் பிரச்சினையை மீண்டும் ஒரு தடவை எதிர்நோக்கியுள்ளன. இன்றைய ஐரோப்பாவில் மேலாதிக்க வல்லரசு ஒன்றின் பரந்தளவு ஆக்கிரமிப்பு, அடிமைப்பாடு, வதை

ஆகியவற்றுக்கு எதிரான தேசிய யுத்தங்கள் சாத்தியமானவை, நிகழக்கூடியவை மட்டுமல்ல, அவை தவிர்க்கமுடியாதவையும், முற்போக்கானவையும், புரட்சிகரமானவையும் கூட. எனவே உள்நாட்டு ஏகபோக மூலதனத்தின் ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிராகவும், ஜனநாயக உரிமைகளுக்கும், நல்வாழ்வுக்குமாகவும் பரந்துபட்ட வெகுஜனங்களை கூர்மையான போராட்டத்துக்கு அணிதிரட்டும் அதே வேளையில், இரண்டாவது உலக நாடுகளின் பாட்டாளி வர்க்கம் தேசிய சுதந்திரப் பதாகையை உயர்த்திப் பிடிக்க வேண்டும். இரு மேலாதிக்க வல்லரசுகளிடமிருந்து, விசேஷமாக சோவியத் சமூக - ஏகாதிபத்தியத்திடமிருந்து வரும் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல்களுக்கு எதிரான போராட்டத்தின் முன்வரிசையில் நிற்கவேண்டும். குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மேலாதிக்க வல்லரசுகளின் கட்டுப்பாட்டுக்கும் அடிமைப்படுத்தலுக்கும் மண்டியிட மறுக்கும் எல்லாருடனும் ஐக்கியப்பட்டு, போராட்டத்தில் ஊக்கமாகப் பங்குபற்ற வேண்டும்; ஊக்கமாக தலைமை தாங்க வேண்டும். இது இந்த நாடுகளின் புரட்சிச் சூழ்நிலையை துரிதப்படுத்துவதற்கும் உதவியாயிருக்கும்.

எதிரிக்கு எதிரான போரில் மத்திய சக்திகளை வென்றெடுக்கும் மகோன்னத முக்கியத்துவம் பற்றி மார்க்ஸிஸம்-லெனினிஸம் எப்பொழுதும் வலியுறுத்தி வருகின்றது. பல்வேறு அளவில் இரண்டாவது உலகுடன் ஐக்கியத்தை உருவாக்குவதற்கு மூன்றாவது உலகம் எடுக்கும் முயற்சிகள் இரு மேலாதிக்க வல்லரசுகளினதும், சிறப்பாக சோவியத் சமூக-ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு, விஸ்தரிப்பு, யுத்தக் கொள்கைகளுக்கு ஒரு நேரிய அடியைக் கொடுக்கும். இரண்டாவது உலகைச் சேர்ந்த மேலாதிக்க-எதிர்ப்பு சக்திகளை ''யுத்த வெறியர்கள்'', ''தேசியவாதிகள்'', ''சர்வதேசியத்துக்கு'' விரோதமானவர்கள் என்று வாய்க்கு வந்தபடி தாக்கும் போது, சோவியத் சமூக-ஏகாதிபத்தியம் வேண்டுமென்றே பிரச்சினைகளைப் போட்டுக் குழப்பி, மிக அபாயகரமான முறையில் உலக யுத்தத்தை தூண்டிவிடும் அதன் உண்மையான இயல்பை மறைக்கின்றது. இது இன்னும் போதியளவு தெளிவாக வில்லையா?

உண்மையில் மேலாதிக்கவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் ஐக்கியப்படக்கூடிய ஒரு சக்தியாக நாம் இரண்டாவது உலகத்தை குறிப்பிடும்போது, இரண்டாவது உலகுக்கும் மூன்றாவது உலகுக்கும் உள்ள முரண்பாடுகளையும், இரண்டாவது உலகில்நிகழும் வர்க்கப் போராட்டங்களையும் மறுக்கிறோம் என்று அர்த்தமல்ல. அன்றி ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிரான அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்கள் மக்களின் போராட்டத்தை கைகழுவி விடுகிறோம் என்றும் அர்த்தமாகி விடாது. உலகமானது வர்க்கப் போராட்டத்துக் கூடாகவே முன்னேற முடியும். இந்தப் போராட்டத்துக்கு ஊடாகத்தான் ஐக்கியமும் உருவாக முடியும். போராட்டத்தின் மூலம் பெறப்பட்டால் அந்த ஐக்கியம் வாழும். விட்டுக்கொடுப்பின் மூலம் பெறப்பட்டால் அது வீழும். இந்த ஐக்கியமானது தேசத்துரோகம், விட்டுக்கொடுப்பு, நவ காலனித்துவம் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தின் போக்கிலும், முற்போக்கு சக்திகளுக்கு எதிரான பிற்போக்கு சக்திகளின் தாக்குதல்களை முறியடிக்கும் போக்கிலும் உருவாக்கப்பட்டு, படிப்படியாக விரிவாக்கப்பட முடியும்.

இரண்டாவது உலக நாடுகள் மேலாதிக்கவாதிகளின் அதிகரித்துவரும் யுத்த அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள காரணத்தால், அவற்றைப் பொறுத்தவரையில், தம் மத்தியில் நிலவும் ஐக்கியத்தையும், மூன்றாவது உலகம், சாத்தியமான இதர நேச சக்திகள் ஆகியவற்றோடான ஐக்கியத்தையும் பலப்படுத்துவது அவசியம். இவ்வாறுதான் பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில் முன்னேற முடியும். தமது தேசிய சுதந்திரத்தையும் வாழ்வையும் பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய ஒரே ஒரு சரியான பாதை, அது மலர்களால் நிறைந்திராமல் முட்களால் நிறைந்திருந்தாலும் சரியான பாதை ஐக்கியப் போராட்டமே ஆகும்.

## அதி விசாலமான
## சர்வதேச ஐக்கிய முன்னணியை அமைத்து
## வல்லரசு மேலாதிக்க வாதத்தையும்
## யுத்தக் கொள்கைகளையும் உடைத்தெறியுங்கள்!

இரு வல்லரசுகளின் மேலாதிக்கத்துக்கு எதிரான உலக மக்களின் இன்றைய போராட்டமும், அவற்றின் யுத்தக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டமும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவையாகும். மேலாதிக்கவாதம் என்பது யுத்தத்தில் அவற்றின் நோக்கமாகவும், அந்த யுத்தத்துக்கு தயார் செய்யும் சாதனமாகவும் விளங்குகின்றது. மேலாதிக்கத்துக்கான சோவியத் - அமெரிக்கப் போட்டியால் ஏற்படும் யுத்த அபாயம் உலகம் பூராவும் உள்ள மக்களுக்கு ஓர் அதிகரித்துவரும் அச்சுறுத்தலாக உள்ளது. இப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நாம் மேற்கொள்ள வேண்டிய மனோபாவம் யாது?

சீன மக்களும் உலகின் ஏனைய பகுதி மக்களும் சமாதானத்தை உறுதியாக கோருகின்றனர். ஒரு புதிய உலக யுத்தத்தை உறுதியாக எதிர்க்கின்றனர். நமது சோஷலிஸ நிர்மாணத்தையும், நமது விவசாயம், தொழில் துறை, தேசிய பாதுகாப்பு, விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் நவீனமயமாக்கத்தையும் துரிதப்படுத்தும் ராட்சஸ கடமையை எதிர்நோக்கி இருப்பதால், சீனவிலுள்ள நமக்கு ஒரு நீண்ட சமாதான காலகட்டம் அவசியம் தேவைப்படுகின்றது. நம்மைப்போல பல உலக நாடுகளும் யுத்தத்தை எதிர்க்கின்றன. உலக ஆதிக்கத்துக்காக வீண் முயற்சி செய்யும் ஒரு சில யுத்தப் பைத்தியங்களைத் தவிர, பூதாகரமான அழிவை மனித குலத்துக்கு ஏற்படுத்தும் ஒரு புதிய உலக யுத்தத்தை ஒருவரும் விரும்பவில்லை. தலைவர் மாஓ ஒரு உலக யுத்தம் பற்றிய நமது மனோபாவம் யாது என்பதை அடிக்கடி தெரிவித்துள்ளார். ''முதலாவதாக, நாம் யுத்தத்தை எதிர்க்கின்றோம். இரண்டாவதாக, நாம் அதற்கு அஞ்சவில்லை.''[71] நாம் யுத்தத்துக்கு அஞ்சவில்லை என்று கூறுவது, நாம் அதை விரும்புகிறோம், அல்லது அதனால் விளையக்கூடிய

அழிவைக் காணத் தவறிவிட்டோம் என்பதனால் அல்ல. பதிலுக்கு அச்சமானது பிரச்சினையை எவ்விதத்திலும் தீர்க்க மாட்டாது என்பதனாலேயே ஆகும். மேலும், யுத்தம் மனிதனை அழிக்க மாட்டாது, மாறாக மனிதன் யுத்தத்தை அழிப்பது நிச்சயம் என்று உறுதியாக நம்புகின்றவர்கள் நாங்கள்.

அப்படியென்றால் நமது கடமைகள் யாவை?

முதலாவதாக, யுத்த அபாயம் பற்றி மக்களுக்கு எச்சரிக்க வேண்டும். இரண்டு மேலாதிக்க வல்லரசுகளும் யுத்தத்துக்காக தமது பலம் அனைத்தையும் ஒன்று குவிப்பதில் வெறித்தனமாக ஈடுபடுகின்றன. ஏன்? இதற்கான பதிலை லெனின் வெகு காலத்துக்கு முன்பே கொடுத்துள்ளார்:-
''ஏகாதிபத்திய அரசியலின் உள்ளடக்கம் உலக ஆதிக்கம். அந்த அரசியலின் நீடிப்பு ஏகாதிபத்திய யுத்தம் ஆகும்.''72
1974ல் ஒரு மூன்றாவது உலக நாட்டுத் தலைவருடன் நடத்திய சம்பாஷணையில் தலைவர் மாஓ சுட்டிக்காட்டியதாவது:-
''ஏகாதிபத்தியம் இவ் உலகில் இருக்கவே செய்கிறது. நமது கருத்தில், ரஷியாவை ஒரு சமூக-ஏகாதிபத்தியம் என அழைக்கலாம். இந்த அமைப்பு யுத்தத்தை தோற்றுவிக்கின்றது. நீங்களோ அல்லது நாங்களோ அல்லது மூன்றாவது உலகமோ ஓர் உலக யுத்தத்தை விரும்பவில்லை. செல்வந்த நாடுகளின் மக்கள் கூட ஓர் உலக யுத்தத்தை விரும்பவில்லை. இது மனித சித்தத்துக்கு புறம்பாக நடைபெறும் ஒரு விஷயமாகும்.''73
அழிவுவாதிகள் அல்லாத அதே வேளையில், வரலாறு குறிப்பிட்ட சில விதிகளின் பிரகாரம் முன்னேறுகின்றது என நாம் நம்புகிறோம். நவீன யுத்தமானது ஏகாதிபத்தியத்தின் ஒரு படைப்பாக இருப்பதால், ஒரு புரட்சியை நடத்தி ஏகாதிபத்திய அமைப்பை தூக்கி எறிவதன் மூலம் தான் நாம் உலக யுத்தத்தை ஒழித்துக்கட்ட முடியும். இரண்டு மேலாதிக்க வல்லரசுகளின் நாடுகளுக்குள் சமுதாயப் புரட்சி ஒன்று நடந்து, அவை சோஷலிஸ நாடுகளாய் மாறினால், உலக யுத்தமானது நிச்சயம் ஒழிக்கப்பட முடியும். இத்தகைய புரட்சி ஒன்று இன்றோ நாளையோ ஏற்படும். அது இன்னும் நடைபெறாத காரணத்தால், ஓர் உலக யுத்தத்துக்கு எதி

ரான நமது விழிப்புணர்வை சிறிதளவேனும் தளர்த்திவிட நியாயம் இல்லை.

இரு மேலாதிக்க வல்லரசுகளுக்கு மிடையில் நிலவும் போட்டி தீவிரமாவதாலும், சிறப்பாக சோவியத் சமூக-ஏகாதிபத்தியம் தாக்குதலில் நிற்பதாலும், அவற்றுக்கிடை மோதல் சமதான வழிகளில் தீர்க்கப்படுவது அசாத்தியம். அவற்றின் பயங்கரப் போட்டியின் போக்கில் இந்த இரு வல்லரசுகளும் ஏதேனும் ஒரு விஷயத்தில் சில சமயம் ஓர் உடன்பாட்டுக்கு வரலாம். தலைவர் மாஓ கூறியதாவது:- "அவை ஏதேனும் உடன்படிக்கைக்கு வரலாம். ஆனுல் அது ஏதும் உறுதியானது என நான் எண்ணவில்லை. அது தற்காலிக மானதும், ஏமாற்றம் தரக்கூடியதும் ஆகும். சாராம்சத்தில் போட் டியே அடிப்படையானது."[74] இத்தகைய போட்டி தவிர்க்க முடியாதபடி யுத்தத்துக்கு வழிகோலுகிறது. இன்று யுத்தத் துக்கான அம்சங்கள் பெருகி வருவது கண்கூடு. இரண்டு மேலாதிக்க வல்லரசுகளும் தமது யுத்த தயாரிப்புகளை அதி கரிக்கும் அதே வேளையில் "அமைதி", "ஆயுத ஒழிப்பு" என்பன போன்ற உளுத்துப் போன சுலோகங்களைப் பிடித் துத் தொங்குகின்றன. இதை நிறுத்திவிட்டு, தமது பிரமாண் டமான ஆயுதக் களஞ்சியங்களை முற்றுமுழுதாக அவை ஏன் அழித்துவிடக் கூடாது? மாருக, புதிய அணு ஆயுதங்கள் ஏவாயுதங்களின் ஆராய்ச்சிக்கும், அவற்றின் தயாரிப்புக்கும், மேலும் ஆற்றலும் நச்சுத்தன்மையும் வாய்ந்த ரசாயன, உயிரியல் ஆயுதங்கள் முதலியவற்றின் அபிவிருத்திக்கும் பெரும் தொகையான பணத்தைச் செலவிடுகின்றன. அவற் றின் ஆயுதப் படைகள் விரைந்து செயலில் ஈடுபடக்கூடிய தாக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. பல்வேறு வகை யான ராணுவப் பயிற்சிகளிலும் அவை அடிக்கடி ஈடுபடுகின் றன. ஒவ்வொன்றும் லட்சோப லட்சம் துருப்புகளை மத்திய ஐரோப்பாவில் குவித்து வைத்திருக்கின்றன. சமுத்திரங்களுக் கூடாகச் செல்லும் போது அவற்றின் கடற்படைகள் ஒன்றை ஒன்று வேவு பார்க்கின்றன. புதிய கடமைகளுக்காக ஒற்றர் கள் எங்கும் அனுப்பப்படுகின்றனர். நீர்மூழ்கிகள் புதிய கட மைகளை மேற்கொள்கின்றன. புதிய ராணுவ செய்மதிகள்

அண்டவெளியில் வலம் வருகின்றன. அவை ராணுவ இரக சியங்களைச் சேகரித்து, ஒருவர் மற்றவருடைய போராற்றலை ஒழித்துக்கட்ட தயார் செய்கின்றன. இவை எல்லாம் இரு வல்லரசுகளும் ஒரு பூரண யுத்தத்துக்கு தீவிரமாக தயார் செய்வதை தெளிவாகக் காட்டுகின்றன. இன்றைய வர லாற்று நிலைமைகளில் ஒரு நீடித்த சமாதானத்துக்கான சாத் தியப்பாடு இல்லை. ஒரு புதிய உலக யுத்தம் நடைபெறுவது தவிர்க்க முடியாதது.

இரண்டாவதாக, மேலாதிக்கவாதத்துக்கும் எதிரான போராட்டத்தை தீவிரமாக்க நாம் சகல முயற்சிகளையும் செய்ய வேண்டும். அதாவது, யுத்தம் வெடிப்பதைப் பின் தள்ளிப் போட நாம் போரிட வேண்டும். அந்தப் போக்கில் சகல நாடுகளின் மக்களும் தமது தற்காப்பு ஆற்றலைப் பலப் படுத்த வேண்டும்.

மேலாதிக்க வல்லரசுகள் இரண்டும் உலகில் ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்துடன் புதிய யுத்தம் ஒன்றுக்கு லீக்க மாக தயார் செய்கின்றன. அவை இந்தக் கொள்கையை ஒருபோதும் மாற்றமாட்டா. இது பற்றி யாரும் பிரமை கொள்ளக் கூடாது. இருந்தும் தமது நோக்கத்தை நிறைவேற் றுவது அவற்றைப் பொறுத்தவரையில் அவ்வளவு லேசான தல்ல. அவை பாரதூரமான கஷ்டங்களையும் தடைகளையும் சந்திப்பது நிச்சயம். கடந்த கால யுத்தங்களுடன் ஒப்பிட் டுப் பார்த்தால், பாரிய அளவில் நடத்தும் ஒரு நவீன யுத்த மானது முற்றுமுழுதாக ஒரு ராணுவ பிரச்சினை அல்ல. அதன் தயாரிப்புகள் உள்நாட்டு, நிதி, பொருளாதார விவ காரங்கள், வெளி உறவுகள் போன்ற அம்சங்களுடன் நெருங் கிய சம்பந்தமுடையது. தமது செலவுமிக்க யுத்த யந்திரத்தை பைத்தியக்காரத்தனமாக பலப்படுத்துவதால், சோவியத் யூனி யனும் அமெரிக்காவும் உள்நாட்டில் மக்களுக்கெதிரான தமது ஒடுக்குமுறையையும் சுரண்டலையும் தீவிரமாக்குவது நிச்ச யம். இவ்வாறு, தமது பொருளாதாரங்களில் முரண்பாடுக ளுக்கும், பல்வேறு வர்க்கங்களின் அக முரண்பாடுகளுக்கும், பல்வேறு தேசிய இனங்களுக் கிடையிலான முரண்பாடுகளுக் கும் பழுவேற்றுவது நிச்சயம். உலகம் முழுவதிலும் ஆக்கிர

மிப்பு, விஸ்தரிப்புகளை நடத்துவதாலும், தமது கோள யுத்த தந்திர படை நிறுத்தங்களை இரட்டிப்பாக்குவதாலும் இதர நாடுகளின் இறைமையையும் நலன்களையும் ஊறுபடுத்தி, இவ்வாறு இந்த நாடுகள், மக்களுடன் தமது முரண்பாடுகளுக்கு பழுவேற்றுவதும் தவிர்க்க முடியாதது. எனவே யுத்தத்துக்கு தயார் செய்வதால் சோவியத் யூனியனும் அமெரிக்காவும் தமது உள்நாட்டு வெளிநாட்டு நெருக்கடிகள் கூர்மையாவதைக் காண்பது இயற்கையே ஆகும். இவை எல்லாம் ஒரு யுத்தத்தைத் தொடுப்பதற்கான அவற்றின் நேர சூசியை தலைகீழாக்குவது நிச்சயம்.

தலைவர் மாஓ அவர்கள் கூறியதாவது:- "அமெரிக்கா ஒரு கடதாசிப் புலியாகும். நீங்கள் இதை நம்பவில்லை. ஒரு குத்தில் அது ஓட்டையாகி விடும். திரிபுவாத சோவியத் யூனியனும் ஒரு கடதாசிப் புலியே."[75] உலக ஆதிக்கத்துக்கான அமெரிக்க ஏகாதிபத்திய கொள்கை நீண்ட காலம் முதல் சகல நாட்டு மக்களினதும் துணிகரமான எதிர்ப்பைச் சந்தித்துள்ளது. இன்று அமெரிக்கா ஒவ்வொரு கண்டத்திலுமுள்ள அதன் முதலீட்டு நலன்களை பாதுகாக்க இன்னும் இயன்றதெல்லாம் செய்கின்றது. அது பேணிக் காக்க வேண்டியதோ அதிகம், அதன் சமர்க்கள முன்னணியும் மிகப் பரந்தது. தலைவர் மாஓவின் வார்த்தைகளில் கூறினுல், அது "பத்து விரல்களாலும் பத்து ஈக்களைப் பிடிக்க முயல்கிறது,"[76] இதன் விளைவாக யுத்த தந்திர ரீதியில் அது ஒரு செயலற்ற நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. இன்று சோவியத் யூனியன் ஒரு தாக்கும் நிலையில் இருக்கின்றது. ஆனுல் "அதன் தாக்குதலிலேயே தோல்வியும் அடங்கியுள்ளது"[77] சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்பு நகங்கள் கூடிய காலம் ஓர் இடத்தில் பதிந்திருக்கும்போது அது அம்பலப் படுத்தப்படுகின்றது. அதற்கெதிரான போராட்டங்களும் விரிவடைகின்றன. ஐரோப்பாவின் விலாப் புறங்களை கட்டுப்படுத்துவதற்கான கெடுபிடியில், சமீப ஆண்டுகளில் அது தனது செல்வாதாரங்களில் பெரும்பகுதியை மத்திய தரைக்கடல், மத்திய கிழக்கு, செங்கடல் பிராந்தியம், ஆபிரிக்காவின் கிழக்கு, மேற்கு கடற்பிரதேசம், இந்து சமுத்திரத்தின் கரையோரப்

பகுதிகள் ஆகியவற்றுக்காக ஒதுக்கியுள்ளது. இருந்தும் இறுதியில் அபகீர்த்திவாய்ந்த பல தோல்விகளைத்தான் அது அடுத்தடுத்துத் தழுவியுள்ளது, அதன் அம்மணமான அதிகார அரசியலும், பீரங்கிப்படகு ராஜதந்திரமும் உலக மக்களிடமிருந்து அதிகரித்துவரும் பரந்துபட்ட எதிர்ப்பை சந்தித்துள்ளன. ஆயுத விஸ்தரிப்பிலும் யுத்த முஸ்தீபுகளிலும் அது முற்று முழுதாக ஈடுபட்டிருப்பதால், சோவியத் யூனியன் "அதன் அடங்காத நப்பாசைகளுக்கு அதன் பலம் போதாதிருப்பதையும்," "ஐரோப்பா, மத்திய கிழக்கு, தெற்கு ஆசியா, சீனு, பசுபிக் பிராந்தியம் ஆகியவற்றைச் சமாளிக்க முடியாதிருப்பதையும்"[78] காண்கின்றது.

இரண்டு மேலாதிக்க வல்லரசுகளும் அடைந்த கஷ்டங்களும் பின்னடைவுகளும், இன்றுள்ள மிக சிறப்பான உலக நிலைமையில் மேலாதிக்கவாதத்துக்கு எதிரான போராட்டத்தை தீவிரமாக்குவதன் மூலமும், சோவியத் யூனியன் அமெரிக்கா இரண்டின் யுத்தத் திட்டங்களை தடுப்பதன் மூலமும் யுத்தம் வெடிப்பதை பின்தள்ளிப் போடுவது உலக மக்களின் பொது அபிலாட்சை மட்டுமல்ல, அது நடக்கக்கூடியதும் சாத்தியமானதும் கூட என்பதைக் காட்டுகின்றன. உலக யுத்தம் தவிர்க்கப்பட முடியாத போதிலும், அது பின்தள்ளிப் போடப்பட முடியும். யுத்தத்தைத் தூண்டுபவர்களின் திடீர்த் தாக்குதலுக்கு எதிராக பாதுகாத்துக் கொள்ள, தமது தற்காப்பு வேலை பெரிய யுத்தம் ஒன்று நாளை வெடிப்பதிலும் பார்க்க இன்று வெடிக்கக் கூடும் என்ற சாத்தியப்பாட்டை அடிப்படையாக கொள்ளவேண்டும். இருந்தும், இதனுல் யுத்தமானது நாளைக்கே வெடிக்கும் என்று நாம் கருதவில்லை. யுத்தத்தை ஒத்திப்போடும் திறவு கோல், சில நபர்கள் தொண்டை கிழியக் கத்துவது போல், பேச்சுவார்த்தைகள் நடத்துவதிலும் ஒப்பந்தங்கள் செய்வதிலும் இல்லை. மாருக மேலாதிக்க வாதத்துக்கெதிராக சகல நாடுகளின் மக்களினதும் ஐக்கியப் போராட்டத்திலேயே இருக்கின்றது.

சகல நாட்டு மக்களும் போராட்டத்தில் உருவாக்கிய ஐக்கியம் தான் யுத்தத்தை தூண்டுபவர்களைத் தோற்கடிக்

கும் பிரதான சக்தி என்பதை வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது. எல்லா நாடுகளின் மக்களும் கடினமாக உழைத்து, ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கெதிராக பொருளாயத ரீதியிலும் ஸ்தாபன ரீதியிலும் தமது தயாரிப்புகளை இரட்டிப்பாக்கி, இருமேலாதிக்க வல்லரசுகளினதும் ஆக்கிரமிப்பு, விஸ்தரிப்பு நடவடிக்கைகளை கூர்மையாக அவதானித்து, அவற்றை உறுதியாகத் தோற்கடிக்க வேண்டும். இந்த இரண்டு வல்லரசுகளும் தமது நாட்டின் அல்லது வேறு நாடுகளின் இறையுரிமைகளை அத்துமீறுமல், தமது நாட்டின் அல்லது வேறு நாடுகளின் ஆதிபத்திய உரிமையையும் பாரம்பரிய கடல் எல்லைகளையும் ஊடுருவாமல், அல்லது யுத்ததந்திர பிரதேசங்களையும் கேந்திர போக்குவரத்து மார்க்கங்களையும் அத்துமீறுமல், தமது நாட்டின் அல்லது வேறு நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிட பலாத்காரத்தையோ, அல்லது பலாத்கார அச்சுறுத்தலையோ அல்லது இதர சூழ்ச்சிகளையோ உபயோகிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இன்னும் இரு வல்லரசுகளும் கவிழ்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமலும், தமது ராணுவ, அரசியல், பொருளாதார சூழ்ச்சிகளை முன் தள்ளிவிட ''உதவி''யை ஒரு கருவியாகப் பாவிக்காமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். உலகின் எந்தப் பாகத்திலும் செல்வாக்குப் பிராந்தியங்களை உருவாக்க விரிவுபடுத்த, வெட்டி எடுக்க, கவர்ந்து கொள்ள முடியாமலும் அவர்கள் கண்காணிக்க வேண்டும். இவை அனைத்தும் செய்யப்படும் வரை ஓர் உலக யுத்தத்தை தொடுப்பதற்கான இரு மேலாதிக்க வாதிகளினதும் காலக்கெடுவை தடுத்து நிறுத்துவது சாத்தியம். பின்னர் யுத்தம் வெடித்தாலும் உலக மக்கள் மேலும் தயாராகவும், சாதகமான நிலையிலும் இருப்பர். இந்த லட்சியத்துக்காக இரு மேலாதிக்க வாதிகளாலும் அச்சுறுத்தப்படுகின்ற மூன்றுவது, இரண்டாது உலக நாடுகளும் மக்களும் ஒரு சளையாத உணர்வை போஷித்து வளர்த்து, மேலாதிக்க வல்லரசுகள் எப்படித்தான் சீறிச் சினந்தாலும் அவை தோற்கடிக்கப்பட முடியும் என்ற நம்பிக்கையைப் பலப்படுத்த வேண்டும். அவை அச்சுறுத்தலுக்கு விட்டுக் கொடுக்கவோ அல்லது பலி

யாகிவிடவோ கூடாது. அவை பிரதானமாக தமது சொந்தப் பலத்தைச் சார்ந்து தமது சுதந்திரம், நலன்கள், பந்தோபஸ்து எல்லாவற்றையும் பாதுகாப்பதில் அழுத்தமாக நின்று, சமத்துவ அடிப்படையில் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் ஆதரிக்கும் முயற்சிகளை இரட்டிப்பாக்கி, மேலாதிக்க வாதத்துக்கு எதிரான போராட்டத்தை இறுதிவரை நடத்துவதற்கு ஐக்கியப்படக் கூடிய சக்திகள் அனைத்துடனும் ஐக்கியப்பட வேண்டும்.

மூன்றாவதாக, சாந்தப்படுத்தும் கொள்கையை எதிர்க்க நமது முயற்சிகளைதீவிரமாக்க வேண்டும். ஏனெனில் அதனால் யுத்தத்தை மாத்திரம் கிட்டியதாக்க முடியும். சோவியத் யூனியனுக்கு விட்டுக்கொடுத்து சாந்தப்படுத்தும் கொள்கையை யதார்த்தத்தில் கடைப்பிடிப்பவர்கள் மேற்கில் இருக்கின்றனர். சோவியத் விஸ்தரிப்பையும் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கும் போது, சமரசத்துக்கும் சலுகைக்குமான ஒரு ''லட்சிய'' வாய்பாட்டை வகுக்கும் முயற்சியில், சில நபர்கள் ஆக்கிரமிப்பாளனின் ஆசையைத் தணிக்கும் அபார நம்பிக்கையில் அல்லது குறைந்தபட்சம் தாம் மூச்சுவிடுவதற்கு அவகாசத்தைப் பெறும் நம்பிக்கையில், ''சொனென் பெல்ட் தத்துவம்'' போன்ற பிரேரணைகளை சிருஷ்டிக்கிறார்கள். வேறு சிலர் பெரும் கடன்கள், விஸ்தாரமான வர்த்தகம், செல்வாதாரங்களை கூட்டாகப் பயன் படுத்துவது, தொழில் நுட்பப் பரிவர்த்தனை ஆகியவற்றின் மூலம் சமாதான ஒத்துழைப்புக்கும் யுத்தத் தடுப்புக்கும் உரிய ''பொருளாயத அடிப்படை'' ஒன்றை அமைக்க எண்ணுகின்றனர். இன்னும் சிலர் இதர நாடுகளின் பந்தோபஸ்தைப் பலியிடுவதன் மூலம் சோவியத் அபாயத்திலிருந்து தம்மை விடுவிப்பதற்காக சோவியத் யூனியனை கிழக்கே திசை திருப்பிவிட முடியும் என நம்புகின்றனர். இவை அனைத்தும் யுத்த வரலாற்றில் முன்னே முயற்சித்து முற்றிலும் திவாலாகிப் போன மருந்துகளை மீண்டும் கொடுப்பதாக இல்லையா? செம்பர்லேன், டலாடியர் கம்பெனியால் வகுக்கப்பட்ட செக்கோஸ்லவாக்கியாவை தத்தம் செய்த மியூனிச் உடன்படிக்கை பேராசை பிடித்த ஹிட்லரின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தியதா? அல்லது தாமதப் படுத்தியதா? ஹிட்லர் கிழக்கே சென்று போலந்தை வென்

றது உண்மைதான். ஆனால் அதைத் தொடர்ந்து மேற்கே திரும்பி பிரான்சை இடங்கொள்ள வில்லையா? அமெரிக்கா வும், பிரிட்டனும், பிரான்சும் ஜெர்மனிக்கும் யப்பானுக்கும் உதவிகள், கடன்கள் வழங்குவதன் மூலமும், யுத்த தளபாடங்களை விற்பனை செய்வதன் மூல மும் ஊக்கம் அளித்தன, ஆனால் அவை தம்மை காப்பாற் றுவதில் வெற்றி பெற்றனவா? அமெரிக்காவுக்கும் சோவி யத் யூனியனுக்கும் இடையிலான யுத்த தந்திர ஆயுதக் கட் டுப்பாட்டு ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தைகள், மத்திய ஐரோப்பாவில் படைகளைக் குறைப்பதற்கான பேச்சுவார்த் தைகள், ஐரோப்பிய பந்தோபஸ்தும் ஒத்துழைப்பும் சம் பந்தமான மாநாடு போன்ற இன்றைய நடவடிக்கைகள் இரண்டாவது உலக யுத்தத்துக்கு முந்தியவற்றிலும் பார்க்க உண்மையில் தீவிரமானவை ஆகும். இந்த மாநாடுகள் கூடு வதற்கும் பேரம் பேச்சுகள் நடைபெறுவதற்கும் முழுமூச் சுடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், ஐரோப் பாவில் நிலவும் யுத்த நெருக்கடி ஈவு அடைவதற்குப் பதில் மோசமடையவில்லையா? ஐரோப்பிய முனையின் இரு மருங் கிலும் குவிக்கப்பட்டுள்ள ஆயுத வகைகள் அனைத்தினதும். எண்ணிக்கை குறைவதற்குப் பதில் கூடவில்லையா; அமை திக்கான பேச்சுவார்த்தை எவ்வளவுக்கு உக்கிரமாக நடைபெ றுகின்றதோ, சாந்திப்படுத்தும் முயற்சிகள் எவ்வளவுக்கு தீவிரமாகின்றதோ, அவ்வளவுக்கு யுத்த அபாயமும் அதிக ரிக்கின்றது. இது ஓர் அபாய எச்சரிக்கை அல்ல. வரலாற் றால் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மை. இந்த சாந்திப்படுத்துபவர்களும் விழித்தெழுவதற்கு இதோ சமயமாகிவிட்டது.

இறுதியில் யுத்தமானது வெடித்தால், அதன் விளைவு யுத்தத்தை தூண்டியவர்களின் விருப்பத்துக்கு நேர் விரோத மாகச் செல்வது நிச்சயம். இன்று மேலாதிக்க வல்லரசு ஒவ் வொன்றும் மற்றதன் மீது திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தி, அதன் யுத்த ஆற்றல்களை ஒரேயடியில் அழித்து விட எண்ணுகின்றன. இருந்தும் இந்தக் கனவு நனவாவது மிகக் கஷ்டமாகும். காரணம் இந்தகைய தாக்குதலை தவிர்ப்

பதற்கு அவை இரண்டும் தீவிரமான தயாரிப்புகளை செய்கின்றன. யுத்தம் இழுபட்டுப்போக, இரு மேலாதிக்க வல்லரசுகளினதும் கற்பனைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட பல மாற்றங்கள் உலகின் பல பாகங்களிலும் நடைபெறுவது திண்ணம். அதற்கிடையில் உலக மக்கள் ஆக்கிரமிப்புக்கு எதிரான யுத்தங்களை நடத்துவதற்கு கிடைக்கும் வாய்ப்புகள் அனைத்தையும் கட்டாயம் பயன்படுத்துவர். ஆக்கிரமிப்புக்கு எதிராக கொந்தளித்து எழும் இந்த யுத்தங்களை யாரும் நசுக்கிவிட முடியாது. இறுதியில் நீடித்த ஒன்றிணைந்த முயற்சிகள் மூலம் யுத்தத்தைத் தூண்டி விடுபவர்களை நிச்சயம் மக்கள் துடைத்தொழிப்பர். தலைவர் மாஓ சுட்டிக் காட்டியது போல ''ஏகாதிபத்தியவாதிகள் மூன்றுவது உலக யுத்தம் ஒன்றை கட்டவிழ்த்து விடுவதில் அழுங்குப்பிடியாய் நின்றால், மேலும் பல பத்துக் கோடி மக்கள் சோஷலிஸத்துக்கு மாறுவர். ஏகாதிபத்தியவாதிகளுக்கும் உலகில் அதிக இடம் இருக்காது என்பது நிச்சயம், ஏகாதிபத்திய அமைப்பு முழுவதும் பூரணமாக தகர்ந்து போவது கூடச் சாத்தியம்''[79] ஒரு வார்த்தையில் சொன்னால்' யாரேனும் உலக யுத்தம் ஒன்றைதூண்டி விடத் துணிந்தால், தமது சொந்த நாட்டு மககள் உட்பட உலக மக்கள் அனைவராலும் உறுதியாக எதிர்த்து முறியடிக்கப்படுவதை தாமே தமது கண்களால் காண்பர். பூரண அழிவு ஒன்றே அவருக்காக காத்திருக்கின்றது.

சோவியத் திரிபுவாதிகளும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் ''உலகம் பூராவுமுள்ள புரட்சிகர மக்களுக்கு அதிகப்படியான, கொடிய, தீய விஷயங்களைச் செய்துள்ளனர். அதற்காக அவர்கள் கண்டிக்கப் படுவது நிச்சயம், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் சோவியத் திரிபுவாதத்துக்கும் எதிரான போராட்டத்தின் புதிய வரலாற்றுக் கால கட்டம் ஒன்று ஆரம்பமாகிவிட்டது''[80] என்று தலைவர் மாஓ 1968-ல் குறிப்பிட்டிருந்தார்' இன்று இரு வல்லரசுகளின் மேலாதிக்க வாதத்தை எதிர்க்கும் உலக சக்திகள் பலத்தில் வளர்ந்து, மிக விசாலமான சர்வதேச ஐக்கிய முன்னணியை கட்டியமைக்கின்றன. இந்த ஐக்கிய முன்னணியின் முன் வரிசையில் சோஷலிஸ

நாடுகளும் சர்வதேச பாட்டாளி வர்க்கமும் தோளோடு தோளிணைந்து நிற்கின்றன, அவை இரு மேலாதிக்கவாதிகளினதும் ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கைகளை உறுதியாக அம்பலப்படுத்தி, எதிர்த்து, வல்லரசு ஆக்கிரமிப்புக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளான உலக நாடுகள், மக்களின் கூட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிக்கின்றன. மூன்றாவது உலக நாடுகளும் மக்களும் தமது சுதந்திரம், இறைமை, பந்தோபஸ்து ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக வல்லரசுகளை எதிர்த்து பழிக்குப் பழி என்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். முதலாவது இரண்டாது உலக மக்களின் அரசியல் உணர்வு வளர்ந்து கொண்டிருக்கிறது. இரு மேலாதிக்க வாதிகளுக்கும் எதிராக பல வடிவங்களிலான போராட்டம் ஒன்றை மலரச் செய்கின்றனர். இரண்டாவது உலக நாடுகளும் சோவியத், அமெரிக்க கட்டுப்பாட்டுக்கு எதிராக, சிறப்பாக சோவியத் யுத்த அச்சுறுத்தல்களுக்கு எதிராக மலரச் செய்து, தம் மத்தியிலும் மூன்றாவது உலகத்துடனும் ஐக்கியப்படும் பலமான சுபாவத்தை காட்டுகின்றனர். இன்றைய சர்வதேச நிலைமை வளர்ச்சியின் பிரதான ஓட்டம் இரண்டு மேலாதிக்க வல்லரசுகளுக்கும் எதிரான உலக சக்திகள் அனைத்தினதும் போராட்டத்தை தீவிரப்படுத்துவதற்கான ஐக்கியமே என்பதை இவை எல்லாம் காட்டுகின்றன. காலம் போகப் போக, இந்தப் பிரதான ஓட்டம் தலைவர் மாஓவின் மூன்று உலகம் பற்றிய தத்துவத்தின் சரியான தன்மையையும், மேலாதிக்கவாதத்துக்கு எதிரான இயன்றளவு விசாலமான சர்வதேச ஐக்கிய முன்னணியை கட்டி வளர்ப்பதில் சர்வதேச பாட்டாளி வர்க்கத்துக்கும் உலக மக்களுக்கும் வழி காட்டும் கோட்பாடாக விளங்கும் அதன் ஆற்றலையும் மென்மேலும் நிரூபிக்கின்றது.

உலக ரீதியான புரட்சிப் போராட்டங்களில் பிரதான எதிரியை அடிப்பதற்கு சாத்தியமானளவு விசாலமான ஐக்கிய முன்னணியை அமைப்பது சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் நிரந்தரமான புரட்சிகர கொள்கையாக இருந்து வருகின்றது. லெனின் நமக்குப் போதித்ததாவது:- ''பகீரதப் பிரயத்தனம் செய்து, எதிரிகள் மத்தியிலுள்ள ஒவ்வொரு மிகச் சிறிய பிள

வையும் கூட, பல்வேறு நாடுகளின் முதலாளிகள் மத்தியிலும், பல்வேறு நாடுகளுக்குள் பல்வேறு வகையான அல்லது பல் வேறு ரகத்தைச் சேர்ந்த முதலாளிகள் மத்தியிலும் காணும் நலன்கள் பற்றிய ஒவ்வொரு மோதலையும் மிகப் பூரணமாக வும், கவனமாகவும், அக்கறையுடனும், தந்திரமாகவும் பயன் படுத்துவதன் மூலமும், வெகுஜன நேச அணியை வென்றெ டுக்கும் ஒவ்வொரு சிறிய வாய்ப்பையும் கூட, அந்த நேச அணி தற்காலிகமான, ஈடாடுகின்ற, நிதானமற்ற, நம்பகமில்லாத, நிபந்தனையுடைய ஒன்ருயிருந்தாலும் கூட, அதை சாதகமாக் கிக் கொள்வதன் மூலமும் தான் மிகப் பலம் வாய்ந்த எந்த எதிரியையும் தோற்கடிக்க முடியும். இதைப் புரிந்து கொள் ளத் தவறியவர்கள் பெதுவாக மார்க்ஸிஸத்தின் அல்லது விஞ் ஞான ரீதியான நவின சோஷலிஸத்தின் ஒரு துளியைக்கூட புரிந்து கொள்ள மாட்டார்கள்,''[81] இந்த கொள்கையை சரி யான முறையில் பிரயோகிப்பவர்கள் பிரதான எதிரி மீது தாக்குதலைக் குவிக்க லட்சோப லட்சம் வெகுஜனங்களின் ஒரு பிரமாண்டமான புரட்சிப் படையைக் கூட்டி, புரட்சியில் வாகை சூட முடியும் என்பதை பாட்டாளி வர்க் கத்தினதும் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களினதும் புரட்சி அனுபவம் மீண்டும் மீண்டும் காட்டியுள்ளது. இந்தக் கொள்கைக்கு எதிராகச் சென்ருல் நாம் வென்றெடுக்கக் கூடிய சக்திகளை எதிரியின் பக்கத்துக்கு விரட்டி, அவனு டைய அணிகளை பெருக்கி. நம்மைத் தனிமைப்படுத்தி, இதன் விளைவாகப் புரட்சியைத் தோல்வியடையச் செய்து விடு வோம்,

இரண்டு மேலாதிக்க வல்லரசுகளுக்கும் எதிராக சர்வ தேச ஐக்கிய முன்னணி ஒன்றை அமைப்பதை ''ஏகாதிபத் திய வாதிகளுடனும் இதர எல்லா பிற்போக்கு வாதிகளு டனும் ராணுவ-அரசியல் கூட்டணிகளையும் நேச அணிகளை யும் அமைப்பதாக''[82] கூறி, சோவியத் திரிபுவாத துரோகக் கும்பல் நச்சுத்தனமாக வசைபாடுகின்றது. இத்தகைய வசை மாரி இந்த கொள்கை சரி என்பதை மாத்திரம் மறைமுக மாக நிரூபிக்கின்றது. உலக மக்கள் ஐக்கிய முன்னணி என்ற இந்த புரட்சிகர மந்திராயுதத்தை தமக்கு எதிராக உபயோ

கித்து விடுவர் என்று இந்த கும்பல் மரணபயம் அடைகிறது. எனவே புரட்சிகர மக்களை கதவடைப்புவாத கொள்கைக் குள் கவர்த்திழுப்பதற்காக போலிப் புரட்சி வார்த்தை ஜாலங்களில் வீணுக ஈடுபடுகின்றது. நேச அணிகளை நிரா கரிக்கும், இந்த நடைமுறை சீன கம்யூனிஸ்ட் கட்சியையும் சீன மக்களையும் பொறுத்தவரையில் புதுமையான ஒன்றல்ல. யப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற்கு சற்று முன்பாக தலைவர் மாஓ இந்த கொள்கையை காரசாரமாக கண்டித்தார். அவர் சுட்டிக் காட்டியதாவது;- ''கதவடைப்புவாத தந்திரோபாயம் என்பது தனிமைவாதத் தந்திரோபாயமாகும், கதவ டைப்புவாதமானது ''மீன்களை ஆழ் நீருக்குள்ளும், பறவைகளை பற்றைகளுக்குள்ளும் விரட்டிவிடும். அது லட்சோபலட்சம் மக் களைக் கொண்ட இந்த பிரமாண்டமான படையை எதிரியின் பக் கத்துக்கு ஓட்டிவிடும். இதை எதிரி நிச்சயம் பாராட்டவே செய் வான்.''[83] கதவடைப்புவாதம் பற்றிய தலைவர் மாஓவின் இக் கண்டனத்தை சீன மக்கள் அனைவரும் மனப்பூர்வமாக ஆத ரித்தனர். ஆனுல் ட்ரொஸ்கியவாதிகள் முன்னே வந்து அதை தாக்கினுர்கள். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் யப்பா னிய-எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியை ''அதிகாரவா திகள், அரசியல் வாதிகள், யுத்தபிரபுக்கள் மட்டுமல்ல, மக் களின் கொலைகாரருடனும் அமைக்கும் ஒரு 'ஐக்கிய முன் னணி' '', ''வர்க்க நிலைப்பாட்டை கைகழுவி விடுவது என் றெல்லாம் வசைபுராணம் பாடினர் நமது மாபெரும் சிந்த னையாளன் லு ஷுன்'' உன்னுடைய 'தத்துவம்' மாஓ சே துங் போன்றவர்களின் தத்துவத்தை விட உன்னதமானது. மேலும் என்னவெனில் உனது கொள்கை விண்ணிலே உயரத் தில் நிற்கிறது, அவர்களுடையது மண்ணிலே காலூன்றி நிற் கிறது. ஆனுல் இத்தகைய உன்னதக் கோட்பாடு எவ்வளவு வியக்கத்தக்கதாயிருந்த போதிலும், துர் அதிஷ்ட வசமாக யப் பானிய ஆக்கிரமிப்பாளரால் வரவேற்கப்படுகின்றது. ஆக அது வானத்திலிருந்து தடம்புரண்டு, தரணியில் மிக அழுக் கான இடத்தில் விழுந்து விடும் என அஞ்சுகிறேன். உன் னுடைய உன்னதத் தத்துவம் சீன மக்களால் வரவேற்கப் பட மாட்டாது, உன்னுடைய ஒழுக்கமுறை சீன மக்களின்

இன்றைய தார்மீக தரத்துக்கு எதிரானது என உனக்கு நினை வூட்ட விரும்புகிறேன்''[84] என்று கண்டித்தபோது அவர் ட்ரொட்ஸ்கியவாதிகளின் தலையிலேயே ஆணியை இறுக்கியுள் ளார். இன்று லெனின், தலைவர் மாஓ, லு ஷுன் ஆகியோ ரின் இந்த கூற்றுகளை நாம் மீண்டும் படிக்கும்போது, அவை சோவியத் திரிபுவாதத் துரோகிகளின் இதயங்களை துளைத் துச் செல்லும் கூரிய ஈட்டி என நாம் உணரவில்லையா?

உலகம் பூராவும் மேலாதிக்க வல்லரசுகளுக்கு எதிராக அணிவகுத்து நிற்கும் சக்திகள் எல்லாம் தலைவர் மாஓ அவர் களின் மூன்று உலகங்களையும் வேறுபடுத்திக் காட்டும் தத் துவத்திற்கு பெரும் முக்கியத்துவம் அளிக்கின்றன. ஏன்? காரணம், முதலாவதாக, இந்த தத்துவம் சர்வதேச பாட் டாளி வர்க்கத்துக்கும் சோஷலிஸ நாடுகளின் மக்களுக்கும் பெரும் நம்பிக்கையை ஊட்டி, இன்றைய உலகின் மூன்று சக்திகளுக்கும்-நாம், நமது நண்பர்கள், நமது எதிரிகள் ஆகிய மூன்று சக்திகளுக்கும் இடையிலுள்ள பிரதான உறவுகளைத் தெளிவாகப் பார்க்க உதவி, ஏகாதிபத்தியத்துக்கும் மேலா திக்கவாதத்துக்கும் எதிரான போராட்டத்தில் அவர்களின் இறுதி வெற்றியையும், கம்யூனிஸத்தின் வெற்றியையும் மனக் கண் முன் காட்டுகின்றது. இரண்டாவதாக, இந்த தத்து வம் மூன்றாவது உலக நாடுகளுக்கும் மக்களுக்கும் பெரும் நம் பிக்கையை ஊட்டி, தமது சொந்த அசுர பலத்தை உணர்ந்து கொள்ளவும் அவர்களுக்கு உதவுகின்றது. தமது போராட் டத்தில் அவர்கள் சோஷலிஸ நாடுகளினதும் சர்வதேச பாட் டாளி வர்க்கத்தினதும் நிச்சயமான ஆதரவையும், முதலா வது இரண்டாவது உலக மக்களின் ஒருமைப்பாட்டையும் பெறுவது மட்டுமல்ல, இரண்டாவது உலக நாடுகளிடமி ருந்து ஓரளவு ஒத்துழைப்பைப் பெறவும், இரண்டு மேலா திக்க வல்லரசுகளுக்கும் இடையிலான முரண்பாடுகளை சாத கமாக பயன்படுத்தவும் கூட முடியும். மூன்றாவதாக, இந் தத் தத்துவம் முதலாவது, இரண்டாவது உலக மக்களுக்கு உயர்ந்த நம்பிக்கைகளை ஊட்டுவதோடு, இரண்டு வல்லரசு களின் ஆக்கிரமிப்பு அபாயத்தின் முன் அரசு இறைமையை யும் தேசிய வாழ்வையும் பாதுகாக்கப் பாடுபடும் இரண்டா

வது உலகின் அரசியல் சக்திகளுக்கும் ஒரு முன்னேற்றப் பாதையை காட்டுகின்றது. சுருக்கமாகச் சொன்னால், இந்த தத்துவம் சக்திவாய்ந்தது. ஏனென்றால், அது உலக அரசியலின் யதார்த்த நிலைமைகளுக்கு இசைவாக இருந்து, மனித குலத்தின் பிரகாசமான எதிர்காலத்துக்கும் ஒளியூட்டுகின்றது.

தலைவர் மாஓ எப்பொழுதும் சகல நாட்டு மக்கள் மீதும் உயர்ந்த நம்பிக்கை வைத்திருந்தார். ''பரந்துபட்ட சோவியத் பொது மக்களும் கட்சி உறுப்பினர்களும் ஊழியர்களும் நல்லவர்கள், அவர்கள் புரட்சியை விரும்புகின்றனர். திரிபுவாத ஆட்சி அங்கு நீண்ட காலம் நிலைத்திருக்க மாட்டாது''[85] என்று அவர் கூறினார். இன்னொரு தடவை அவர், ''நான் அமெரிக்க மக்கள் மீது அபார நம்பிக்கை வைத்திருக்கிறேன்''[86] என்று குறிப்பிட்டார். யப்பானிய மக்களைப் பற்றிக் கூறும்போது, ''போராட்டப் பாதை கர்ணகடூரமானதாக இருந்த போதிலும், யப்பானிய மக்களின் எதிர்காலம் பிரகாசமாய் இருக்கின்றது''[87] என்று அவர் சொன்னார், ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க பிரபலஸ்தர்கள் சிலருடன் உரையாடிய போது அவர் சுட்டிக்காட்டியதாவது:- ''நாம் எல்லோரும் ஒரே முன்னணியில் நிற்கிறோம். நாம் ஒருவருடன் ஒருவர் ஐக்கியப்படுவதும், ஒருவருக்கு ஒருவர் ஆதரவு அளிப்பதும் அவசியம்.'' ''அமெரிக்க மக்கள் உட்பட உலக மக்கள் அனைவரும் நமது நண்பர்கள்.''[88] உண்மையில் உலக மக்கள் என்று குறிப்பிடும்போது தலைவர் மாஓ முதலாவதாகவும், எல்லாவற்றுக்கு மேலாகவும் சர்வதேச பாட்டாளி வர்க்கத்தையே குறிப்பிட்டார்.

ஒரு நூற்றாண்டுக்கு மேலான காலத்துக்கு முன், உலக பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மாபெரும் ஆசிரியர்களாகிய மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரும் ''கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை''யில் ''முதலாளி வர்க்கம் எல்லாவற்றுக்கும் மேலாக அதன் சவக்குழி தோண்டிகளையே உற்பத்தி செய்கிறது''[89] என்று சுட்டிக்காட்டினார்கள். உலக யுத்தங்களை தோற்றுவிக்கும் முதலாளித்துவ அமைப்புக்கு சமாதிகட்டும் அதன் வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவதற்கு சர்வதேச பாட்டாளி வர்க்கம் அமெரிக்க சோவியத் மேலாதிக்க வாதிக

ளுக்கு எதிராக சர்வதேச ஐக்கிய முன்னணி ஒன்றை உரு வாக்கி. ஸ்திரப்படுத்தி விரிவாக்க தன்னால் இயன்ற தனைத் தையும் செய்து, அந்த ஐக்கிய முன்னணியில் அதன் கேந் திரப் பாத்திரத்தை பூரணமாக வகிக்க வேண்டும். மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இருவரும் கூறியதாவது:- ''கம்யூனிஸ்டுகள் தொழிலாளர் வர்க்கத்தின் உடனடி நோக்கங்களின் நிறைவேற் றத்துக்காக, அவர்களின் அப்போதைய நலன்களை வலியுறுத்து வதற்காக போரிடுகின்றனர். ஆனால் இன்றைய இயக்கத்தில் அவர்கள் எதிர்கால இயக்கத்தின் நலன்களையும் பிரதிநிதித்து வப் படுத்தி, கவனத்தில் கொள்கின்றனர்.''[90] மேலாதிக்கவா தத்துக்கு எதிரான உலகந் தழுவிய போராட்டத்தின் வெற் றியும், சோஷலிஸம், கம்யூனிஸத்துக்கான சர்வதேச போராட்டத்தின் வெற்றியும் அடிப்படை நலன்களைப் பொறுத்தவரையில் ஒரே மாதிரியானவை ஆகும் முதலாளித் துவம் உழுத்துப்போன, அழிந்து போகின்ற ஏகாதிபத்திய கட்டத்தை எட்டி விட்டது. தமது கரங்களிலிருந்து உதி ரம் சொட்டும் இரு மேலாதிக்க வல்லரசுகளும் உலகம் முழு வதிலும் தாமே வீசிய வலையில் விடுவிகக முடியாதபடி அகப்பட்டு விட்டார்கள். முதலாளி வர்க்கத்தின் சவக்குழி தோண்டிகளான சர்வதேச பாட்டாளி வர்க்கமும் அதன் நெருங்கிய நேச அணியான அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங் களும் மக்களும் தமது விலங்குகளை உடைத்தெறிந்து உலகம் முழுவதையும் வெற்றி சொள்ளும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

உலகப் பாட்டாளிகளே, ஒடுக்கப்பட்ட தேசங்களே, ஒன்று சேருங்கள்! இரு மேலாதிக்க வல்லரசுகளின் ஆக்கிர மிப்பு,, தலையீடு, கட்டுப்பாடு, கவிழ்ப்பு, இம்சை ஆகிய வற்றுக்கு உள்ளான எல்லா நாடுகளும் ஒன்று சேருங்கள்! வெற்றி சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய இரு மேலா திக்க வல்லரசுகளையும் எதிர்த்துப் போரிடும் உலக மக்க ளுக்கே உரியது!

★ ★ ★

# அடிக் குறிப்புகள்

1. லெனின், ''சுய-நிர்ணய தொகுப்புரை பற்றிய விவாதம்'', தொகுத்த படைப்புகள், தொகுதி 22.
2. ஸ்டாலின், ''லெனினிஸத்தின் அடிப்படைகள்'', படைப்புகள், தொகுதி 6.
3. மாஓசேதுங், ''அமெரிக்க ஏகாதிபத்திய நிறப்பாகு பாட்டுக்கு எதிரான ஆபிரிக்க-அமெரிக்கர்களின் நீதியான போராட்டத்தை ஆதரிக்கும் அறிக்கை'', 1963 ஆகஸட் 8.
4. மாஓசேதுங், ''யப்பானிய-எதிர்ப்பு ஐக்கிய முன்னணியில் இன்றைய தந்திரோபாயப் பிரச்சினைகள்'', தேர்ந்த படைப்புகள், தொகுதி 2.
5. லெனின், ''ஒன்பதாவது அகில ரஷிய சோவியத்துக்களின் மாநாடு'', தொகுத்த படைப்புகள் தொகுதி 33.
6. ஸ்டாலின், ''இரண்டு முகாம்கள்'', படைப்புகள், தொகுதி 4.
7. லெனின், கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ''தேசிய, காலனித்துவப் பிரச்சினைகள் பற்றிய ஆணைக்குழுவின் அறிக்கை'', தொகுத்த படைப்புகள், தொகுதி 31.
8. ஸ்டாலின், ''லெனினிஸத்தின் அடிப்படைகள்'', படைப்புகள், தொகுதி 6.
9. மார்க்ஸும், ஏங்கெல்ஸும், ''போலந்து பற்றி'', மார்க்ஸ், ஏங்கெல்ஸ் தொகுத்த படைப்புகள், தொகுதி 4.
10. மெயருக்கும் வொக்டுக்கும் மார்க்ஸ், 1870 ஏப்ரல் 9 மார்க்ஸ், ஏங்கெல்ஸ் தொகுத்த கடிதங்கள்.
11. லெனின், ''சுய-நிர்ணய தொகுப்புரை பற்றிய விவாதம்'', தொகுத்த படைப்புகள், தொகுதி 22.

12. ஏங்கெல்ஸ், ''ரஷிய ஜாரிஸத்தின் வெளிநாட்டுக் கொள்கை'', மார்க்ஸ், ஏங்கெல்ஸ் தொகுத்த படைப்புகள், தொகுதி 22.

13. லெனின், ''கார்ல் மார்க்ஸ் தத்துவத்தின் வரலாற்றுத் தலைவிதி'', தொகுத்த படைப்புகள், தொகுதி 18.

14. லெனின், மார்க்ஸிஸமும் ஏகாதிபத்திய பொருளாதார வாதமும் பற்றிய தொகுத்த படைப்புகள், தொகுதி 23.

15. லெனின், கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது மாநாட்டில் சமர்ப்பித்த ''சர்வதேச நிலைமையும், கம்யூனிஸ்ட் அகிலத்தின் அடிப்படைக் கடமைகளும் பற்றிய அறிக்கை'', தொகுத்த படைப்புகள், தொகுதி 31.

16. ஷை. ஷை.

17. ஷை. ஷை.

18. லெனின், ''குறைந்தவை சிறந்தவை, ஆனால் சிறந்தவை'', தொகுத்த படைப்புகள், தொகுதி 33.

19. சோவியத் சஞ்சிகை, ''வெளிவிவகாரங்கள்'', இல. 6., 1974.

20. ஸ்டாலின், ''லெனினிஸத்தின் அடிப்படைகள்'', படைப்புகள், தொகுதி 6.

21. ஸ்டாலின், சோ. க. கட்சி(பொ)யின் 15வது மாநாட்டில் சமர்ப்பித்த ''மத்திய கமிட்டியின் அரசியல் அறிக்கை'', படைப்புகள், தொகுதி 10.

22. ஷை. ஷை.

23. ஸ்டாலின், ''மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் 25வது ஆண்டு விழா'', பிராவ்டா, 7 நவ. 1942.

24. ஸ்டாலின், ''சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள்.''

25. மாஓசேதுங், ''புதிய ஜனநாயகம் பற்றி'', தேர்ந்த படைப்புகள், தொகுதி 2.

26. மாஓசேதுங், ''அமெரிக்க நிருபர் அன்னா லூயிஸ் ஸ்ட்ரோங்குடன் நடத்திய சம்பாஷணை'', தேர்ந்த படைப்புகள், தொகுதி 4.

27. மாஓசேதுங், ''மாகாண, மாநகர, சுயாட்சிப் பிரதேச கட்சிக் கமிட்டிகளின் காரியதரிசிகளின் மாநாட்டு உரை'', தேர்ந்த படைப்புகள், தொகுதி 5.

28. லெனின், ''புரட்சிகர பாட்டாளி வர்க்கமும், சுய-நிர்ணயத்துக்கான தேசங்களின் உரிமையும்'', தொகுத்த படைப்புகள், தொகுதி 21.

29. அமெரிக்க சஞ்சிகை ''அதிர்ஷ்டம்'', மே, ஜுலை இதழ்கள், 1977.

30. அமெரிக்க வர்த்தக இலாகா ''நடப்பு வியாபாரம் பற்றிய ஆராய்வு'', ஆகஸ்ட் 1977.

31. லெனின், ''ஏகாதிபத்தியம், முதலாளித்துவத்தின் அதி உச்சக் கட்டம்'', தொகுத்த படைப்புகள், தொகுதி 22.

32. ஜனாதிபதியின் சர்வதேச பொருளாதார அறிக்கை, ஜனவரி 1977.

33. அமெரிக்க வர்த்தக இலாகா, ''நடப்பு வியாபாரம் பற்றிய ஆய்வு'', ஆகஸ்ட் 1977.

34. ஜம்மு வார சஞ்சிகை ''ஜட்-ஏ-ஜெஹாட்'' டிசம்பர் 1973, பிரிட்டனிலுள்ள இந்திய தொழிலாளர் சங்கத்தால் 1974 ஏப்ரலில் வெளியிடப்பட்ட ''இன்றைய இந்தியா.''

35. 1970-76 ''சோவியத் வெளிநாட்டு வர்த்தகத்தின் புள்ளி விபரங்கள்'' பார்க்கவும்.

36. லெ மொன்ட், ஏப்ரல், 1974.

37. அமெரிக்க சஞ்சிகை, ''பண முகாமைத்துவம்'', 14, ஏப்ரல் 1974.

38. ஓ. போகொமொலோவின் உரை, சமாதானமும் சோஷலிஸமும் பற்றிய பிரச்சினைகள், (உலக மார்க்ஸிஸ நோக்கு) இல. 6, 1974.

39. அமெரிக்க செய்தியும், உலகத் தகவலும், 1, ஆகஸ்ட், 1977.

40. லெனின், ''சோஷலிஸமும் யுத்தமும்'', தொகுத்த படைப்புகள், தொகுதி 21.
41. லெனின், ''யுத்தமும் புரட்சியும்'', தொகுத்த படைப்புகள், தொகுதி 24.
42. ''ஏகாதிபத்தியமும் சோஸலிஸத்தில் பிளவும்,' தொகுத்த படைப்புகள், தொகுதி 23;
43. சோவியத் விஞ்ஞான கழகத்தின் 250-வது ஆண்டு விழாக் கூட்டத்தில் பிரெஸ்னேவ் ஆற்றிய உரை, 1975 அக்டோபர் 7.
44. பிரெஸ்னேவ், சோவியத் க. க. 25-வது மாநாட்டு உரை.
45. லண்டன் யுத்த தந்திர ஆய்வுகளுக்கான சர்வதேச கழகம் வெளியிட்ட ''1977 - 78 ராணுவ சநிலை'' பார்க்கவும்.
46. ஷி, ஷி.
47. சொகொயொவ்ஸ்கி, ''ராணுவ யுத்த தந்திரம்''.
48. லெனின், ''சோஷலிஸமும் யுத்தமும்,'' தொகுத்த படைப்புகள், தொகுதி 21.
49. ஸ்டாலின் ''யூகோஸ்லாவியாவில் தேசிய பிரச்சினை பற்றி'', படைப்புகள், தொகுதி 7.
50. மாஓசேதுங் ''சீனப்புரட்சியும் சீன கம்யூனிஸ்ட் கட்சியும்'', தேர்ந்த படைப்புகள், தொகுதி 2.
51. தலைவர் மாஓவின் 1974 பெப்ரவரி சம்பாஷணையிலிருந்து.
52. மாஓ சேதுங், ''டாக்டர் சுன் யட் ஸன் நினைவை ஒட்டி'' தேர்ந்த படைப்புகள் தொகுதி 5.
53. 1956 ஏப்ரலில் சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி அரசியல் குழுவின் விஸ்தரிக்கப்பட்ட மாநாட்டில் தலைவர் மாஓசேதுங் ஆற்றிய உரை.
54. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 10-வது தேசிய மாநாட்டு அறிக்கையில் தோழர் சோ என் லாயின் மேற்கோள்.

55. 1960 மே 7-ல் 12 ஆபிரிக்க நாடுகள் பிராந்தியங்களின் பிரபலஸ்தர்கள், பிரதிநிதிகளுக்கு அளித்த வரவேற்பில் தலைவர் மாஓவின் உரை.

56. அக்டோபர், 1970-ல் தலைவர் மாஓவின் உரையிலிருந்து.

57. ''சோஷலிஸ சந்தையில் விலைவாசி அமைப்பில் சில பிரச்சினைகள்,'' ''சர்வதேச உறவுகள்,'' பல்கேரிய மும்மாத இதழ், 1974, இல. 4.

58. ''உற்பத்தியின் சர்வதேச சோஷலிஸ உறவுகளும், உழைப்புக்கேற்ற பங்கீட்டுக் கோட்பாடும்,'' பொருளாதார சிந்தனைகள்,'' பல்கேரிய சஞ்சிகை, 1975 இல. 8.

59. ''பொருளாதார ஒன்றிணைப்புக்கான பாதையில் பரஸ்பர பொருளாதார உதவி கமிஷன் நாடுகள்,'' ஹங்கேரிய சஞ்சிகை, ''பொருளியல் நோக்கு,'' 1974 இல 9.

60. ''பரஸ்பர பொருளாதார உதவிகமிஷன் நாடுகளின் ஆழமாகிவரும் சோஷலிஸ பொருளாதார ஒன்றிணைப்பின் தத்துவப் பிரச்சினைகள்,'' ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு இதழ் ''பொருளாதார விஞ்ஞானம்,'' 1977 இல. 4.

61. ஷை, ஷை.

62. மாஓ சேதுங், ''கொள்கை பற்றி,'' தேர்ந்த படைப்புகள், தொகுதி 2.

63. ஏங்கெல்ஸ், ''ஜெர்மனியில் சோஷலிஸம்,'' மார்க்ஸ், ஏங்கெல்ஸ் தொகுத்த படைப்புகள், தொகுதி 22.

64. பபெலுக்கு ஏங்கெல்ஸ் 13, அக்டோபர் 1891, மார்க்ஸ், ஏங்கெல்ஸ் தொகுத்த படைப்புகள், தொகுதி 38.

65. ''1916 டிஸம்பர் 18, 23, 25-ந் தேதிகளில் இனெஸா ஆர்மாண்டுக்கு லெனினின் மூன்று கடிதங்கள்'' பார்க்க, தொகுத்த படைப்புகள், தொகுதி 35.

66. லெனின், ''ஜூனியஸ் பிரசுரம்'' தொகுத்த படைப்பு கள், தொகுதி 22.

67. லெனின், ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச் சக் கட்டம்,'' தொகுத்த படைப்புகள், தொகுதி 22.

68. லெனின், ''போறிஸ் சுவாரினுக்கு ஒரு பகிரங்கக் கடி தம்'', தொகுத்த படைப்புகள், தொகுதி 23.

69. 1973 செப்டம்பரில் தலைவர் மாஓவின் உரை. 1973 நவம்பர், 1975 ஏப்ரல் உரைகளிலும் இவை குறிப்பி டப்பட்டுள்ளன.

70. ''பபெலுக்கு ஏங்கெல்ஸ்'' செப். 29, அக். 1, 1891'', மார்க்ஸ் ஏங்கெல்ஸ் தொகுத்த படைப்புகள், தொகுதி 38.

71. மாஓ சேதுங், ''மக்கள் மத்தியில் முரண்பாடுகளை சரி யாக கையாள்வதுபற்றி.'' தேர்ந்த படைப்புகள், தொகுதி 5.

72. லெனின் ''மார்க்ஸிஸமும் ஏகாதிபத்திய பொருளதார வாதமும் பற்றிய தொகுத்த படைப்புகள், தொகுதி 23.

73. தலைவர் மாஓ, 1974 பெப்ரவரி உரை.

74. ஷை, ஷை.

75. தலைவர் மாஓ 1964 ஜனவரி உரை.

76. தலைவர் மாஓ 1975 அக்டோபர் உரை.

77. தலைவர் மாஓ 1975 செப்டம்பர் உரை.

78. தலைவர் மாஓ 1974 மே உரை.

79. மாஓ சேதுங், ''மக்கள் மத்தியில் முரண்பாடுகளை சரி யாக கையாள்வதுபற்றி,'' தேர்ந்த படைப்புகள், தொகுதி 5.

80. தலைவர் மாஓ அல்பேனிய தலைவர்களுக்கு அனுப்பிய தந்தி, 17 செப், 1968.

81. லெனின், ''இடதுசாரி-கம்யூனிஸம், ஒரு சிறு பிள்ளை வாத நோய்,'' தொகுத்த படைப்புகள், தொகுதி 31.

82. சோவியத் சஞ்சிகை ''கொம்யூனிஸ்ட்'' 1975, இதழ் 12.

83. மாஓ சேதுங், ''ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக் கெதிரான தந்திரோபாயங்கள் பற்றி,'' தேர்ந்த படைப்புகள், தொகுதி 1.

84. லூஷுன், ''ட்ரொஸ்கியவாதிகளின் கடிதத்துக்குப் பதில்,'' தொகுத்த படைப்புகள், தொகுதி 6.

85. 1962, ஜனவரி 30-ல், சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி வேலை மாநாட்டின் விஸ்தரிக்கப்பட்ட கூட்டத்தில் தலைவர் மாஓவின் உரை.

86. 1970 டிசம்பரில் தலைவர் மாஓவின் உரை.

87. ஜப்பானிய நண்பர்களுடன் தலைவர் மாஓவின் சம்பாஷணை, மக்கள் தினசரி 1961 அக். 8.

88. 14 லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க நாடுகள், பிராந்தியங்களின் தொழிற்சங்க, மாதர் சங்க பிரதிநிதிகள், பிரதிநிதிக் கோஷ்டிகளுடன் தலைவர் மாஓவின் உரை, மக்கள் தினசரி, 1961 மே 4.

89. மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ''கம்யூனிஸ்ட் அறிக்கை'' மார்க்ஸ், ஏங்கெல்ஸ் தொகுத்த படைப்புகள், தொகுதி 4.

90. ஷை, ஷை.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 72 | 9 | மேலாதிக்க வாதத்துக்கும் | மேலாதிக்க வாதத்துக்கு |
| 73 | 7 | நெருக்கடிகன் | நெருக்கடிகள் |
| 73 | 13 | விடும. | விடும். |
| 74 | 18 | அபிலாட்சை | அபிலாசை |
| 75 | 27 | உலசு | உலகு |
| 78 | 24 | ஏகாதிதேத்தியவாதி | ஏகாதிபத்தியவாதி |
| 78 | 27 | கண்டிக்கப் | தண்டிக்கப் |
| 79 | 22 | ஒட்டம் | ஒட்டம் |
| 79 | 22 | மாஓவின் | மாஓவின் |
| 79 | 31 | மூன்னணியை | முன்னணியை |
| 80 | 12 | பெதுவாக | பொதுவாக |
| 80 | 13 | நவின | நவீன |
| 84 | 18 | விடுவிகக | விடுவிக்க |
| 84 | 22 | சொள்ளும் | கொள்ளும் |
| 85 | 5 | மாஓசேதுங் | மாஓசேதுங் |
| 88 | 13 | சநிலே | சமநிலே |
| 88 | 23 | மாஓவின் | மாஓவின் |
| 88 | 23 | சம்பாஷனே | சம்பாஷணே |
| 88 | 26 | ஓட்டி | ஒட்டி |
| 89 | 13 | ஒன்றினேப்புக்கான | ஒன்றிணேப்புக்கான |
| 89 | 18 | ஒன்றினேப் | ஒன்றிணேப் |
| 89 | 23 | மடைப் | படைப் |
| 89 | 31 | பார்ச்க | பார்க்க |
| 90 | 13 | மாஓசேதுங் | மாஓசேதுங் |
| 91 | 1 | மாஓசேதுங் | மாஓசேதுங் |
| 91 | 11 | ஷனே | ஷணே |
| 91 | 12 | பிராந்தி | பிராந்தி |

# மூன்று உலகங்கள் பற்றி...

"எனது கருத்தில், அமெரிக்காவும், சோவியத் யூனியனும் முதலாவது உலகமாக அமைகின்றன. ஜப்பான், ஐரோப்பா, கனடா முதலியவற்றைக் கொண்ட மத்திய பிரிவு இரண்டாவது உலகமாகும். நாம் மூன்றாவது உலகமாக விளங்குகின்றோம்."

"மூன்றாவது உலகம் ஒரு பிரமாண்டமான ஜனத்தொகையை உடையது. யப்பான் தவிர்ந்த ஆசியா மூன்றாம் உலகைச் சார்ந்தது. ஆபிரிக்கா முழுவதும், லத்தீன் அமெரிக்காவும் கூட மூன்றாம் உலகை சார்ந்தவையே."

- 1974ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் மூன்றாவது உலக நாட்டு தலைவர் ஒருவருடனான உரையாடலின் போது தலைவர் மாஓ